# உதயன்

பக்கங்கள்
யாழ். - 30/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 320 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 26, ஞாயிறு 12.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுக்கம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



இந்தியாவிடம் சரணடைந்த மே.தீவுகள்
பக்கம் 27

# பொது வேட்பாளர் நானே

## ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்



கொழும்பு, ஒக்ரோபர் 12
எதிர்க்கட்சிகள் என்ன சொன்னாலும் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையில் இருக்கக் கூடிய அரசியல் கட்சிகளில் பல தன்னையே ஆதரிப்பதால் தானே பொது வேட்பாளர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொல்ஹாவெலவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தாமே பொது வேட்பாளர்கள் என்று கூறிவருகின்றனர். உண்மையில் அவர்கள் பொது வேட்பாளர்கள் இல்லை. அவர்கள் அந்தந்தக் கட்சிகளின் தனித்துவமான வேட்பாளர்களே.ஆனால் இலங்கை அரசியலில் எமது கட்சியுடனேயே அதிகமான அரசியல் கட்சிகள் இணைந்துள்ளன. எனவே நானே பொது வேட்பாளர் என்ற தகைமை உடையவன். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் மூன்றாவது தடவையாகப் போட்டியிடுவேன். எதிர்க்கட்சிகள் என்னதான் காரணம் கூறினாலும் அவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை. ஆனால் எமக்கு மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு இருக்கிறது. தேர்தலில் நாமே வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

கடந்த அரசுகள் அபிவிருத்தி பற்றி பேசி வந்தன. ஆனால் நாம் அபிவிருத்தியைச் செய்தி

25 ஆம் பக்கம் பார்க்க


இன்று சிறப்பான சூரியகாந்தி
பிரதிக்கு முந்துங்கள்...


## யாழில் 11 நாளில் 29 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஒக். 12
இந்த மாதம் நேற்று வரையான 11 நாள்களில் 29 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணத்திலேயே இந்த எண்ணிக்கை காணப்படுகிறது. கடந்த மாதம் 95 பேருக்கு யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. அவ்வாறே மன்னாரிலும் இந்த மாதம் முதல் 11 நாளில் 11 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் இது 40 ஆகப் பதிவாகியுள்ளது. வடக்கில் இரண்டு மாவட்டங்களிலுமே இந்த அதிகரிப்புக் காணப்படுகிறது என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## 7 பொதுமக்கள், 5 படையினர் கிளிநொச்சி விபத்தில் காயம்



கிளிநொச்சி, ஒக்.12
கிளிநொச்சிநகரில்நேற்று இடம்பெற்ற விபத்தில்7 பொது மக்களும் 5 இராணுவத்தினரும் காயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் உருத்திரபுரம் பயணிப்பதற்காக பஸ் வீதியைக் கடந்த போது எதிரே வந்த இராணுவத்தினர் பயணித்த ஹன்ரர்

25 ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக்கு இன்று வருகிறார் மஹிந்த

யாழ்ப்பாணம், ஒக். 12
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை வடக்குக்கு வருகை தரவுள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளில் அவர் பங்கெடுக்கவுள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு இரணைமடு விமான நிலையத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வந்தடைவார். இரணைமடுச் சந்தியிலுள்ள நெலும்பியசவில் வைத்து, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு வழங்கும் நிகழ்வில் முற்பகல் 10 மணிக்கு பங்கேற்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து 10.50 மணிக்குக் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வைத்து காணி உறுதிப் பத்திரம் வழங்குவார்.

25 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் வருகையை தமிழர் புறக்கணிக்கவேண்டும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 12
ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளில் மக்கள் அடிபணிந்து அச்சப்பட்டுப் பங்குபற்றத் தேவையில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளைப் புறக்கணிப்பதோடு தமிழ் மக்களையும் புறக்கணிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராசா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தமிழ் மக்களுடைய ஜனநாயகத் தீர்ப்புக்களைப் புறக்கணித்து

25 ஆம் பக்கம் பார்க்க

## சிங்கக் கொடி பிடிக்குமாறு சிறுவர்களுக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பளையிலிருந்து ரயில் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு வரும் போது, ரயில் பாதைக்கு அருகில் நின்று தேசியக் கொடியான சிங்கக் கொடியை பிடித்துப் பாடசாலை சிறுவர்கள் ஜனாதிபதிக்குக் காட்டவேண்டும் என்று அதிகாரிகளினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான யாழ்தேவி ரயில் சேவை நாளை திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதன் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் பளையிலிருந்து ரயிலில் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். கொடிகாமம் ரயில்

25 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலையில் மலர் வளையம்

யாழ்ப்பாணம், ஒக். 12
யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முதலாவது பேரவைக் கூட்டம் ஆரம்பமான நிலையில் பதிவாளர் அலுவலகத்தின் முன்பாக இனந்தெரியாதவர்களால் மலர் வளையம் வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு என்று எழுதப்பட்ட வாசகமும் அதில் பொறிக்கப்பட்டுள்ளது. அதனை யார் வைத்தார்கள் என்பது அங்குள்ள எவருக்கும் தெரியாதுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவை

25 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதிக்காக நுளம்பு ஒழிப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.12
ஜனாதிபதியின் யாழ். பயணத்தை முன்னிட்டுச் சுகாதாரப் பகுதியினர் முற்றவெளிப் பிரதேசத்தில் நேற்றிரவு நுளம்பை ஒழிப்பதற்காகப் புகையூட்டும் பணி நடைபெற்றது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தைச் சூழ உள்ள பகுதியில் இந்தப் புகையூட்டும் பணிகள்

25 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண மீனவர்கள் மஹிந்தவுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12
இந்திய மீனவர்களின் வருகை மற்றும் மாவட்ட ரீதியில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாணத்தின் 4 மாவட்டங்களையும் சேர்ந்த மீனவர் பிரதிநிதிகள் நாளை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளனர்.

மாவட்ட ரீதியாக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கடற்றொழில்

25 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண மக்கள் இனி சந்தோசமாக இருக்கலாம்

### ரயில் திணைக்களப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்.ஒக்.12
யாழ்தேவி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வடக்கு மக்கள் இனிச் சந்தோசமாக இருக்கலாம். போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளது. என்று ரயில் திணைக்களத்தின் வடமாகாணப் பணிப்பாளர் ஆரியரத்ன அத்துகல தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கான பரீட்சார்த்த ரயில் சேவை மற்றும்

25 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியை முற்றுகையிடும் 400 பஸ்கள்

யாழ்ப்பாணம், ஒக். 12
ஜனாதிபதி மஹிந்தவின் நிகழ்வில் பங்கெடுப்பதற்காக பொது மக்களை ஏற்றிய 400 பஸ்கள் கிளிநொச்சிக்கு இன்று செல்லவுள்ளன. இதற்குரிய ஏற்பாடுகள் கொழும்பு அரசினால் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வைத்து 20 ஆயிரம் பேருக்குக் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. இதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 3 ஆயிரத்து 886 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 3 ஆயிரத்து 642 பேருக்கும், மன்னார்மாவட்டத்தைச் சேர்ந்த 7 ஆயிரத்து 202 பேருக்கும், வவுனியா மாவட்டத்தைச்

25 ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரனை தனியே சந்தித்த நாள்கள் மறக்க முடியாதவை

### சுவிஸில் கூறினார் மாவை

பேர்ன், ஒக். 12

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரனைத் தனியாகச் சந்தித்த வரலாற்று நாள்களை என்னால் ஒரு போதும் மறக்க முடியவில்லை. எல்லாவற்றையும் என்னால் இப்போது கூறமுடியாது.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

எமது இலக்கு தமிழரின் சொந்த மண்ணான வடக்கு - கிழக்கில் தமிழரின் ஆட்சியை நிறுவுவதே என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவுக்கு சுவிஸ் துர்க்கா கலை, கலாசார மன்ற வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை சிறப்பான வரவேற்பும் கௌரவிப்பும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் இரா. துரைரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுடர்ஒளியின் சகோதரப் பத்திரிகையான உதயனின் முன்னாள் செய்தி ஆசிரியரும் மூத்த ஊடகவியலாளருமான ஞா. குகநாதன், அரசியல் ஆர்வலர்கள் மற்றும் புலம் பெயர் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த)

## வடக்கு மாகாணத்தில் இம்முறை 2,65,400 பனம் விதைகள் நடுகை

### பனை அபிவிருத்திச் சபை விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.12

வடக்கு மாகாணத்தில் இம்முறை 2 லட்சத்து 65 ஆயிரத்து 400 பனம் விதைகள் மற்றும் நாற்றுகள் நடுகை செய்யப்படவுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போது மழை பெய்ய ஆரம்பத்தை அடுத்து ஒக்ரோபர் மாதத்தின் முதல் வாரத்தில் பனம் விதைகள், நாற்றுக் கள் நடுகை செய்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் மாதத்திலேயே இவை நடுகை செய்ய ஆரம்பிப்பதால் இந்த மாதத்தைப் பனம் விதை, நாற்றுகள் நடுகை செய்யும் மாதமாகச் சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 2 லட்சத்து 65 ஆயிரத்து 400 பனம் விதைகள், நாற்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன.

இதில் 2 லட்சத்து 54ஆயிரத்து 200 விதைகளும், 11ஆயிரத்து 200 நாற்றுக்களும் நடுகை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 72 ஆயிரம் விதைகளும், ஆயிரத்து 500 நாற்றுக்களும் நடுகை செய்யப்படும். கிளிநொச்சியில் 50 ஆயிரம் விதைகளும் 3ஆயிரத்து 500 நாற்றுக்களும், முல்லைத்தீவில் 74 ஆயிரம் விதைகளும், ஆயிரத்து 500 நாற்றுக்களும், வவுனியாவில் 46 ஆயிரம் விதைகளும், 2ஆயிரத்து 500 நாற்றுக்களும், மன்னாரில் 12 ஆயிரத்து 200 விதைகளும், 2ஆயிரத்து 200 நாற்றுக்களும் நடுகை செய்யப்படும்.

அதனைவிட அனுராதபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம், குருநாகல் போன்ற பிரதேசங்களிலும் பனம் விதைகள், நாற்றுக்கள் என்பன நடுகை செய்யப்படவுள்ளன.

இந்த முறை பனம் நாற்றுக்கள், விதைகள் போன்றவை சபையின் சிறுசுவடுகள் அமைப்பைச் சேர்ந்த பயனாளிகள் மற்றும் உறுப்பினர்களின் உதவியுடன் நடுகை செய்யப்பட்டுப் பாதுகாக்கப்படும்.

பாடசாலை வளாகம் மற்றும் பொது இடங்களில் இவற்றை இம்முறை நடுகை செய்வதற்குச் சபை ஆலோசித்து வருகின்றது - என்றார்.

கடந்த காலங்களில் பனம் விதைகள், நாற்றுகள் போன்றவற்றை நடுகை செய்தும் மக்கள் அவற்றை உரிய முறையில் பேணிப் பாதுகாக்கத் தவறிவிட்டனர்.

அதனால் இம்முறை இவற்றைச் சிறப்பான முறையில் பராமரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## கொடிகாமம் சந்தைக்குள் இரண்டு கடைகள் தீக்கிரை

### சந்தேகத்தில் நால்வர் கைது



சாவகச்சேரி, ஒக் 12

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடாநாட்டுக்கான பயணத்துக்காகப் பெரும் எண்ணிக்கையான படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ள நிலையில் கொடிகாமம் சந்தைக்குள் அமைந்துள்ள நான்கு கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

புடைவைக் கடை, மணிக் கடை, பாய் விற்பனைக் கடை, பானை சட்டிக் கடை ஆகியவையே நேற்றுமுன்தினம் இரவு விசமிகளால் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நான்கு கடைகளுக்குள்ளும் இருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன. பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சந்தையில் இரண்டு காவலாளிகள் கடமையில் இருந்த போதிலும் சம்பவத்தின்போது தாம் தூக்கத்தில் இருந்ததாக அவர்கள் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நால்வரைக் கொடிகாமம் பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

நள்ளிரவு தீப்பற்றி எரிவதாகக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் பௌசரில் தண்ணீர் கொண்டு வந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஏனைய கடைகளுக்கு தீ பரவாமல் தடுத்தாகத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய மாகாணத்திலிருந்து வந்து கொடிகாமம் சந்தையில் புடைவை அங்காடி வியாபாரம் செய்யும் ஒருவர் தமது பொருள்களை எரிக்கப்பட்ட கடையொன்றில் வைப்பதாகவும், குறித்த கடை உரிமையாளருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும் கூறப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் கொடிகாமம் பகுதியில் பெருமளவான பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் இவ்வாறான தீ வைப்புச் சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடைகள் எரிக்கப்பட்டுள்ளமை குறித்து பிரதேச சபையின் உப தலைவர் சி.யோகராஜா கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். காலையில் கடைகள் தீக்கிரையான சம்பவத்தை அறிந்த உப தலைவர் மற்றும் உறுப்பினர்களான இ. தெய்வேந்திரம்பிள்ளை, க. அசோகலிங்கம் ஆகியோர் சம்பவ இடத்தைப் பார்வையிட்ட பின் னர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (த-9)

## வல்லிபுரம் தர்மகர்த்தா சபையின் உறுப்பினரைக் கொல்ல முயற்சி

### பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு

வடமராட்சி, ஒக், 12

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் தர்மகர்த்தா சபை உறுப்பினர் செ. கேசவானந்தம் (வயது - 64) நேற்று மாலை 4 மணியளவில் தன்னை இனந்தெரியாதோர் தாக்கி கொலை செய்ய முயற்சித்ததாகப் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

புலோலி ஆனை விழுந்தான் சந்தியில் சென்று கொண்டிருந்த போது தன்னை வழிமறித்த இனந்தெரியாதோர் மோசமாகத் தாக்கியதுடன் வாளால் வெட்ட முயற்சித்ததாகவும், அந்த வழியால் வாகனம் ஒன்று வந்ததையடுத்து தாக்குதல் நடத்தியவர்கள் தப்பியோடி விட்டதாகவும் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

தாக்குதல் முயற்சியில் இருந்து தப்பிய அவர் வீதியால் வந்த வாகனத்தை மறித்து அதில் ஏறிப் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்ததாகத் தெரிவித்தார்.

தாக்கப்பட்டதனால் அவரது பற்கள் உடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தன்னை மணிதரன் என்பவரது குழுவினரே தாக்கியிருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (த-109-173-108)

Ceylinco Insurance PLC PQ 24

பதவி வெற்றிடம்

Ceylinco VIP on the spot இல்.....

கிளை: யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம்

வயது எல்லை: 20-24

பால்: ஆண்

தகைமை: A/L

குறிப்பு: உத்தியோகத்தர்கள் மேற்படி கிளைகளுக்கு அருகில் வசிப்பது விரும்பத்தக்கது.

நேர்முகத்தேர்வு நடைபெறும் காலம்:

13.10.2014
9.00am

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:

யாழ்ப்பாணம் Ceylinco VIP
173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/16871)(4.3.6) 021 222 6257

## ஈயத் தொழிற்சாலையில் இரவு வெடிப்புச் சம்பவம்

### பதற்றமடைந்த ஓமந்தை மக்கள்

வவுனியா, ஒக்.12

வவுனியா ஓமந்தைப் பகுதியில் தொழில்சாலையொன்றில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட வெடிப்புச் சத்தத்தினால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது

ஓமந்தை வேப்பங்குளப் பகுதியில் உள்ள ஈயத்தொழில்சாலையில் பழைய பற்றரிகளை இரவு 10 மணியளவில் கிடங்கு ஒன்றினுள் போட்டு எரித்துள்ளனர்.

இதன்போது பற்றரிகள் பெரும் சத்தத்துடன் வெடித்துள்ளன. வெடிப்புச் சத்தம் துப்பாக்கிச் சத்தம் போல் 20 நிமிடங்கள் வரை கேட்டது.

இதனால் அந்தப் பகுதி மக்கள் அச்சமடைந்தனர். ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் உள்ள பொலிஸாரும் அச்சம் கொண்டனர்.

சிறிது நேரத்தில் தொழிற்சாலையில் புகை மண்டலம் தென்பட்டது இதனையடுத்து குறிப்பிட்ட பகுதிக்குப் பொலிஸார் விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இது தொடர்பாகக் குறித்த தொழில்சாலையைச் சேர்ந்தோருக்கு எச்சரிக்கை செய்தனர்.

இரவு முழுவதும் இப்பகுதி மக்கள் அச்ச நிலையில் இருந்தனர்.

நேற்றுக் காலையே நடந்த சம்பவம் வெளியே தெரியவந்தது. (த-402)

## விபத்தில் இளைஞர் படுகாயம்

வவுனியா, ஒக். 12

வவுனியா குருமன்காட்டு சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இளைஞன் ஒருவன் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் குருமன்காட்டுச் சந்தியில் கிளினிக் முன்பாக டிராக்டரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த வவுனியா கூமாக்குளப் பகுதியைச் சேர்ந்த எஸ்.முரளி (வயது - 35) என்பவர் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (த-421)

## குழு மோதல்கள் தொடர்பில் சுன்னாகத்தில் 6 பேர் கைது

வலி. வடக்கு, ஒக்.12

சுன்னாகம் ஐயனார் கோவில் பகுதியில் இளைஞர் குழுக்களுக்கு இடையே நடைபெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரினால் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு நாள்களாக இந்தப் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையே மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் ஓட்டோ, மோட்டார் சைக்கிள்கள் என்பனவும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார் 6 பேரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதுடன் குறிப்பிட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என நம்பப்படும் மேலும் சிலரைத் தேடி வருகின்றனர். (த-86)

# தமிழரின் மண் உரிமைப் போராட்டத்துக்கு சிங்கள சகோதரர்களின் ஆதரவு வேண்டும்

## வடக்கு மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் கோரிக்கை

கிளிநொச்சி,ஒக்.12

விதை உரிமைப் போராட்டத்துக்காக குரல் கொடுக்கின்ற எங்களுடைய சிங்கள சகோதரர்கள் எங்களுடைய மண் உரிமைப் போராட்டத்துக்கும் தங்களுடைய குரலை எங்களுக்கு ஆதரவாக எழுப்ப வேண்டும் என வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு திருமுறிகண்டியில் நேற்று முற்பகல் 9.00 மணியளவில் விதை மற்றும் உணவுத் தன்னாதிக்கத்தை எதிர்க்கும் நோக்கில் விதை உரிமையினைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தேசிய அமைப்பினால் தென்னிலங்கையை நோக்கி தொடங்கப்பட்ட பாதயாத்திரை நிகழ்வின் தொடக்கத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மண்ணை இழந்தவலி எங்களுக்குத் தெரியும். எங்களுடைய நிலங்களை அரசு தன்னுடைய படைகள் மூலம் அபகரித்துவைத்துள்ளது. இப்போது விதை பாதுகாப்பு சட்டம் என்ற பெயரில் சில திருத்தங்களை மேற்கொண்டு எங்களுடைய பாரம்பரிய விதைகளை அபகரித்துப் பண்பாட்டு நிறுவனாங்களிடம் கையளிப்பதற்கான சூழ்ச்சியில் இறங்கியுள்ளது. அரசின் இந்தச் சதி முயற்சிக்கு எதிராக தமிழ், சிங்களம், இஸ்லாம் என்ற இன வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு அரசை எதிர்ப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

விதைகள் என்பது தனிநபர் ஒருவருடைய சொத்தல்ல. இயற்கை எமக்கு வழங்கிய பாரம்பரிய சொத்து. ஆனால் பண்பாட்டு நிறுவனங்கள் சில மரபணுமாற்றங்களைச்செய்து அவற்றிற்கான காப்புரிமையினைப் பெற்று தங்களுடைய விதைகளாக மாற்றிவருகின்றன. அவற்றின் விலைகளையும் அந்த நிறுவனாங்களே தீர்மானிக்கின்றன.



விதைகளை வாங்கி நாம் விளைவிக்கின்றபோது பெரும்பாலான பணத்தினைக் கிருமிநாசினிக்கு என்றும் உரங்களுக்கு என்றும் செலவிடுகின்றோம். பண்பாட்டு நிறுவனங்கள் முன்னெடுத்த பசுமை புரட்சிதான் நாம் நோய்வாய்ப்பட்டவர்களாக மாறியிருப்பதுக்கு காரணமாகவிருக்கின்றது. இயற்கைப் பூச்சிகளின் தாக்கங்களை எதிர்க்கக்கூடிய வரட்சியினை தாக்குப் பிடிக்கக்கூடிய மழைவெள்ளம் ஏற்பட்டாலும் விளைச்சலைத் தரக்கூடிய ஏராளமான விதைகள் எங்களிடமிருந்தன. ஆனால் கலப்பினங்களின் வருகையுடன் அவற்றினைத் தொலைத்துவிட்டோம். கோவிலின் கலசங்களில் விதைகள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும். இயற்கை இடர்கள் ஏற்பட்டு பயிர்கள் அழிகின்றபோது கோவில் கலசங்களில் உள்ள விதைகள் பயிர்ச்செய்கைக்கு பயன்பட்டிருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள், தென்னிலங்கையின் மதகுருமார்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வில் திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் பூசைகள் நடைபெற்று பின்பு பாதையாத்திரை தொடர்பான கூட்டம் நடைபெற்று பாதையாத்திரை தொடங்கியது.

வவுனியா வழியாக எதிர்வரும் 15ஆம் திகதி இவ் யாத்திரை கொழும்பைச் சென்றடையும். மட்டக்களப்பிலும் அம்பாந்தோட்டையிலுமிருந்தும் கொழும்பை நோக்கி இவ்வாறான பாதையாத்திரைகள் தொடங்கியுள்ளன. திருமுறிகண்டியில் நடைபெற்ற நிகழ்வில் தூய விதைகள் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டன. (த-18)

## பட்டப் பகலில் வீடு உடைத்து தங்க நகைகள், பணம் திருட்டு

கிளிநொச்சி, ஒக்.12

பரந்தனில் பட்டப்பகலில் வீடு உடைத்துப் பணம், தங்க நகை என்பன திருடப்பட்டுள்ளன.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் உண்டியல் ஒழுங்கைப் பகுதியில் ஆசிரியர் ஒருவர் வீட்டில் நேற்றுமுன்தினம் நண்பகல் நேரத்தில் வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த இரண்டரைப் பவுண் நகை, 20 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம், வங்கிக் கணக்குப் புத்தகம் என்பன திருடப்பட்டுள்ளன.

குறித்த வீட்டின் உரிமையாளரான ஆசிரியர் பாடசாலை சென்ற சமயம் குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம்தொடர்பாகக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதே போன்று கடந்த 10 நாள்களுக்கு முன்னரும் பட்டப்பகலில் இரு வீடுகளில் திருட்டு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-55)



உலக கை கழுவுதல் தினத்தை முன்னிட்டு யாழ்.நகர் ரிம்மர் முன்பள்ளி மாணவர்களுக்குக் கை கழுவுதல் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடு ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. யாழ். மாநகர சபையின் பெரியகடை பிரதேசப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர். பி.ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெற்ற கை கழுவுதல் செயற்பாட்டில் மாநகர வைத்திய அதிகாரி மருத்துவர் யசீதரன், மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-17)

# வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் அமளி துமளி

## வாய்த் தர்க்கம் மோதல் நிலை வரை சென்றது

வலி.தென்மேற்கு, ஒக் 12

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் ஆரம்பத்திலிருந்து முடியும் வரை அமளி துமளியுடன் நடைபெற்றது. ஆளும் கட்சி உறுப்பினருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களால் கூட்ட மண்டபம் அல்லோலகல்லோலப்பட்டது. உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கட்டு மீறிச் சென்றதினால் மூன்று தடவைகள் கைகலப்பு ஏற்படும் நிலைமை ஏற்பட்டது.

சக உறுப்பினர்களின் மத்தியில் ஏற்பட்ட கருத்து மோதலைத் தடுத்து நிறுத்த முடியாமல் திண்டாடிய தவிசாளர் கூட்டத்தை 15 நிமிடங்கள் ஒத்தி வைத்து மண்டபத்தை விட்டு வெளியேறினார்.

பிரதேச சபையின் வரலாற்றில் பதியப்பட்டுள்ள இந்தச் சம்பவம் குறித்துச் சக உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஒக்ரோபர் மாதத்துக்கான கூட்டம் உபதவிசாளர் எஸ்.மகேந்திரன் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

காலை 9.30 மணிக்கு இறை வணக்கத்துடன் ஆரம்பமான கூட்டம் தவிசாளரின் தலைமையுரையைத் தொடர்ந்து கடந்த மாதக் கூட்ட அறிக்கையும் செயற்பட்டு அறிக்கையும் செயலாளரினால் வாசிக்கப்பட்டன.

செயற்பாட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்கள் குறித்து ஆளும் கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட காரசாரமான வாக்குவாதம் உச்சக்கட்டத்தை அடைந்தமையினால் இருவரும் கதிரையை விட்டு எழுந்து நின்று முட்டிமோதும் நிலைக்கு நெருங்கினர். சக உறுப்பினர்கள் குறுக்கிட்டுத் தடுத்து நிறுத்தியதுடன் அமைதியை நிலை நாட்டினர்.

இதையடுத்து சிறிது நேரத்தின் பின்பு எதிர்க்கட்சி உறுப்பினருக்கும் ஆளும் கட்சி உறுப்பினருக்கும் இடையில் அபிவிருத்தி சம்பந்தமான வாக்குவாதம் கட்டுமீறிச் சென்றதால் ஒரு கட்டத்தில் ஆவேசமடைந்த எதிர்க்கட்சி உறுப்பினர் மேசையிலிருந்த உறுப்பினரின் பெயர்ப்பலகையை எடுத்து ஆளும்கட்சி உறுப்பினரை நோக்கி வீசியபோது பெயர்ப்பலகை நிலத்தில் வீழ்ந்து விட்டது. தொடர்ந்தும் இருவருக்குமிடையில் அபிவிருத்தி சம்பந்தமான வாக்குவாதம் இடம்பெற்றமையால் அமைதியை நிலைநாட்ட முடியாத தவிசாளர் கூட்டத்தை 15 நிமிடங்கள் ஒத்தி வைத்து விட்டுச் சபை மண்டபத்தை விட்டு வெளியேறினார்.

மதிய இடைவேளைக்குப் பின்பு பிற்பகல் 2.15 மணிக்கு கூட்டம் மீண்டும் ஆரம்பமானது. நிகழ்ச்சி நிரல்களிலுள்ள விடயங்கள் உறுப்பினர்களால் ஆராயப்பட்டுத் தீர்வு காணப்பட்டது. இந்த நிலையில் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் பூகம்பம் ஏற்பட்டது.

அன்பளிப்பாக வாங்கப்பட்ட பொருள்களைத் திருப்பிக் கொடுப்பது சம்பந்தமாக உறுப்பினர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை குறித்து ஆளும் கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்ட காரசாரமான விவாதம் கட்டுமீறியதால் மோதல் ஏற்படும் சூழ்நிலை உருவானது. இந்த நிலையில் சக உறுப்பினர்கள் குறுக்கிட்டு அமைதியை நிலைநாட்டினர். இந்த நிலையில் கூட்டமும் நிறைவடைந்தது.

பிரதேச சபையின் வரலாற்றில் இடம் பெற்றிராத இந்த மூன்று சம்பவங்கள் குறித்து சக உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள். (த-115)

## வாழ்நாளையே ஊடகத்துறைக்கு அர்ப்பணித்தவர் ஐயா சச்சி

கொழும்பு, ஒக். 12

தனது வாழ்நாளையே பத்திரிகைத் துறைக்கு அர்ப்பணித்த மூத்த பத்திரிகையாளர் ஐயா சச்சிதானந்தத்தின் மறைவு தமிழ் ஊடகத்துறைக்குப் பெரும் இழப்பாகும் என்று இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அதன் அனுதாபச் செய்தியில் தெரிவித்திருக்கிறது.

மூத்த ஊடகவியலாளர் ஐயா சச்சிதானந்தம் நேற்றுமுன்தினம் மாரடைப்பால் காலமானார். சிறிது காலம் நோய்வாய்ப் பட்டிருந்த அவர் தனது 64ஆவது வயதில் காலமானார்.

இது தொடர்பாக ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் கு.ஜெயந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

சுமார் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக பத்திரிகைத் துறைக்காக தன்னை அர்ப்பணித்த சச்சிதானந்தன் இறக்கும் வரையில் ஊடகத்துறைக்கு செய்த பங்களிப்பு மிகவும் பெறுமதியானது.

ஆரம்பத்தில் ஈழநாடு இலங்கை வானொலி, தினக்குரல் என பல ஊடகநிறுவனங்களில்தனது மகத்தான பணியை ஆற்றிய அவர், செய்திகளை மட்டுமன்றி பல கட்டுரைகளையும் எழுதி வாசகர்களின் மனதைத் தொட்டுள்ளார்.


நாட்டில் நெருக்கடிகள் ஏற்பட காலத்திலும் கூட அமரர் சச்சி ஐயா ஏனைய ஊடகவியலாளர்களுக்கு முன் உதாரணமாகப் பணியாற்றியுள்ளார். குறிப்பாக அச்சு ஊடகங்களுக்கு அவர் வழங்கிய பங்களிப்பு மிகவும் அளப்பரியது.

ஈடுநாடு பத்திரிகை அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டபோது அங்கு கடமையில் இருந்து ஐயா சச்சிதானந்தம் தீயில் சிக்கியதில் அவரது ஒரு கால் மிக மோசமாக எரிகாயங்களுக்கு உள்ளாகியது. அவரின் பத்திரிகைத்துறை உலகுக்கான அர்ப்பணிப்பு மிக்க சேவையின் அடையாளமாகவே இந்த எரிகாயம் இறுதிவரை காணப்பட்டது

அமரர் சச்சிதானந்தனின் மறைவினால், துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவருக்கு இரங்கல் தெரிவிப்பதில் ஒன்றியம் இலங்கை ஊடகத்துறை சமூகத்துடன் இணைந்து கொள்கின்றது - என்றுள்ளது.

(த)

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை சந்திரலிங்கம்

ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், 215, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை சந்திரலிங்கம் நேற்று (11.10.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பாக்கியம் தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற இளையப்பிள்ளை-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான நீலவேணியம்மா மற்றும் சிவபதி கையாயபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான குணபாலசிங்கம் (பீற்றர்), தவமணி மற்றும் ஜெயபாலசிங்கம் (சேகர்-கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், றெஜீனா, செபஸ்ரி யன் (அன்ரன்), டக்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாம னும், பெனற்ஜெறோம், பெஞ்சமின்போல், அனற் செறின், யூடிற் குயினி, யூட்கொனறி (கனடா) எதல்கரோலின் (ஜேர்மனி), யூட்கிளமன்ற், றெக்ஸ் (இத்தாலி), இமோசினி, ஜெனீசா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 215, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 575 9168

தகவல்:
மகன் - ஜெயபாலசிங்கம்
(சேகர்).

(53175)(10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 18.07.1953 — இறப்பு 11.09.2014

கடந்த 11.09.2014 இறைபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

### ஐயாத்துரை குணசேகரம்

அன்னாரின்
வீட்டுக்கிருத்தியம் இன்று (12.10.2014)
ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால்
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம்
வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து
கொள்ளும் வண்ணம் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும் மேலும் எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்திகேட்டு உடன் ஓடோடி வந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு உதவிகள் புரிந்து தோள்கொடுத்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இராச வீதி, சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி (077 858 3863)


(53172)(10)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முருகேசு கிருபாகரன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



10ஆம் வட்டாரம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 73 மணல்தறை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கிருபாகரன் நேற்று (11.10.2014) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

73,மணல்தறை வீதி,
திருநெல்வேலி.

தகவல்: தி.இளங்கோவன்
(மருமகன்)

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை செல்லத்துரை

(தாடி மாஸ்ரர்-சோதிமர்)

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், ஊரெழு மேற்கு சுன்னாகத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்போது ஆனந்தபுரம்-கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை நேற்று (11.10.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-முதலியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவசோதியின் அன்புக் கணவரும், பிரிந்தினி (லண்டன்), நிதாசன், ஜெகந்தினி வாசன் (லண்டன்), காலஞ்சென்ற புருசோத்தமன் மற்றும் கரன் (ஆசிரியர், கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தில்வேல் (லண்டன்), யசோதா (பிரான்ஸ்), தமிழ்வாணி, நீலாம்பரி (கிளி/மாவட்டப் பொது வைத்திய சாலை) ஆகியோரின் அன்பு மாமனும், மிதிலா (லண்டன்), மதுசா (லண் டன்), மதுரா (லண்டன்), புருசோத்தமன் (பிரான்ஸ்), நேசிகா (மாணவி, கிளி/கிளி நொச்சி ம.வி), தபோதரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்போதைய இல்லத்தில் (ஆனந்தபுரம்-கிளிநொச்சி) 13.10.2014 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 67, அண்ணா வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

0773643817
0243247101

தகவல்:
குடும்பத்தினர்.

**அக்ஷயா**

பேசியல், மேக்கப், கொயாஸ்டைல், ஜசிங், சாறி பிளவுஸ் அனைத்து தையல் கட்டிங் மேற்படி பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன.

★கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, மஞ்சள், வெள்ளை, கரும்புள்ளி, நாட்ப்பட்டவடுக்கள் கறைகள் காயங்கள், பருக்கள், வயதான தோற்றம் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் வைற்நிங் கிறீம் விற்பனைக்கு உண்டு.
★உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா, குளிசை விற்பனைக்கு உண்டு.
★கழுத்து கறுப்பு, உடம்பில் காணப்படும் கடும் கறுப்பு அடையாளம் நாட்பட்ட பித்த வெடிப்பு கை, கால் கறுப்பு நிறம் அனைத்தையும் மாற்றும் Body whitening cream விற்பனைக்கு உண்டு.

அக்ஷயா.
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(பிறவுன் றோட் அருள் கொமினிகேஷன் அருகில்)

0772106155

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### சின்னையா ஞானாபரணம் (ஜெயதேவா)

நவாலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானாபரணம் (ஜெயதேவா) அவர்கள் (10.10.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை-நேசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் சகுந்தலாதேவி அவர்களின் பாசமிகு கணவரும் ஜெயவதனி, ஜெயமதி, ஜெயசுதா, ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் பஞ்சரட்ணம் சீவரட்ணம்(கனடா) ஆகியோரின் அன்பு சகோத ரரும் றோகினதாஸ், றாயன், கமலன், றோஸ் நேசமணி ஆகியோரின் அன்பு மாம னாரும் சிமித், சிறானி, அஜித்குமார், ஆசா, ஆகாஸ், கமில், கலிஸ்ரன், கலிஸ்ரா, ஜெரோன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை (13.10.2014) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாதகல் வடக்கு, மாதகல்.

தகவல்:
வண.ஞா.ஜெயகுமார்

**ALBUM PRINTING**
**ULTRA HD -2880dpi**
இந்திய விலையில் யாழ்மண்ணிலும்
10X30, 12X30
SYENTHETIC ALBUM - 170.00 (flat binding)
HARISHMA ALBUM -120.00 (slim album)
HI GLOSSY COLOUR PRINT A4 - 15.00
(C/16866)
MOORTHY DIGITAL COLOUR LAB 62/20, STANLY ROAD,JAFFNA.
0212221358

## மரண அறிவித்தல்

### திருமதி அற்புததேவி வேலாயுதம்

சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் அற்புததேவி நேற்று (11.10.2014) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பூரணம் தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பண்டாரி-பார்வதி தம்பதி யரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பண்டாரி வேலாயுதத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, தங்கரத்தினம், ராஜேஸ்வரி மற்றும் குணராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம், கிருஸ்ணபிள்ளை, வள்ளியம்மை, அப்பாச்சி, லக்சுமியார், உமாதேவி, தெய்வானை, சின்னராசா, நாகலிங்கம் ஆகியோ ரின் மைத்துனியும், ஸ்ரீ ரஞ்சன், காலஞ்சென்றவர்களான ஸ்ரீதரன், ஸ்ரீகுமார் மற்றும் ஸ்ரீகாந்தன், ஸ்ரீமோகனதாஸ், மகாலட்சுமி, அன்னலட்சுமி, ஸ்ரீமுரளீஸ் வரன் ஆகியோரின் பாசமிகு தாயும், மங்களேஸ்வரி, ஜெயசுதா, விஜிதா, ஸ்ரீராம் ஆகியோரின் மாமியும், ஐங்கரன், கோபிகை, திவ்யா, வேலவன், வசீகன், வாஜினி, ஆருத், மகிளினி, லக்ஷாயினி, மோகன்ராம், ஜெயராம், நாராயிணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

(C/16879)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் செல்லத்துரை

(ஓய்வு பெற்ற சனுசலா உத்தியோகத்தர்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்லத்துரை (தமிழரசுக்கட்சியின் நீண்டகால உறுப்பினர்) அவர்கள் நேற்று (11.10.2014) சனிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தெய்வானை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற நல்லையா இராசம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற பூவின்பராணியின் அன்புக் கணவரும், வ.பாலசிங்கம் ( முன்னாள் பண்டத்தரிப்பு ப.நோ.கூ.பணியாளர்), வ.இராசரட்ணம், இ.மல்லிகா தேவி, காலஞ்சென்ற கு.பரமேஸ்வரி மற்றும் சு.கமலாதேவி ஆகியோரின் அன்பு சகோதரரும் ந.சிறிஸ்கந்தராசா காலஞ்சென்ற ந.சங்கரப்பிள்ளை மற்றும் செ.பவளதேவி, N. சந்திரகுமாரி, ஜீ.வசந்தி, காலஞ்சென்ற வி.இரத்தினம், காலஞ்சென்ற அ.சுப்பிரமணியம் மற்றும் திருமதி. சி.சாரதாதேவி, திரு.சேகர் (சுங்கத்த்திணைக்கள பரிசோதகர்) திருமதி.ச.இராசுஜி, திரு. யெ.ஜீவரட்ணம் ஆகியோரன் மைத்துனரும் ஆவார். திருமதி கோமதி ( அபிவிருத்தி உத்தியோகத்தர் RDA) மோகனதாஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், துணுக்காய் பிரதேச செயலகம்) திருமதி கலைச்செல்வி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) திரு.சு.கிருஷ்ணதாஸ், இ.மதியழகன் ஆகியோரின் மாமனாரும் இ.தயாபரன் ( பண்டத்தரிப்பு ப.நோ.கூ. ச பணியாளர்), திரு. நிஷான் (மருத்துவ பீட மாணவர்), சே.டினோஜன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் மாதகல் போதி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறி வித்தலை உற்றார், ஊறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(53174)

தகவல்: வ.பாலசிங்கம் (சகோதரன்)

## பெயர் மாற்றம்

முருகமூர்த்தி வீதி, நெல்லியடி என்னும் முகவரியில் வசிக்கும் **சிவகுமார் சிவச்சந்திரன்** ஆகிய நான் இன்றிலிருந்து **(12.10.2014 திகதியிலிருந்து)** எனது பெயரை **சிவகுமார் திருநீபன்** என பெயர் மாற்றம் செய்வதோடு, இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையெப்பம் இடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(51981)
(46.3.6)

சி.நிருநீபன்

---

# Ranjanas
CERAMIC

தீபாவளியை முன்னிட்டு
**மாபெரும் விலைக்கழிவு**

SPECIAL OFFER 30%
Condition Apply

# 212, Palaly Road,
Kantharmadam.
T.P: 021 22 200 33

metro engineering

---

Happy Diwali! விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை! Merry Christmas!

## பண்டிகைக்காலத்தை முன்னிட்டு

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் கடிதங்கள்,
பொதிகள் சேவையில் பல்லாயிரக்
கணக்கான வாடிக்கையாளர்களின் மனதில் இடம்பிடித்து நிற்கும்

## திருமுருகன் கொம் நெற்

தமது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கவுள்ளது.

220 க்கு மேற்பட்ட நாடுகளுக்கான துரித சேவை.
3 - 5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
உங்கள் இல்லங்களில் வந்து பொறுப்பேற்று உரிய முகவரியில் ஒப்படைக்கும் வசதி.
கடிதங்கள், உடுபுடவைகள், அன்பளிப்புப் பொருட்கள், கடலுணவுகள், மருந்துப் பொருட்கள், மற்றும் இதர பொருட்களையும் அனுப்பிட முடியும்.

தற்போது 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்.
(**1kg** க்கான கட்டணம்).
(லண்டன் 625/=, கனடா 950/= பிரான்ஸ் 675/=, ஜேர்மனி 650/=, சுவிஸ் 750/= இத்தாலி 800/=, அவுஸ்ரேலியா 700/=)

(இச்சலுகை எமது நிறுவனத்தில் மட்டுமே உள்ளது.)

**திருமுருகன் கொம் நெற்** பிறைவெட் லிமிட்டெட்
271A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(ஆல் சிலோன் புத்தகக் கடைக்கு முன்பாக)

**கிளைகள்:**
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. 18, பிரதான வீதி, நெல்லியடி.
30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 50, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
பிரதான வீதி, சங்கானை.
(ஆசைப்பிள்ளை நகைக்கடைக்கு முன்பாக)

**தொடர்புகளுக்கு:**
0777554528 / 0212227835

நிபந்தனைக்கு உட்பட்டது.

---

**உதயன்** விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

---

## வீடு வாடகைக்கு

அரியாலை, புங்கன்குளம், கண்டி வீதியில் வாகனத் தரிப்பு வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொழில் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 220 9464 (53164) (7.6.3)

---

## மரண அறிவித்தல்



## ஆறுமுகம் சிவவீரசிங்கம்

**(முன்னாள் BOTANY ஆசிரியர்- மானிப்பாய் இந்துக்கல்லூரி மற்றும் மானிப்பாய் Ladies College)**

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவவீரசிங்கம் 08.10.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி R.V. ஆறுமுகத்தின் அன்பு மகனும், சிவமங்கையர்க்கரசி, காலஞ்சென்ற சிவகுரத்தரசன், Dr. இராமநாதன், வேல்முருகன், சிவதேவி, Dr. சிறிதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. மாலை 4 மணியளவில் கல்கிசை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr.A. இராமநாதன்
077 790 0652

(e.169571 (45.6.3)

---

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில மொழிகற்பிக்கும் நிலையத்தின் சிரேஷ்ட போதானாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த எமது சங்கத்தின் நீண்டகால உறுப்பினரான

## மார்க்கண்டு இரவீந்திரன்

அவர்கள் இறைபதம் அடைந்துள்ளார். இச்செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம்.

அன்னாரது மறைவு ஓர் ஈடுசெய்யப்பட முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர், நண்பர்கள் மற்றும் ஒட்டு மொத்த பல்கலைக்கழக சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

---

## தேவை

யாழ்.நகரப் பகுதியில் இயங்கிவரும் திருமண மண்டபத்திற்கு முகாமையாளர் தேவை, வயதெல்லை 30-45இற்கு இடைப்பட்டவராகவும், கல்வித் தராதரம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம். (53162) (7.6.3)

தொடர்பு : **மே/பா உதயன்**
விளம்பர இல - 5020, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

## ஞாயிறு-திங்கள் 9am to 6pm

நாள்பட்ட தலைவலி, கழுத்து, முதுகு, இடுப்பு வலி, முள்ளந்தண்டு விலகல், முழங்கால், குதி, பாத வலிகள், மாறாத நெஞ்சுச் சளி, இருமல், ஆஸ்துமா, அலர்ஜி, High ESR, High BP, High Sugar, Cholestrol, Low Thyroxin அதீத உடல் பருமன், பசியின்மை, உடல் மெலிவு, சோர்வு, வயதானவர்களின் தளர்ச்சி, மாணவர் களின் ஞாபக மறதி, படிப்பில் கவனக் குறைவு, குழந்தை இன்மை, கரு உருவாமை, கரு முட்டை வளர்ச்சி குறை, கருப்பை சுவர் மெலிவு. (சி/18961) (7.6.3)

சித்த வைத்தியர் Dr.R.Sivagurunathan
077 730 1669 நல்லூரில் சந்திப்பு இலவசம்

---

## SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES
E-mail: sbtravels99@yahoo.com, sbtravels@sltnet.lk

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 18,000/- | LONDON | 92,600/- |
| TRICHI | 22,800/- | MALDIVES | 16,900/- |
| CHENNAI | 23,800/- | PARIS | 86,699/- |
| BOMBAY | 28,900/- | TORONTO | 238,200/- |
| BENGALURU | 28,900/- | NEW YORK | 129,999/- |
| KOCHI | 27,500/- | MELBOURNE | 122,600/- |
| DELHI | 46,400/- | PERTH | 108,999/- |
| MALAYSIA | 26,400/- | CANTON | 55,900/- |
| SINGAPORE | 30,200/- | NARITA | 76,899/- |
| BANGKOK | 29,900/- | | |
| SYDNEY | 112,999/- | AUCKLAND | 130,900/- |

*Condition Apply

VISA MASTER American Express Card Accepted

INDIAN, BANGKOK MALAYSIA VISA ARRANGEMENT

ONE WAY: DUBAI-26,000/-, DOHA-24,500/-, ZURICH-66,900/-, LONDON-63,000/-
If you want any country air tickets please call our office number.

0771083480,81,82,83 | 0766911080,81,82,83,84,85,86,87,89,90
No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-0112540280
No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -0112333322
NO 15, JEMPATTAH STRRET, COLOMBO-13. TEL- 0112446666
E-mail: sbtravels99@yahoo.com , sbtravels99@sltnet.lk

---



## தித்திக்கும் தீபாவளி கொண்டாட்டம்

**அதிவிஷேட விலைக்கழிவு**

- தீபாவளியை முன்னிட்டு புத்தம் புதிய சாறிகள், சல்வார்கீள், சல்வார் துணிகள். ஆண்களுக்கான சேட், ரீசேட், ரெடிமேற் ரவுசர் மற்றும் சிறுவர்களுக்கான புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை **அதி விஷேட விலைக்கழிவில்** பெற்றுக் கொள்ள வாருங்கள் வாருங்கள்.
- தீபத் திருநாளை முன்னிட்டு (Office ware) சில்க் சாறிகள், கொட்டன் சாறிகள், கொட்டன் சல்வார் துணிகளை மலிவான விலையில் **21.10.2014** வரை பெற்றுக்கொள்ளலாம்.
- மற்றும் பாடசாலைகள் அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றில் நடைபெறும் எந்த ஒரு நிகழ்விற்கும் ஒரே மாதிரியான சாறிகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- உங்கள் வீட்டில் நடைபெறும் திருமணத்துக்குத் தேவையான பட்டுசாறி, சுபமுகூர்த்த கூறை சாறி, காவ் சாறி, குருதா, சோலிகிட், கோட் சூட், பன்சி சாறி, பட்டு வேட்டி, பட்டு சேட், நஷனல் என்பவற்றை மலிவான விலையில் தரம் உயர்வாகப் பெற்றுக் கொள்ளலாம்.
- மற்றும் எமது வியாபார நிலையத்தில் நீங்கள் கொள்வனவு செய்யும்போது வங்கிக் கடன் அட்டைகளிலும் மற்றும் வங்கி அட்டைகளிலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.
- எமது வியாபார நிலையங்கள் தீபாவளியை முன்னிட்டு விடுமுறை நாள்கள் உட்பட காலை 8.30 முதல் இரவு 7.30 மணிவரை வியாபார நடவடிக்கைகளுக்காகத் திறந்திருக்கும்.



# சரவணா ரெக்ஸ்
# SARAVANA TEX

526,529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), சிவன் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.

770, 772, கே.கே.எஸ்.வீதி, (தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.

# விற்பனை

### இராமநாதன் வீதியில் வீடு விற்பனைக்கு
134, இராமநாதன் வீதியில் ஒரு பரப்புக் காணி யுடன் கூடிய வீடு மலிவு விலையில் விற்பனைக் குண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 828 6692 (53099) (5.6.3)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
Discovery-Bajaj 125 CC WPMZ-xxxx இலக்க மோட்டார் சைக்கிள். விலை ரூபா 70,000/= தொடர்பு: 077 727 9704

### கார் விற்பனைக்கு
சொந்தப் பாவனையில் உள்ள 10 ஸ்ரீ மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் 2 மணிக்குப்பின்
(52982) (4.6.3) தொடர்பு:021 320 3379

### விற்பனைக்கு
2kw ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 651 0307

### காணி விற்பனைக்கு
யாழ்-கொழும்பு பிரதான வீதியில் உசன் சந்திக்கு அருகில் இரண்டே முக்காலுக்கு 10 குழி குறைய காணி உடன் விற்பனைக்கு..(தரகர் தேவையில்லை)
(சி16952)(12.3.6) தொடர்பு: 077 900 4013

### கடை வாடகைக்கு
403, மணிக்கூட்டு வீதியில் (வெலிங்டன் சந்திக்கும், பெருமாள் கோயிலுக்கும் இடையில்) முன்புறத்தில் கண்ணாடிக் கதவிலான 1150 சதுர அடியினையுடைய கடைக் கட்டடம் முதலாம் மாடி வாடகைக்குண்டு. (காரியாலயங்கள், கணினி வகுப்புக்கள் விரும்பத்தக்கது) (சி16954)(12.3.6) தொடர்பு: 077 210 0909

### இயற்கைப் பூக்கள் விற்பனை
உங்களுக்குத் தேவையான இயற்கைப் பூக்களை (நுவரெலியா பூக்கள்) எங்க ளிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
(52855) (7.6.3) தொடர்பு: 077 390 7335

### மல்லாகத்தில் காணி விற்பனைக்கு
மல்லாகம் கே.கே.எஸ். வீதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
(53010) (5.6.3) 077 312 1328 / 077 88 666 14

### Coral water
மொத்தமாகவும், சில்லறையாகவும் போத்த லில் அடைக்கப்பட்ட ½L, 1L, 1½L, 5L, 20L coral குடிதண்ணீரை எம்மிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
தொடர்பு: 077 254 3253 (53111)(5.6.3)

### காணி விற்பனைக்கு
சண்டிலிப்பாயில் தொட்டிலடி - அளவெட்டி பிரதான வீதியில் 6 அறைகள் கொண்ட வீடு மற்றும் கிணறு தண்ணீர் Tankவசதிகளுடன் 6 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.
(சி16958)(12.3.6) தொடர்பு: 077 131 3814

### விற்பனைக்கு
சிங்கர் மைக்ரோவேவ் அவன் (புதியது) மற்றும் பிலிப்ஸ் கோம் தியேட்டர் உடன் விற்பனைக்குண்டு.
(51960) (12.3.6) தொடர்பு: 071 815 3565

### கடைக்கட்டடம் விற்பனைக்கு
யாழ்ப்பாணம், K.K.S.வீதி, இல.187 (பழைய இல.49) கடைக் கட்டடம் விற்பனைக்குண்டு.
(53113) (5.6.3) தொடர்பு: 077 224 7865

### காணி விற்பனைக்கு
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அருகில் கிளுவானை லேனில் 2 பரப்பு குடியிருப்புக்காணி, ஒரு பரப்பு 4,4½ இலட்சம் ரூபா பெறுமதி.
தொடர்பு: 077 606 0673 (53126)(5.6.3)

### Samsung smart 3D 40" TV விற்பனைக்கு
அண்மையில் வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட புத்தம் புதிய Samsung smart 3D TV விற்பனைக்கு.
தொடர்பு: 076 538 2347 (53129)(5.6.3)

### இறைச்சிக்கோழி விற்பனை
புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்த மாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் சுத்தம் செய்யப்பட்டது.
1kg 400/= மட்டும். 10kg இற்கு மேல் கொள் வனவு செய்வோருக்கு கிலோ 380/= மட்டும்.
விஜயகுமார்,
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை
T.P:077 315 1723 (53108) (4.6.3)

### விற்பனைக்கு
iphone 5S gold, Canon Eos 60 D கமெரா, HP New Lap என்பன குறைந்த விலையில் விற்பனைக்குள்ளன.
(47309) (4.6.3)
தொடர்பு:077 899 9727/077 828 2143

### காணி விற்பனைக்கு
கரவெட்டி நெல்லியடி கிழக்கு புதுத்தோட்ட ஒழுங்கையில் சுற்றுமதிலுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(சி16950) (12.3.6) தொடர்பு: 077 388 9963

### ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு
சிறந்த இன கிறிறாஷ் ஒரு நாள், இரண்டு கிழமை, ஒரு மாத, இரண்டு மாத ஊர்க்கோழிக்குஞ்சுகளும் வெள்ளடியன் கோழிகளும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 755 6244

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
45 நாள்கள் நிரம்பிய உயர்ந்த ரக ஜேர்மன் செப்பேட் (Alsation) கறுப்பு நிறக் குட்டிகள் விற்பனைக்குள்ளன.
(53046) (12.3.6) தொடர்பு: 077 755 6244

### விற்பனைக்கு
புத்தம்புதிய 2014 செப்டெம்பர் வகைகள் Honda Vezel Z Grade யாழ்ப்பாணத்தில் பல வர்ணங்களில் விசேட விலைகளில் பெற்றுக்கொள்ள லாம்.
தொடர்புகளுக்கு:
011 2698613/072 3984108

# ஏனையவை

### தவறிவிட்டது
...டுவில கிழக்கைச் சேர்ந்த ஜெயபாலசிங்கம் ஜெய பரன் என்பவரது தே.அ.அ.(812794477 V),சாரதி அனுமதிப்பத்திரம் என்பன (09.10.2014) அன்று மருத னார் மடத்திற்கும் நிலாவரைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்
077 540 1518 (53127)(5.6.3)

### இலவச செவிப்புலன் (காது) பரிசோதனை
எமது செயலகத்தில்
14.10.2014-18.10.2014 வரை
9 மணி-5 மணி வரை செவிப்புலன் (காது) பரிசோதனை செய்யப் படும்.
செவிப்புலன் கருவிகளும் பெறலாம்.
முற்பதிவு செய்து வரவும்.
Med Con செவிப்புலன் சுக நல நிலையம்
இல.218 1/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (53085) (4.6.3)
077 012 4415/021 492 3587

**2016 DV Lottery**
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
விண்ணப்ப முடிவுத்திகதி 02.11.2014
**திருமுருகன் கொம்நெற்**
இல. 371A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
0212227835

### தவறவிடப்பட்டது
சாவகச்சேரி நவீன சந்தை உட்புறத்தில் 11.10.2014 சனிக்கிழமை தங்கச்சங்கிலி பென்ரனுடன் தொலைந்துவிட்டது. கண் டெடுத்துத் தருபவர் களுக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 077 607 5288

# தேவை

### தேவை
பிரபல Hotel இற்கு பெண் வரவேற்பாளர் (Receptionist) தேவை. 28 வயதிற்குள்.யாழ் மாநகரசபை எல்லைக்குட் பட்டவர்கள் விரும்பத்தக்கது.
(சி16953)(12.3.6) தொடர்பு: 077 226 9790

### கொள்வனவு செய்தல்
பழையகால ஏட்டுச்சுவடிகள், ஏடுகள், புத்தகங்கள் என்பன விலைக்கு கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு:077 128 3248 (53159) (4.6.3)

### தேவை (வாகனம், ஊழியர்)
- வடி வாகனம் (அலுமினிய பொடி) வாடகைக்குத் தேவை.
- வைண்டிங் (புத்தகம் கட்டுதல்) தெரிந்த பெண் ஊழியர் தேவை.

(53141) (12.3.6) தொடர்பு: 077 900 9541

### ஊழியர்கள் தேவை
- Mobile Phone Technician
- Computer Technician
- பெண் உதவியாளர்கள்

தேனகம் Computers & Mobiles
Tel: 077 310 3205
(53152) (12.3.6) Email:Thenagam6@gmail.com

### தேங்காய் சிரட்டை தேவை
1Kg 8/= விகிதம் தரப்படும். 1000 Kg மேல் இருந்தால் வந்து எடுப்போம்.
சொந்தமாக வியாபாரம் செய்ய அரிய வாய்ப்பு. (அனைத்து பிரதேசத்திலும் ஏஜன்டுகள் தேவை)
தொடர்புகளுக்கு:
**077 5555100/ 0775 805550**
LANKA MARKETING

### வீடு வாடகைக்குத்தேவை
சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ்.பல் கலைக்கழகத்தை அண்டிய 5 மைல் சுற்றளவுக்குள் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:075 028 9928 (53157) (4.6.3)

### விற்பனை முகவர்கள் தேவை
பிரபல முன்னணி நிறுவனத்துக்கு முல்லைத் தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோண மலை, யாழ்ப்பாணத்தில் வடமராட்சி ஆகிய இடங்களுக்கு முகவர்கள் தேவை.
(53148) (12.3.6) தொடர்பு: 077 391 4119

# மணமக்கள்

### மணமகள் தேவை
1981 ஜனவரி, பரணி நட்சத்திரம் ஆஸ்திரேலியா Software Engineer மணமகனுக்கு, கணக்காளர், பட்டதாரி தராதர மணப்பெண் தேவை. (53094) (12.3.6)
தொடர்பு: 011 244 5950/077 386 8565

### மணமகள் தேவை
1963, யாழ். இந்து, தாரம் இழந்த சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கு மண மகள் தேவை.ஜாதி மதம் அவசியமில்லை.
தொடர்பு: 077 617 2941

### மணமகள் தேவை
யாழ். இந்து 1982, கேட்டை 2 ஆம் பாதம், பிரான்ஸ் PR உள்ள மணமகனுக்கு, மணமகள் தேவை.
(53142) (45.6.3) தொடர்பு: 077 171 1386

### மணமகன் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 39, திருவாதிரை முதலாம் பாதம், 8இல் செவ்வாய், பாவம் 38, BSC ஆசிரியையாக கொழும்பில் வேலை செய்யும் மண மகளிற்கு, தகுதியான மணமகனைத் தேடுகின்றோம்.
சாயிநாதன் திருமணசேவை,
(53042) (12.3.6) இல.474, மணிக்கூட்டுக் கோபுர வீதி, (பெருமாள்கோயிலடி) யாழ்ப்பாணம்.
021 320 0846/011 344 3929/077 734 5428

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌவர குடும்பம்,1985 ஆம் ஆண்டு சுவாதி நட்சத்திரம் 62 கிரக பாவம் உடைய Software இஞ்சினியர் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு: 0771 873 537

### நாகபூஷணி திருமண சேவை மணமகள் தேவை
1)1978, 4இல் செவ்வாய் , பாவம் 25 உடைய வங்கி முகாமையாளருக்கும்
2)1980, 12இல் செவ்வாய், பாவம் 40 உடைய அரச உத்தியோகத்தருக்கும்
3)1983, 7இல் செவ்வாய், பாவம் 65 உடைய வைத்தியருக்கும்
4)1985, செவ்வாய் குற்றமற்ற 45 பாவமுடைய சிங்கப்பூர் சிவில் எஞ்சினியருக்கும்
5)1979 செவ்வாய்க்குற்றமற்ற 62 பாவம் உடைய அமெரிக்கா (PR) மணமகனுக்கும், மணமகள்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

உயர்தொழில்/அரச உத்தியோகத்தர்/ தனியார் துறையைச் சேர்ந்த உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் நிறைய உள்ளனர. உடன் பொருத்தமாகக் கொடுக்கப்படும். (53134) (7.6.3)
இல. 15/11, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P : 021 222 9306, 077 138 7596, 075 554 6000
E-mail : nakapoosanywedding@gmail.com

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம், U.Kஇல் P.S.W விசாவில் தனது சகோதரி குடும்பத் தினருடன் வசிக்கும் கொம்பியூட்டர் எஞ்சினியர், செவ்வாய்க்குற்றமற்ற, பாவக்கிரகம் 01, மக நட்சத்திரமும், 5' 8" உயரமும் கொண்ட அழகிய மணமகனுக்கு U.Kஇல் PRஉள்ள, யாழ்.இந்து கௌரவ குடும்பம், பட்டதாரியான அழகிய நற்குண.நற்பழக்கமுள்ள மணமகள் தேவை.
(52164) (12.3.6) தொடர்புகளுக்கு:
077 077 5546/077 699 7309

### மணமகள் தேவை
யாழிந்து கௌரவ, வயது 29, உயரம் 6' 2" Master degree முடித்த மணமகனுக்கு படித்த மணமகளை எதிர்பார்க்கிறோம் www.Friendsmatrimony.com
(சி16951)(12.3.6) 011 722 1674

### மணமகள் தேவை
கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நிர்வாக உத்தியோகத்தர் ஆகப் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 075 069 6963

# ஏனையவை

### செய்து தரப்படும்
பகுதிநேரமாக Audit கணக்குகள் செய்து தரப்படும் (Manual, Excel, Quick Book - 2010 Tally 9.0 மூலமாக)
(53064) (12.3.6) தொடர்பு: 077 136 4555

### அறைகள் நாள் வாடகைக்கு
ஒருவருக்கு 600/=, இருவர் 1300/=, நால்வர் 2000/=
6 Hours 450/= ஒருவருக்கு
**Hotel Villa City**
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 22 22. (C/16915) (10.6.3)

### வாடகைக்கு
வெள்ளவத்தை, ஸ்ரேசன் றோட், இல.6இல் அமைந்துள்ள லொஜ்ஜில் இணைந்த குளியலறையுடன் அமைந்த அறைகளும், சாதாரண அறைகளும் நாள், கிழமை அடிப்படையில் குறைந்த விலையில் வாடகைக்குண்டு. (சி16949) (12.3.6)
தொடர்பு: 011 250 4281/071 299 1256


### தையல்
இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக் கப்படும்.
இல. 39, நாவலர் வீதி (வைடி பல்கலைக்கழகத்துக்கு அருகில்)
தொடர்பு: 0766 399 277 (52357)(5.6.3)

### வீடு வாடகைக்கு
மல்லாகத்தில் வீடு வாடகைக்குண்டு. மூன்று அறை, குசினி, Attched Brthroom ஹோல் தனி பாத்றூம், தங்குவதற்கும் வகுப் புக்கள் நடத்தவும் உகந்த இடம், வாடகை 4000/=, முற்பணம் 50000/= விரும்பியவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.
(சி16938) (12.3.6) Conduct No: 077 960 4095/011 250 7605

# சொன்னதை எதையும் நீங்கள் செய்யவில்லை எந்த முகத்தோடு சந்திக்க அழைக்கின்றீர்கள்?

**வடக்கு மாகாண சபையின் விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த தலைமையில் நாளை திங்கட் கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கப் போவதில்லை என்று ஏற்கனவே அறிவித்திருந்தது. இதற்கான காரணத்தை விளக்கி ஜனாதிபதிக்கு வடக்கு முதலமைச்சரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தின் முழு விவரம் இங்கே.**





மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களே!

விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் , மன்னார் , வவுனியா , முல்லைத்தீவு , கிளிநொச்சி

1. மேன்மை தங்கிய உங்களது பணியாளர் குழாமின் தலைவர் காமினி எஸ்.செனரத் அவர்களால் 2014 செப்ரெம்பர் 23ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் உள்ளடக்கத்தைக் கீழே தருகின்றேன். மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் தலைமை தாங்கப்படும் அட்டவணைப்படுத்தப்படும் விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத் தொடரில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் சார்பான விசேட இணை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் 2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் 13ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெற உள்ளது. இந்த அட்டவணைப்படுத்தப்பட்ட கூட்டத்தில் 2012ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் எடுத்த தீர்மானங்களின் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான முன்னேற்றம் பற்றியும் 2014 - 2016 ஆண்டுகால மத்திய கால முதலீட்டு திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ள எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தமான முன்னேற்றம் பற்றியும் மதிப்பீடு செய்து கலந்துரையாட வேண்டி இருக்கின்றது. மேற்படி கூட்டத்தில் நீங்கள் பங்குபற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்

2. 2012ஆம் ஆண்டில் நடந்த கூட்ட விடயதானம் சம்பந்தமாக இரண்டு வருட இடைவெளிக்குப் பின் நடைபெறும் இக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் பற்றியோ அதன் அவசியம் பற்றியோ வடமாகாண சபையானது கலந்து ஆலோசிக்கப்படவுமில்லை. அதுபற்றித் தெரியப்படுத்தப்படவுமில்லை. வடமாகாண முதலமைச்சர் மற்றும் மத்திய அரச அமைச்சர்கள் ஆகியோரின் இணைத் தலைமைத்துவத்தின் கீழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெற்று வருவது மேன்மை தங்கிய நீங்கள் அறியாததல்ல. 2013ஆம் ஆண்டில் நடந்த மாகாண சபைத் தேர்தலின் பின் உருவாக்கப்பட்டதே வடமாகாணசபை. 2012ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டம் சம்பந்தமான தொடர்புகளை 2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் கவனத்திற்கு எடுப்பது எமது வடமாகாணசபைக்குக் குழப்பத்தை ஏற்படுத்துவதோடு விசனத்தையும் கொடுக்கின்றது. வடமாகாணம் சம்பந்தமாக அரசுக்கு இருக்கும் தற்போதைய கொள்கைகளை வடமாகாண மக்கள் பெருவாரியாக ஏற்க மறுத்ததோடல்லாமல் முன் எப்பொழுதும் இல்லாதவாறு 38 ஆசனங்களில் 30 ஆசனங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பெற்றுத்தந்தமை உங்களுக்கு நினைவிருக்கலாம். அப்படியிருந்தும் மக்களின் நேரிடைப் பிரதிநிதிகளால் நடத்தப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கூட்ட விடயதானங்களைக் கவனத்திற்கெடுக்காது இக்கூட்டம் நடைபெறப் போவது மனவருத்தத்தைக் கொடுக்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்களின் தேவைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் வடமாகாணசபை அந்த நடவடிக்கைகளில் ஒரு முக்கிய பங்குதாரராக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது நன்கு புலனாகின்றது. மக்களின் ஜனநாயக எதிர்பார்ப்புகளுக்கு முரணாக அதிகார அலகு ஒன்று வடமாகாண சபையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதும் புலனாகின்றது.

3. இம்மாதம் 12ஆம் திகதி மேன்மை தங்கிய நீங்கள் கிளிநொச்சியில் வைத்து வடமாகாண காணிகள் சம்பந்தமான அனுமதிப் பத்திரங்களை சுமார் 20 ஆயிரம் பேருக்கு வழங்கப்போகிறீர்கள் என அறிகின்றோம். கிளிநொச்சி காணித் துண்டுகள் 3886 பேருக்கும், முல்லைத்தீவில் 3642 பேருக்கும், மன்னாரில் 7202 பேருக்கும், வவுனியாவில் 4228 பேருக்கும், யாழ்ப்பாணத்தில் 1001 பேருக்கும் வழங்கப்போகிறீர்கள் என அறிகின்றோம். அத்துடன் பல தூர இடங்களிலிருந்தும் 400 இற்கும் மேற்பட்ட பஸ் வண்டிகளில் மக்களைக் கிளிநொச்சிக்குக் கொண்டு வர ஆயத்தங்கள் செய்யப்படுவதாகவும் அறிகின்றோம் நீங்கள் வழங்கும் அனுமதிப் பத்திரங்களைக் கையேற்கவே இவர்கள் கொண்டுவரப்படுகின்றார்களெனில் உங்கள் அரசியல் இலாபத்திற்காக அவர்கள் பல மாதங்களாக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாது காத்திருக்கப்பட்டுள்ளார்கள் என்று அர்த்தம்.

4. வடமாகாண காணிகள் சார் அமைச்சர் என்ற வகையில் எந்த செய்முறையின் பயனாக அனுமதிப் பத்திரப் பெறுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், சட்டரீதியான எந்த அடிப்படையில் வடமாகாண காணிகள் சம்பந்தமாக நீங்கள் இத்துணை தாராள சிந்தையுடன் நடந்துகொள்ள உத்தேசித்துள்ளீர்கள், எப்பேர்ப்பட்ட நெறிமுறைகளின் வாயிலாக பங்கீட்டில் பெறுநர்கள் பயன் பெற்றுள்ளார்கள், எப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் மேலும் வடமாகாண வதிவாளர்களைவிட வெளி -மாகாண மக்களும் பயன் பெற இருக்கின்றார்களா என்பது போன்ற பல விடயங்கள் சம்பந்தமாக நான் கலந்து கொள்ளப்படவில்லை என்பதைத் தெரியத் தருகின்றேன். ஆனால் ஒன்று மட்டும் அறிந்து கொண்டுள்ளேன். உரிய செயல்முறை, வெளிப்படைத் தன்மை, பதிலளிக்குங் கடப்பாடு ஆகிய நல்லாட்சிக்கான குணாதிசயங்களைப் பேணி நடக்காது தங்கள் அரசியல் இலாபம் கருதி உங்கள் அரசவைச் சார்ந்த அமைச்சர் ஒருவரும் உங்கள் கட்சிக்குச் சார்பான நாடாளுமன்ற அங்கத்தவர் ஒருவரும் சேர்ந்து 1284 அனுமதிப் பத்திரங்களை 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கு முன்னர் கையளித்துள்ளார்கள்.

5. காணி அனுமதிப்பத்திரங்கள் வழமையாக சட்டமுறைப்படி வழங்கப்படவேண்டும். அது சம்பந்தமான செயல்முறை பூரணப்படுத்தப்பட்டபின் உடனேயே பயன் பெறுநர்கள் தமது அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வர். உங்களால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படப் போகும் நபர்கள் சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனுமதிப் பத்திரங்களை கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் தாமதித்தே வழங்குவது நீதிப்படி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு செயல் அன்று. இது எப்படி இருக்கின்றதென்றால் மனிதாபிமானமற்ற முறையில் இரண்டரை லட்சம் எமது தமிழ்ப் பேசும் மக்களை அநியாயமாகச் சிறைப் படுத்தி வைத்திருந்து 2010ஆம் ஆண்டில் உங்கள் ஜனாதிபதி தேர்தல் வந்த நேரத்தில் அவர்களைத் திடீர் என்று விடுதலை செய்தது போன்று இருக்கின்றது என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நாம் பின்பற்ற விரும்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2013ஆம் ஆண்டின் தேர்தல் திட்ட அறிவிப்பு ஆவணமானது காணிபற்றிய பின்வரும் பொருத்தமான வாசகங்களைக் கொண்டுள்ளது - போர் முடிந்து 4 வருடங்களுக்குப் பிறகும்கூட அரசு இன்று சில பகுதிகளை உயர் பாதுகாப்பு பிரதேசமெனவும் மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசமெனவும் கூறி மக்களை அங்கு குடியேற விடாமல் தடுத்து வருகின்றது. உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் காணி உரிமையாளர்களிடமிருந்து நிலங்கள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு ஜனநாயக அரசுக்கும் உரிய நடைமுறைகளைக் கைக்கொள்ளாமல் நிலத்தைச் சுவீகரிப்பதற்கு உரிமை இல்லை. தனியார் சொத்துடமையை அரசாங்கம் மதித்து அந்தச் சொத்துக்கள் உரியவர்களுக்குச் சென்றடைவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். இந்த நிலங்களில் இருந்து வெளியேறியவர்களில் பலர் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அரசினுடைய நில சுவீகரிப்பு மீள்குடியிருப்பு தொடர்பான பயங்கரமான விதிமுறைகள் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைத் தமது செழிப்பான விவசாய நிலங்களிலும் மீன்பிடிப் பிரதேசங்களிலிருந்தும் ஜீவனோபாயங்களை இழந்து வெளியேற வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. வலுக்கட்டாயமாக நிலத்தை வடக்கு கிழக்குப் பகுதியிலிருந்து சுவீகரித்து அதனை அரச தேவைக்காகப் பயன்படுத்துவது பற்றி எமது அதி விசேட கவனத்தைச் செலுத்தவேண்டியுள்ளது. வடக்குக் கிழக்கிலுள்ள மொழி, கலாசாரம், தனித்துவங்களைக் கருத்திற் கொண்டு இப்பகுதியிலுள்ள நில உரிமை, அதிகாரம், பாவனை தொடர்பான கொள்கைகளில் சீர்திருத்தங்கள் ஏற்பட்டாலன்றி சமாதானதை ஏற்படுத்துவதென்பது முடியாததொன்றாகும்

6. எதிர்கால அபிவிருத்தி தொடர்பான 2014-16 ஆண்டுக்கான மத்தியகால முதலீட்டுத் திட்டம் குழப்பநிலை ஏற்படுத்துகின்றது. இது தமிழ் தேசியக் கூட்டமைப்பு சென்ற தேர்தலின்போது மக்களிடம் பெற்ற ஆணையை உதாசீனம் செய்வதாக அமைந்துள்ளது. அதாவது போருக்குப் பின்னரான மக்களின் தேவைகள், போரினால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலான தேவைகள் இங்கு கவனத்தில் கொள்ளப் படவில்லை. இது தொடர்பாக 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதியிடப்பட்ட உங்கள் கடிதத்தைக் குறிப்பிட்டு 2014 ஏப்ரல் 21ஆம் திகதி நடந்த முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் கீழ் அமைந்துள்ள வடமாகாணசபையின் சார்பாக ஜனநாயக ரீதியில் எமக்குத் தேர்தலில் கிடைத்த வெற்றியையும் அதன் நிமித்தம் மஹிந்த சிந்தனையை வடமாகாணத்தில் பிரயோகிப்பது தொடர்பாக மீளாய்வு செய்ய வேண்டிய அவசியம் பற்றியும் வலியுறுத்தியிருந்தேன். மஹிந்த சிந்தனையானது இன்று வடமாகாண மக்களின் மிகப்பெரும் பகுதியினரால் நிராகரிக்கப்பட்ட சிந்தனையாகும் என்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன.

7. இந்தநிலையில் இப்பொழுது அழைக்கப்பட்ட கூட்டமானது ஒரு சட்டபூர்வமான முன்னேற்றத்திற்காகவென வெளிப்படைத் தன்மை உடையதாகவோ அல்லது ஒற்றுமை அடிப்படையிலானதாகவோ இல்லை என்று தெளிவாகத் தெரிகின்றது. தேர்தலில் ஏமாற்றில் ஈடுபடுவர்களுக்காக வேண்டி வடமாகாண மக்கள் தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்குத் தங்களின் வாக்குகளை அளிக்கவில்லை. ஏற்கனவே கூறியது போன்று இந்த காணி உரிமையாளர்கள் சட்டபூர்வ அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும்கூட இங்கு ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மறைக்கும் விதமாக இதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழாவில் பங்குபற்றுவதன் மூலம் வடமாகாணசபை இத்தவறை மறைக்க விரும்பவில்லை.

8. மேற்கூறிய விடயங்கள் அந்தந்தப் பின்னணிகளில் வைத்து ஆராயப்பட வேண்டியனவாகும். 2014 ஜனவரி 2ஆம் திகதி மாண்புமிகு நீங்கள் வடமாகாணசபையின் ஆரோக்கியமான செயற்பாட்டுக்காக ஒரு சில விடயங்களைச் செய்வதாக ஏற்றுக் கொண்டீர்கள். அவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை. ஜனவரி 2ஆம் திகதி அன்று உரையாடப்பட்ட விடயங்களைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு 2014 ஜனவரி 26ஆம் திகதியிடப்பட்ட எனது கடிதத்தின் மூலம் அனுப்பியிருந்தேன். (அதன் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது). இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை. இராணுவ அமைப்பைச் சேர்ந்த ஆளுநர் மாற்றி அழைக்கப்படுவார் எனக் கூறியதால் ஜூலை மாதம் வரையும் நாம் காத்திருந்தோம். ஏமாற்றப்பட்டோம். 27.07.2014 ஆம் திகதியன்று அதே ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி பேசப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதில் தங்களுக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் தெரிவித்திருந்தேன். குறிப்பாக 2014 ஓகஸ்ட் நடைபெறுவதற்காக வேண்டி அட்டவணைப் படுத்தப்பட்டிருந்த முதலமைச்சர்கள் கூட்டம் தொடர்பாக நான் மூன்று விடயங்களை வடமாகாண சபையின் திறமையான செயற்பாட்டுக்காக வேண்டி உங்களிடம் கேட்டிருந்தேன். அதாவது

1. வடமாகாண ஆளுநரையும் பிரதம செயலாளரையும் மாற்றுதல்.

2. ஜனாதிபதி செயலணியின் செயற்திட்டங்களை வடமாகாண சபைக்கு மாற்றுவது.

3. வடமாகாணத்தின் பல்வேறுபட்ட தேவைகளைக் கணிப்பீடு செய்வது. இம்மூன்றையும் செய்வதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டிருந்தேன். இத்துடன் நான் தொடர்பாடிய விடயங்களை உங்கள் பார்வைக்காக இணைத்து அனுப்புகின்றேன். இன்று வரை இவை தொடர்பான எதுவித பதிலும் உங்களிடமிருந்து கிடைக்கவில்லை என்பதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன். இந்தியப் பிரதமர் மோடி அவர்களைச் சந்திப்பதற்காகச் சென்ற மேன்மை தங்கிய உங்களுடன் என்னையும் வருமாறு அழைக்கப்பட்ட கடிதத்திற்கு நான் பதில் அனுப்பியபோது எனக்குள்ள அக்கறையை வலியுறுத்தியும் அவ்வாறு செய்வதனூடாக நான் எனது ஒத்துழைப்பை உங்களது செயற்பாடுகளுக்கு வழங்குகின்றேன் என்ற ஒரு மாயையைத் தவிர்ப்பதற்காக வேண்டி அந்த அழைப்பை நான் நிராகரித்தேன்.

9. மிகவும் அவதானமாக எமது மந்திரிகள் குழாமுடனும் மாகாணசபை தலைவருடனும் மேற்படி உங்கள் கூட்டம் தொடர்பாகக் கலந்துறவாடி வடமாகாணசபையும் வடமாகாண மக்களும் ஓரம் கட்டப்பட்டுள்ள இந்நிலையில் மேற்படி ஒக்ரோபர் 13ஆம் திகதிய கூட்டத்திலோ அரசியல் தொடர்பாக வடமாகாணத்தில் நடைபெறவுள்ள ஏனைய கூட்டங்களிலோ கலந்து கொள்வது அர்த்தமற்றதொன்றாகின்றது என்று தீர்மானித்துள்ளோம்.

10. வடமாகாணசபையை நீங்கள் புறக்கணித்தமையானது 13ஆவது திருத்தத்திலுள்ள நடைமுறைச் சிக்கல்களையும் வெறுமையினையும் காட்டி நிற்கின்றது. அரசாங்க விளம்பரங்களின் படி வடமாகாணசபை 2014ஆம் ஆண்டிலிருந்து 6 பில்லியன்கள் ரூபாவைப் பெற்றிருந்ததாகவும் அதில் ஒரு சிறு பகுதியை மட்டுமே மேற்படி சபை பயன்படுத்தியதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் வடமாகாணசபைக்கு 1875 மில்லியன்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக 3955 மில்லியன்கள் நேரடியாக மத்திய அரசினால் பயன்படுத்தப்பட்டதொன்றாகும். வடமாகாணசபை பொறுப்புடனும் விழிப்புடனும் செயற்பட்டு தமக்கென ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்திவருகிறது. இராணுவ ஆளுநர் ஒருவர் தொடர்ந்து இங்கு இருப்பதும், சட்டவிரோதமாக வெளிப்படையாகவே எதிர்ப்பைத் தெரிவித்து ஒத்துழைப்பு நல்காத பிரதம செயலாளர் பதவியில் தொடர்ந்திருப்பதும், தொடர்ந்தும் வடமாகாணம் இராணுவமயப்படுதலும், மாகாணசபை ஒதுக்கப்படுதலும், அரச அதிபர் போன்ற மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள் போன்றவர்களின் செயற்பாடுகள் மாகாணசபையின் செயற்பாடுகளுள் உள்நுழைவதும் வடமாகாண பிரதேச எல்லைகளுக்குள் அனுமதிக்கப்பட்டிருக்கும் காணிகள் கபளீகரமும் கணிக்கப்பட முடியாத பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இவையாவும் 2009 மே மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் முன்பாகவும் 2010 ஜனவரியில் இந்தியப் பிரதம மந்திரி முன்பாகவும் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு மேலதிகமாகச் செயற்பட இருப்பதாக தாங்கள் அளித்த வாக்குறுதியையும் மீறிய செயல்களாகும். மிக அண்மையில் 2014 செப்ரெம்பர் மாதத்தில் ஐ.நா. பொதுச்சபையில் தாங்கள் இலங்கையில் வடமாகாணத்தில் ஜனநாயக அமைப்புக்கள் மீள அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளீர்கள். ஆனால் ஜனநாயகம் என்பது தேர்தல்களை நடத்துவதற்கு மேலாகச் சென்று தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் கடமைகளை எந்தத் தலையீடும் இல்லாமல் மக்கள் ஆணைப் படி அவர்கள் இறைமையை ஏற்று செயற்படுத்தலாகும் என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை.

11. நாம் ஒரு வருடம் பதவியில் இருந்து வந்துள்ள இன்றைய நிலையில் வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் கூட மாகாண சபை ஆட்சி முறைமை எமது ஒற்றையாட்சி முறைமையின் கீழ் ஓர் அதிகாரமற்ற ஒட்டை அமைப்பாகவே தென்படுகின்றது. தற்போதைய ஆட்சி முறையில் குறிப்பாக போருக்குப் பின், நிலையான அரசியல் தீர்வு எதுவுமற்ற நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாகாண சபையானது அதிகாரமற்றதொன்றாகவே தென்படுகின்றது.

12.. ஆகவே போரின் பின் தாங்கள் சர்வதேச சமூகத்திற்கும் இந்தியப் பிரதமருக்கும் வாக்குறுதி அளித்தது போல் 13வது திருத்தத்தின் அப்பால் சென்று அதைக் கட்டியெழுப்புவதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண முதலமைச்சர் என்ற ரீதியிலே தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். 1987ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் 13ஆவது திருத்தத்துக்கு வழிவகுத்தது. மேற்படி 13வது திருத்தச் சட்டத்தைக் கட்டியெழுப்பும் எமது தமிழ் மக்கள் கௌரவத்துடன் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வடக்கு-கிழக்கில் வாழக் கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்த உத்தரவாதம் அளிப்பார்கள் என இந்திய அரசிடம் இருந்து எதிர்பார்க்கின்றனர். எம்மைப் பொறுத்தவரையில் ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் சட்ட வரையறைகளை உணர்ந்தவர்கள் நாங்கள்.

13. எங்கள் மேல் நம்பிக்கை வைத்து, கடந்த மாகாணசபை தேர்தலில் இராணுவத்துடன் சேர்ந்து நடத்திய பல ஜனநாயக விரோத செயல்களையும் முறியடித்து எம்மை வடமாகாண சபைக்கு தெரிவுசெய்த மக்களுக்காக வேண்டி நான் இக் கடிதத்தை பகிரங்கப்படுத்துகிறேன். 2013 செப்ரெம்பர் தேர்தலில் எம்மை தேர்ந்தெடுத்த மக்களுக்காக அவர்களது தேவைகள், முன்னுரிமைகள் என்பவை பற்றி மத்திய அரசுடன் உரிய மரியாதையுடனும் ஒத்துழைப்புடனும் நாம் எவ்வாறு ஜனநாயக பாரம்பரியங்களை கடைப்பிடித்து செயற்பட்டோம் என்று இக்கடிதத்தினூடாக தெளிவாகின்றது. எமது மக்கள் நடப்பவற்றை அறிய சட்டரீதியான உரித்துடையவர்கள்.

14. மத்திய அரசாங்கத்தினுடைய அரச நிர்வாக, அரசியல் சிந்தனை பற்றாக் குறையாலும் அடம்பிடிக்கும் நிலையாலும் 2014 ஜனவரி 2ஆம் திகதி நடைபெற்ற எமது கூட்டத்தினதும் 2014 ஜூலை 26ஆம் திகதி நடைபெற்ற தொடர்பாடல் தொடர்பானதுமான அறிக்கையையும் இங்கே வெளியிடுவதினூடாக நாங்கள் அரசுடன் ஜனநாயக ரீதியாக நல்லாட்சி அடிப்படையில் இணைந்து செயற்பட எவ்வளவு அக்கறையாக இருக்கின்றோம்; இருந்திருக்கின்றோம் என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று நம்புகின்றோம்.-என்றுள்ளது. (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெறும் சலுகையும் அபிவிருத்தியும் மட்டுமல்ல தமிழர்களின் விருப்பு மஹிந்த இதைப் புரிந்துகொள்ள வேண்டும்

கொழும்பு அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஒரு தடவை வடக்குக்கு வருகை தரும் நிலையில், தமிழ் மக்களின் உண்மையான விருப்பம், எதிர்பார்ப்புக் குறித்து அவர் அக்கறை செலுத்துவது அவசியம்.

அரச தலைவரின் இந்த இருநாள் பயணம் சில சலுகைகளை வழங்குவதாகவும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளை மக்கள் பயன்பாட்டுக்கு வழங்குவதாகவும் திட்டமிடப்பட்டுள்ளது. காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவது, அரச ஊழியர்களுக்கு வரியில்லா மோட்டார் சைக்கிள்களை வழங்குவது, பாடசாலைகளில் அமைக்கப்பட்ட ஆய்வு கூடங்களைத் திறப்பது, கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டச் செயலகத்தை (கச்சேரி) திறப்பது என அவரது பயணம் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று எதிர்பார்க்கப்படுகையில் நடத்தப்படும் இந்த நிகழ்வுகள் அனைத்தும் அதனை இலக்கு வைத்தது என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. ஆக, அபிவி ருத்தி என்பதை முன்வைத்தே வர இருக்கும் ஜனாதிபதித் தேர்தலையும் மஹிந்த எதிர்கொள்ளப்போகிறார்.

அவரது கொழும்பு அரசு மேற்கொண்ட அபிவிருத்திகள் மட்டும் தமக்குப் போதுமானவையல்ல என்று தெட்டத் தெளிவாக மாகாண சபைத் தேர்தலில் வடக்கு மக்கள் முகத்திலறைந்து சொல்லிவிட்டபோதிலும் அபிவிருத்தி என்பதே மீண்டும் மஹிந்தவின் தேர்தல் முழக்கமாக இருக்கப்போகிறது. பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையொன்றின் கீழ் ஒரு கட்சியை 80 விழுக்காடு மக்கள் ஆத ரிப்பது என்பது சாதாரணமான விடயமல்ல. அரிதிலும் அரிதாக நடப்பது அது. அப்படியான ஒற்றுமையுடன் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் கொழும்பு அரசுக்கு வெளிப்படுத்திய செய்தியை மஹிந்த புரிந்துகொள்ளத் தவறியிருப்பது துரதிர்ஷ்ட வசமானது.

அபிவிருத்தி மட்டுமே போதுமானதல்ல என்ற தமிழர்களின் திட்டவட்டமான கருத்தை மஹிந்த தொடர்ந்து புறந்தள்ளுவது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கும் அமைதிக்கும் கடும் பங்கம் விளைவிக்கும். கொழும்பு அர சின் ஒரே நாடு என்ற கொள்கைக்கும் ஆபத் தாகவே முடியும்.

சலுகைகள், அபிவிருத்தி என்பவற்றையும் மீறி உரிமைகளே தமக்கு முக்கியமானவை என்று ஒவ்வொரு தேர்தலின் போதும் தமிழர்கள் ஜனநாயக ரீதியில் தெரிவிக்கும் கருத்துக்களுக் குச் செவிசாய்க்க வேண்டியது கட்டாயம் என்பதை மஹிந்த புரிந்துகொள்ள வேண்டும். அப்படியானால் மட்டுமே தமிழர்களின் வாக்குகளை பெறுவது குறித்து அற்பசொற்ப சிந்தனைகளையாவது அவர் கொண்டிருக்க முடியும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு மஹிந்த ஆரம்பிக்கும் இந்தப் பய ணம் பயனுள்ளதாக அமைய வேண்டுமானால் சலுகை, அபிவிருத்தி என்பவற்றுக்கு அப்பால் சென்று தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதாக - அதிகாரங்களைப் பகிர்ந்து கொள் வதற்கான முதல் படியாக அது அமைந்தால் மட்டுமே வெற்றிகரமானதாக இருக்கும்.

இதனைக் கருத்தில்கொண்டு கிளிநொச்சியில் அல்லது யாழ்ப்பாணத்தில் நடக்கும் நிகழ்வில் வைத்து தமிழர்களுடன் உச்சபட்ச அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள தான் தயார் என்பதை மஹிந்த அறிவிக்க வேண்டும். அத்துடன் அதற்கான முதற்படியாக தமிழ்க் கட்சிகளுடன் மீண்டும் பேச்சை ஆரம்பிக்கவும் முன்வர வேண்டும். அதைச் செய்யாமல் தமிழர்களின் ஆதரவைத் தேர்தலில் எதிர்பார்ப்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைபபடுவதற்கு ஒப்பாகிவிடும்.

# நியூயோர்க்கில் மோடியும் மஹிந்தவும் சர்வதேச ஊடகங்களின் பார்வையில்

## ஒபாமாவின் விருந்தை சுவை பார்த்தார் ஒருவர்

சிங்கள மூலம்: லங்காதீப
தமிழில் தொகுப்பு: சரா

இம்முறை நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 69 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றிருந்த உலக அரசியல் தலைவர்கள் மத்தியில் அமெரிக்காவை கடுமையாக விமர்சித்து வரும் சிலரும் காணப்பட்டனர். அத்தகைய தலைவர்கள், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் விருந்துண்டு மகிழ்ந்தனர். அது மட்டுமன்றி அவர்கள் குடும்பமாக ஒபாமா தம்பதியருடன் ஒளிப்படமும் எடுத்துக்கொண்டனர். ஆனால் ஆசியாவின் காலத்தால் முந்திய ஜனநாயக நாடான இந்தியாவில் இன்றைய பிரதமர் நரேந்திரமோடிக்கு விருந்துக்கான அமெரிக்க ஜனாதிபதியின் விசேட அழைப்பு கிடைத்திருந்ததால், சம்பிரதாயத்துக்கு அவர் நிகழ்வில் கலந்து கொண்டபோதிலும் ஒபாமாவின் அறுசுவை விருந்தை அவர் தொட்டும் பார்க்கவில்லை. கடும் விரதமொன்றை மேற்கொண்டிருந்தவேளை ஒன்றிலேயே அவர் அமெரிக்கா செல்ல வேண்டி இருந்தது. அந்த விரத அனுட்டானத்துக்கு அமைவாக எலுமிச்சை சாறு கலந்த பானம் மாத்திரமே அவர் அருந்தியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே நரேந்திர மோடி பிரதமர் பதவியில் அமர்வதற்கு முன்னர் அமெரிக்காவில் உள்நுழைவதற்கு அந்த நாடு அவருக்கு விசா (நுழைவு விசைவு) வழங்க மறுத்திருந்தமைக்கும் மோடி ஒபாமாவின் விருந்தைத் தொட்டும் கூட பார்க்காமைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. மோடி விருந்தை மறுதலித்திருந்தமைக்கு அது ஒரு காரணமே இல்லை என்பதையும் அந்த ஊடகங்கள் தெளிவுபடுத்தியிருந்தன.

### பிரதமர் மோடியும் ஜனாதிபதி மஹிந்தவும்

இந்த மோடி என்பவர் அமெரிக்காவின் தாளத்துக்கு ஏற்ப 'ஆடக்கூடிய நபரல்ல என்பதை. தாம் நேரிலேயே கண்டுணர்ந்து கொண்டதாக தமது விமர்சனக் கண்ணோட்டத்தில் ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். எப்படியாவது அமெரிக்காவை தமது கைக்குள் போட்டுக்கொள்வதற்குப் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டுவரும் நாடுகளின் தலைவர்கள் அமெரிக்காவுக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் தெரிவித்து விருந்துண்டு மகிழ்ந்தனர் எனவும் அந்த ஊடகவியலாளர் குறிப்பிட்டிருந்தார். எடுத்ததற்கெல்லாம் அமெரிக்கா மீது குற்றம் சுமத்தி கடுமையாகச் சாடி வரும் நாடுகளில் ஒன்றான இலங்கையின் அரச தலைவரான மஹிந்த ராஜபக்ஷ தமது நியூயோர்க்குக்கான பயணத்தின்போது ஜனாதிபதி ஒபாமா வழங்கிய விருந்தைச் சுவைத்து உண்டமை



மட்டுமல்லாமல் ஒபாமா தம்பதியருடன் குடும்பமாக ஒளிப்படம் ஒன்றையும் எடுத்துக் கொள்ளத் தவறவில்லை.

எவ்வாறோ, நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி மற்றும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்ற இந்த இருவரதும் பிரதிபலிப்புக்கள் இவ்விதம் இருந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

இதனிடையே பிரதமர் மோடியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நியூயோர்க்கில் சந்தித்துக்கொண்டபோது இரு நாட்டு அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாக சில முக்கிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

### அமெரிக்காவின் நகர்வுகள்

நியூயோர்க்கில் ஐ.நா. சபையின் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இஸ்லாமிய கடும்போக்கு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பை உண்டு இல்லையென்றாக்கி விடும் தாக்குதல் நடவடிக்கையொன்றை அமெரிக்க அதிபர் ஒபாமா களமிறக்கி இருந்தார். அதேவேளை அமெரிக்க அரசு கீழ்க்குறிப்பிட்ட விதத்திலும் தெரிவித்திருந்தது.

"அமெரிக்காவில் எந்தவொரு தீவிரவாத அமைப்பும் செயற்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஆனால் அமெரிக்காவுக்கு வெளியே பல்வேறு நாடுகளிலும் செயற்பட்டுவரும் தீவிரவாதக் கும்பல்களை வேரோடு அழித்து விடுவதென்பது இலேசான கருமமாக இருக்கமாட்டாது" எனவும் குறிப்பிட்டிருந்தது.

இதுஇவ்வாறிருக்கஇலங்கை அரசை நலிவுபடுத்துவதோ அல்லது ஆட்சியைக் கவிழ்த்து விடுவதோ தமது நோக்கமல்ல எனவும் அமெரிக்காவின் ராஜாங்கத் திணைக்களம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. அமெரிக்காவின் நிலைப்பாடு பற்றி இவ்விதம் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்த சில சர்வதேச ஊடகங்கள் ரஷ்ய அதிபர் புடினின் இலங்கைப் பயணம் பற்றியும் அந்தப் பயணத்தின்போது இலங்கை அரசுடன் ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் சிலவற்றில் ரஷ்யா கைச்சாத்திடுவதற்கு தீர்மானித்திருப்பது அமெரிக்காவின் எதிர்ப்புக்குப் பாத்திரமாகியிருக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளன. இதேவேளை அமெரிக்க விமானம் ஒன்றில் சீன ஜனாதிபதி இலங்கை சென் றடைந்திருந்தமை சம்பந்தமாகவும் இந்த வாரத்தில் சர்வதேச ஊடகங்கள் பலதரப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தன. அதாவது, அமெரிக்காவின் போயிங் நிறுவனத்தின் தயாரிப்பான விமானம் ஒன்றிலேயே சீன ஜனாதிபதி இலங்கை சென்றடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### உலகச் செய்தித்தாள்களின் இலங்கை பற்றிய கண்ணோட்டம்

தமது நாட்டு மக்கள் தமக்குக் காட்டியிருந்த பிரதிபலிப்பு சம்பந்தமாக கடும் கோபத்துடனேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க் வந்திருந்ததாக உலகின் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றான 'நியூயோர்க் ரைம்ஸ்' தெரிவித்திருந்தது. இலங்கையில் நடந்து முடிந்திருந்த ஊவா மாகாணசபை தேர்தலின் பெறுபேறுகள் பற்றிய கணிப்பீட்டை முன்வைத்தே சர்வதேச ஊடகங்கள் இவ்விதமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தன. மேலும் போர் இடம்பெற்ற காலகட்டத்தில் உறவினர் உபசரிப்புக்கள் மற்றும் தமக்கு எதிரான அரசியல் கட்சிகளிலுள்ள நபர்களைத் தம் பக்கம் இழுத்துக் கொண்டதால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாக நேர்ந்ததாக இந்த சர்வதேச ஊடகங்கள் கருத்து வெளிப்படுத்துகின்றன.

ஊவா மாகாணசபைத் தேர்தலின் மூலம் இலங்கை மக்கள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு சிவப்பு விளக்குச் சமிக்ஞையைக் காட்டியிருப்ப தாகவும் போர் வெற்றிக் குப் பின்னர் நாட்டு மக் களின் வயிற்றில் விழுந்துள்ள பொருளாதார வெறுமை காரணமான அடியே மஹிந்த ராஜபக்ஷவுக்கிருந்த ஆதரவை நலிவடையச் செய்துள்ளதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' தெரிவிக்கிறது.

### மூன்றாவது தடவையும் ஆட்சிக்கு வருவாரா? மஹிந்த

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாக இயந்திரம் இன்று இலங்கை மக்களின் சவாலுக்கு உள்ளாகியிருப்பதாகவும், மஹிந்த மூன்றாவது தடவையும் ஜனாதிபதிப் பதவியில் அமரவேண்டுமானால் அவர் பெரும் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டிய கட்டத்தில் இருப்பதாகவும் 'நியூயோர்க் ரைம்ஸ், இந்தியா எபோர்ட், வொஷிங்டன் ரைம்ஸ், இந்தியன் எக்ஸ்பிரஷ், லாபிகாரோ' உட்பட்ட பெரும்ளவிலான சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நல்ல ஆலோசகர்கள் எவருமே இல்லை எனவும் அவரது அமைச்சரவையில் இருப்போரில் பெருமளவிலானோர் நாட்டுக்கு வேண்டாத, கழித்து ஒதுக்கிவிடப் பட்டிருப்போரே ஊழல்கள் மலிந்த, மக்கள் பணத்தைச் சூறையாடும், நாட்டைக் குட்டிச் சுவராக்கி ஏப்பம் விடுபவர்களாகியிருப்பது அவர் இடறி விழுந்துள்ள இன்னுமோர் இடம் எனவும் இந்த சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 188

# முதுமையின் விடியல் யார் கைகளில்?

ஒரு மனிதன் சிசுவாகக் கருத்தரித்த நாளிலிருந்து மரணிக்கும்வரை பல விடயங்களை புதிது புதிதாகக் கற்றுக் கொண்டே இருக்கிறான்.

அன்னையினுடைய கருப்பையிலே சிசுவாக இருக்கும் அந்தச் சிறிய மனிதன் கிரகித்துக் கொண்டிருக்கும் விடயங்கள் ஏராளம்.

அதேபோல மரணப்படுக்கையிலும் முன்பு தெரிந்திராத பல விடயங்களையும் அனுபவங்களையும் அவன் கற்றுக் கொள்கிறான்.

ஒரு மனிதன் தனது வாழ்க்கைக் காலத்திலே பெற்றுக் கொண்ட அனுபவத்தையும் அறிவையும் இன்னொரு மனிதன் அப்படியே உள்வாங்கி அறிந்து வாழ்க்கையை அதிலிருந்து தொடர முடியுமாக இருந்தால் மனித சமுதாயம் எவ்வளவோ முதிர்ச்சி பெற்றிருக்கும்; முன்னேறியிருக்கும்.

ஆனால் எமது முன்னோர்கள் தமது வாழ்க்கையிலே பெற்ற அனுபவத்தை உள்வாங்கிக் கொள்ளும் வல்லமையை நாம் வளர்த்துக் கொள்ளவில்லை, வளர்த்துக் கொள்ள நாம் விருப்பப்படவுமில்லை. நாம் புதிதாக அனுபவப்பட்டுத் தெளியவே ஆசைப்படுகிறோம்.

மனிதன் இந்தப் பூவுலகிலே தோற்றம் பெற்று 50 ஆயிரம் வருடங்கள் நிறைவடைந்திருக்கின்றன. அதாவது 2 ஆயிரம் தலைமுறையினர் வாழ்ந்து முடித்திருக்கிறார்கள். இந்த 2ஆயிரம் தலைமுறையினரும் வாழ்க்கையில் பெற்ற அறிவும் அனுபவமும் நம்மிடம் இருக்கிறதா? அவற்றுக்கு என்ன நடந்தது. இதனால்தான் "கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு" என்று சொல்லுவார்கள்.

எமது முன்னோர்களினது வாழ்க்கை அனுபவங்களையும் அறிவையும் அப்படியே நாம் பெற்றிருந்தால் நாம் கற்றுக் கொண்டது உண்மையிலேயே உலகளவாகக் கூட இருந்திருக்கலாம்.

எம்மைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் முதியவர்கள் ஒவ்வொருவரும் அனுபவ பொக்கிசங்கள். அவர்களிடம் குவிந்திருக்கும் அனுபவ அறிவு அளவு கடந்தது. அது எமக்குத் தெரியாது. அதை நாம் முற்றாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை.

இன்றைய கால கட்டத்திலே இந்த அனுபவம் மிக்க முதியவர்களுக்குரிய இடமும் கௌரவமும் வழங்கப்படுகிறதா?

ஏட்டிலும் எழுத்திலும் இலக்கியங்களிலும் இந்த பெரியவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கௌரவம் நடைமுறை வாழ்க்கையில் வழங்கப்படுகிறதா?

அவர்கள் ஆரோக்கியமாக வாழக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா?

### ஆரோக்கியம் என்றால் என்ன?

உலக சுகாதார விற்பன்னர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை என்பது ஒருவர் உடல் உள சமூக ஆன்மிக நன்னிலையுடன் வாழும் வாழ்க்கை என்று வரை விலக்கணப்படுத்தி இருக்கிறார்கள்.

எமது முதியவர்கள் உடல் ரீதியாகவும் மனநிலை ரீதியாகவும் ஆரோக்கியமாக வாழ்கிறார்களா? சமூகத்திலே அவர்களுக்கு உரிய நிலை வழங்கப்படுகிறதா? அவர்களின் ஆன்மிக சிந்தனைகள் திருப்திகரமாக இருக்கின்றதா? அவர்களின் சிந்தனைகள் மதிக்கப்படுகின்றனவா?

சிறு குழந்தைகள் போலவே வயதானவர்களும் இலகுவில் நோய்வாய்ப்படும் தன்மை உடையவர்கள். சிறுவர்களுக்கு வழங்கப்படும் அதே கவனிப்பு முறைகள் முதியவர்களுக்கும் வழங்கப்படுகிறதா? அவர்களுக்கு பாலையும் முட்டையையும் கொடுக்க நாம் ஏன் பயப்படுகின்றோம்?

சிறுவர்களின் உணவு முறையில் காட்டப்படும் அக்கறை முதியவர்களின் உணவு முறையிலும் கடைப்பிடிக்கப்படுகிறதா? அல்லது அவர்கள் மிஞ்சிய உணவைத்தான் உண்ணுகிறார்களா?

முதியவர்களுக்கு உரிய நேரத்தில் அவர்கள் உள்ளெடுக்க வேண்டிய மருந்து மாத்திரைகளை அக்கறையோடு எடுத்துக் கொடுத்து உதவ போதுமான ஆளுதவி இருக்கிறதா? அல்லது அவர்கள் தாமாகவே எடுக்கும் மருந்துகள் சரியான முறையில் எடுக்கப்படுகிறதா என்பதை சரி பார்ப்பதில் ஆர்வம் காட்டுகிறோமா?

தேவை ஏற்படும் பொழுது அவர்களை மருத்துவ நிலையத்துக்கு அழைத்துச் செல்ல, ஆதரவளிக்க போதுமான ஆளுதவி இருக்கிறதா? போக்குவரத்தின் பொழுது முதியவர்களுக்கு நாம் என்ன உதவிகளைச் செய்கிறோம்.

அவர்களுடன் ஆற அமர இருந்து பேசி அவர்களின் மன உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள எவ்வளவு நேரத்தை ஒதுக்கிக்கொள்கிறோம்?

இந்த மன உணர்வுப் பகிர்வுகள் அவர்களின் உள ஆரோக்கியத்துக்கு இன்றி அமையாதது என்பதைப் புரிந்து வைத்திருக்கிறோமா?

அவர்களின் சொந்த விருப்பு வெறுப்புகள் மதிக்கப்படாமல் நாம் இட்ட சட்ட வரையறைக்குள் அவர்கள் வாழ்ந்து முடிக்கவேண்டும் என்று எண்ணிக்கொள்கிறோமா?

இவ்வாறாக தொடர்ச்சியான பல வினாக்கள் எம் மனதிலே எழுந்த வண்ணமே இருக்கின்றன.

பல விடயங்களை கவனித்து பலரை வழி நடத்தி இந்த பரந்த பூமியிலே வாழ்ந்தவர்களின் உலகம், சொந்த வீடும் அதன் சுற்று வட்டாரமும் என சுருங்கிவிட, அவர்களின் மன உணர்வுகளைப்புரிந்து கொள்ளாது வீட்டு விடயங்களில்கூட தலையிடவேண்டாம் என்று கேட்டுக்கொள்வது எவ்வளவு தூரம் நியாயமானதாகும்.

அப்படியென்றால் அவர்கள் எதைப்பற்றி பேசிக் கொள்வது?

சிறுவர்கள் போலவே முதியவர்களும் பிடிவாதத் தன்மை உடையவர்கள். இது கடவுளின் இயற்கை. எனவே இந்த யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு சிறுவர்களைப் புரிந்துகொள்வது போல எமக்கு பெரியவர்களையும் புரிந்து கொள்ள முடியாமல் போனதன் காரணம் என்ன?

சிறுவர் பாதுகாப்பு, மாணவர் உரிமை, பெண்கள் உரிமை என பல தரப்பினரையும் பாதுகாப்பதற்கு பல அமைப்புகள் உருவாக்கப்பட்டு இருக்கும் இன்றைய கால கட்டத்திலே முதியவர்களின் உரி



மைக்கும் பாதுகாப்புக்கும் என பலமான அமைப்புக்கள் எதுவும் உருவாக்கப்படாமல் போனதன் காரணம் என்ன?

இவர்களை பிரயோசனங்கள் அனைத்தையும் பிழிந்து எடுத்தபின் வீசி எறியும் சக்கைகளாக நாம் கருதுகிறோமா?

இவற்றுக்கு எல்லாம் எப்போது விடை காணப்போகிறோம்?

இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக சிந்திக்கும்பொழுது எங்கோ தவறு நடந்து கொண்டிருக்கிறது போலத் தோன்றுகிறது. இவற்றுக்கு யார் பொறுப்பு? இவற்றை நிவர்த்திக்க நடவடிக்கையை எங்கிருந்து ஆரம்பிப்பது எங்கே முடிப்பது?

இன்றைய நிலையிலே முதியவர்கள் அனைவரும் சுற்றவாளிகளாக இருக்க மற்றைய அனைவரையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதா? என்று சிந்திக்க வேண்டும்.

இன்று முதியவர்களாக இருப்பவர்கள் அன்றொரு நாள் மாணவர்களாகவும், பெற்றோர்களாகவும், பெரியவர்களாகவும் இருந்தவர்கள் தான். அவர்கள்தான் இந்த இன்றைய இளைய சமுதாயத்தைச் செதுக்கி எடுத்திருக்கிறார்கள்.

அவர்களைப் பார்த்துத்தான் இன்றைய இளைய சமுதாயம் வளர்ந்து வந்திருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ அறியாமையினாலோ அல்லது அனுபவமின்மையினாலோ தவறுகள் நடக்கலாம். ஆனால் எமது இளம் சமுதாயத்தினர் முதியவர்களை வேண்டுமென்றே துன்புறுத்துமளவுக்கு மோசமானவர்கள் அல்லர்.

எமது மக்கள் தமது தாய், தந்தையர், பேரன், பேர்த்தி மற்றும் ஏனைய முதியவர்களிடத்தில் உண்மையான அளவு கடந்த அன்பும் பாசமும் வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதனை வெளிக்காட்டத்தெரிவதில்லை.

"கண் தெரியாமல் ஏன் வீதியில் வெளிக்கிட்டனி? நல்லாய் வாகனத்திலே அடிபட்டுசா" என்று முதியவர்களுக்கு ஏச்சுப் பேச்சு விழும். பேசுபவரின் உண்மையான மன நிலை சில சமயம் எமக்குப் புரியாமல் போகும். "அப்பா! பாவம் உனக்கு கண்ணும் தெரியாது. உன்னை வாகனம் ஏதும் அடிச்சுப் போட்டால் என்னால தாங்க முடியாது. ஏதும் தேவையென்றால் கேள், நான் செய்து விடுகிறேன்" என்று நயமாகச் சொல்ல எமக்குத் தெரியாது. அதனை நாம் வெளிப்படுத்தும் விதம் வித்தியாசமானது.

ஒவ்வொரு முதியவரும் மரணப்படுக்கையிலே இருக்கும் பொழுது சுற்றி நின்று கதறும் சுற்றத்தைப் பார்த்து தாங்கி ஜீரணித்துக் கொள்வது மிகவும் வேதனையானது.

அவர்களின் இந்தக் கதறல் போலியானவை அல்ல. இவ்வளவு நாளும் இந்தப் பாசத்தையும் அக்கறையையும் எங்கே பூட்டி வைத்திருந்தார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கும். மேலைத்தேய நாடுகளிலே இதனை நாம் காண முடியாது.

மேலைத்தேய நாடுகளிலே முதியவர்களுக்கு பல வசதிகளும் சட்ட ரீதியான பாதுகாப்புகளும் அதிகளவில் இருக்கின்ற போதிலும் இவ்வாறான உண்மையான அன்பும் இறுக்கமான பாசப்பிணைப்பும் அவர்களுக்கு இருக்கிறதா என்றொரு கேள்வி எழுகிறது.

முதியவர்களின் கவனிப்பிலே ஒரு தனி மனிதனின் பங்களிப்பு எமது சமுதாயத்திலே மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது.

எமது மக்கள் ஒவ்வொருவரும் பல முதியவர்களை ஏதோ ஒரு வகையில் பொறுப்பெடுத்து கவனித்து வருகிறார்கள்.

இத்தகைய பொறுப்பு மேலைத்தேய மக்கள் இடையே இல்லை. அங்கே அரசே முக்கியமாக அவர்களைப் பொறுப்பெடுத்து பார்த்துக் கொள்கிறது.

இங்கே ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த வேலைப் பளுவுக்கும் கடமைகளுக்கும் மத்தியில் பல பெரியவர்களைத் தம்மால் இயன்ற அளவு ப்ராமரித்துத்தான் வருகிறார்கள்.

ஆனால் ஒரு புரிந்துணர்வற்ற நிலை காரணமாக பல சந்தர்ப்பங்களிலே ஒரு மனக் கசப்பு நிலை தோன்றி வரு கிறது.

உலகம் தொடர்ச்சியாக மாறிக் கொண்டே இருக்கிறது. நேற்று சரியாக இருந்த பல விடயங்கள் இன்று பிழைகளாகிப் போகலாம்.

இன்று நாம் புனிதமென்று போற்றிக் கொண்டிருக்கும் பல் விடயங்களை நாளைய சமுதாயம் ஏற்றுக் கொள்ளாமல் போகலாம்.

இதனைச் சமுதாய இடைவெளி என்று சொல்வார்கள். நாம் சிந்திப்பது போலவே எமது அடுத்த சந்ததியும் சிந்திக்க வேண்டும் என்று நினைப்பது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இந்தச் சமுதாய இடைவெளி சிந்தனை மாற்றத்தை முதியவர்களினால் சில சமயம் சகித்துக் கொள்வது கடினமானதாக இருக்கும்.

எனவே சமுதாய இடைவெளி சிந்தனை மாற்றங்களை ஏற்றுக் கொள்வதற்கு நாம் எமது மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எமது கலாசார பாரம்பரியங்களை விட்டுக் கொடுக்காது சில மாற்றங்களை ஏற்றுக் கொள்வதை தவறு என்று கருதமுடியாது.

அதைப் போன்றே இளைய தலைமுறையினரும் முதியவர்களின் சில அன்றாட நடவடிக்கைகளை மாற்றி அமைப்பதற்கு கடும் முயற்சி எடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

முதியவர்களின் வாழ்க்கை நடைமுறைகளை மாற்றி அமைக்க முயற்சி எடுப்பது பலவிதமான மனக்கசப்புக்களை ஏற்படுத்தும். அவர்களின் மனப்பதிவுகளையும் நடைமுறைகளையும் ஒரு புதிய ஒழுங்கிலே மாற்றி அமைப்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

முதியவர்களின் மூளையின் தொழிற்பாட்டு கட்டமைப்பு இவ்வகையான நடைமுறை மாற்றத்துக்கு இலகுவில் இடம் தராது.

எனவே நல்ல நோக்கத்துக்காகவேனும் அவர்களது அன்றாட நடவடிக்கைகளையும் சிந்தனைகளையும் மாற்றி அமைக்க முயல்வது அநாவசியமான மனக்கசப்புகளுக்கு வழிவகுக்கும்.

எமது சமுதாயத்திலே ஒப்பீட்டளவில் முதியவர்களின் எண்ணிக்கை மிகப் பெரியளவிலே அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது.

இதற்கு காரணங்கள் பல:

ஒன்று எமது மக்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளின் வீதம் குறைந்து வருகிறது. பல இளம் சமுதாயத்தினர் பிற நாடுகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எமது இளம் தலைமுறையினர் பலர் போரிலே கொல்லப்பட்டு விட்டார்கள்.

எனவே தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் இளம் சமுதாயத்தினர் ஒவ்வொருவரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பல முதியவர்களை பராமரிக்க வேண்டிய பெரும் பொறுப்பிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களைத் தொடர்ச்சியாக குற்றம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

நாம் எவ்வாறு முதியவர்களை கவனித்துக் கொள்கிறோம் என்பதை எமது அடுத்த தலைமுறை பார்த்துக் கொண்டிருக்கிறது. இதனைப் பார்த்துத்தான் எமது அடுத்த தலைமுறை முதியவர் கவனிப்பு சம்பந்தமாக கற்றுக் கொள்ளப்போகிறது.

எனவே நாம் எமது முதியவர்களுக்கு வழங்கும் அதே கவனிப்பையே எழக்கும் எமது அடுத்த தலைமுறையினர் வழங்குவார்கள் என்பது உறுதி.

வாழும் காலத்திலே எமது கல்வியிலே அக்கறை செலுத்துகிறோம். எமது பிள்ளைகளின் கல்வியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை செலுத்துகிறோம். எமது சமுதாயத்தின் நல்வாழ்வில் அக்கறை செலுத்துகிறோம், சுற்றாடல் பாதுகாப்பில் அக்கறை செலுத்துகிறோம். ஆனால் எமது முதுமைக் காலத்தை திட்டமிடுவதில் அக்கறை அற்றவர்களாக இருந்து விடுகிறோம்.

எனவே எமது முதுமைக் காலத்தை திட்டமிடுவதுடன் முதியவர்கள் ஒவ்வொருவரினது கவனிப்பிலும் எம்மால் இயன்றவரை பங்களிப்பை செலுத்த வேண்டும்.

முதியோரின் கவனிப்பையும் சுகாதாரத்தையும் மேம்படுத்த அனைத்து தரப்பினரதும் ஒன்றுபட்ட முயற்சி தேவையாக இருக்கிறது.

*மருத்துவர்*
*எஸ். சிவன்சுதன்,*
*பொது வைத்திய நிபுணர்,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.*

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

புரட்டாதி-27 திங்கட்கிழமை 13.10.2014
திதி: பஞ்சமி பி.ப.12.59 வரை
நட்சத்திரம்: ரோகிணி மு.ப.09.05 வரை
சுபநேரம்: 12.02 - 01.32 வரை
இராகுகாலம்: 07.32-09.02 வரை

**மேடம்**: எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும். மரியாதைக் குறை வாக சிறு சிறு சம்பவங்கள் அவ்வப்போது நிகழும்.

**இடபம்**: எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். உறவினர், நண்பர்களுடன் மனஸ்தாபம் வந்து போகும். எதிர் மறை எண்ணங்கள் ஏற்படும். வெளி வட்டாரத்தில் நிதானம் அவசியம்.

**மிதுனம்**: எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். பிரியமானவர்களுக்காகசிலவற்றைவிட்டுக்கொடுப்பீர்கள்.

**கடகம்**: உங்கள் பிடிவாதப் போக்கை ஓரளவு மாற்றிக் கொள்வீர்கள். உறவினர், நண்பர்களால் அனுகூலம் உண்டு. உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**சிங்கம்**: எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். நேர்மறை சிந்தனைகள் தோன்றும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி**: வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக்கொள்ளாதீர்கள். உறவினர், நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். மற்றவர்களுக்காக உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**துலாம்**: மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். வியாபாரத்தில் புது யுக்திகளால் பழைய பொருள்களை விற்றுத் தீர்ப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வார்கள்.

**விருச்சிகம்**: கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**தனுசு**: மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் திருப்திகரமான சூழ்நிலை உண்டாகும்.

**மகரம்**: பழைய நல்ல சம்பவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**கும்பம்**: சொத்துப் பிரச்சினைக்குச் சுமுக தீர்வு காண்பீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களைக் கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**மீனம்**: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர், நண்பர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 5 | | 8 | | |
| | 3 | | | 4 | 7 | | | |
| 9 | | 1 | | 3 | 6 | 5 | 7 | |
| 3 | 8 | | | | 1 | 9 | | 2 |
| 2 | | 7 | | | | 3 | | 1 |
| 1 | | 9 | 4 | | | | 5 | 8 |
| | 9 | 6 | 2 | 1 | | 4 | | 7 |
| | | | 6 | 8 | | | 9 | |
| | | 2 | | 7 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 5 | 2 | 9 | 8 | 7 | 3 | 6 |
| 3 | 8 | 2 | 1 | 7 | 6 | 9 | 5 | 4 |
| 9 | 7 | 6 | 3 | 5 | 4 | 2 | 8 | 1 |
| 7 | 9 | 3 | 8 | 4 | 1 | 5 | 6 | 2 |
| 2 | 6 | 8 | 5 | 3 | 7 | 4 | 1 | 9 |
| 5 | 4 | 1 | 9 | 6 | 2 | 8 | 7 | 3 |
| 6 | 5 | 7 | 4 | 2 | 3 | 1 | 9 | 8 |
| 1 | 3 | 4 | 7 | 8 | 9 | 6 | 2 | 5 |
| 8 | 2 | 9 | 6 | 1 | 5 | 3 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய் நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# IDM NATIONS CAMPUS

**தனது சேவையில் நேரடியாக... யாழ் மண்ணிலிருந்தவாறே பட்டப்படிப்புகளை தொடரக்கூடிய**

**அரிய வாய்ப்பை முதன் முறையாக அறிமுகப்படுத்துகிறது**

**IDM NATIONS CAMPUS**

★★★
தற்பொழுது
IDM கொழும்பு
தலைமையகத்தினாலேயே
IDM யாழ்ப்பாண கிளை
முகாமைத்துவ
படுத்தப்படுகின்றது.
★★★



## PROGRAMMING IN VB.NET

For : Beginners
Duration : Crash Course (1 month)
Mode : Part Time
Course Fee : 15,000 LKR (All inclusive)
Extendable up to : Advanced Development with VB.Net.
Class Time : Sat &Sun 01.00PM-04.00PM.
Start Date : October 18th (Saturday).

## WEB DESIGN AND DEVELOPMENT

For : Beginners
Duration : Crash Course (1 month)
Mode : Part Time
Course Fee : 15,000 LKR (All inclusive)
Extendable up to : Web Application Development
Class Time : Sat & Sun 09.00AM-12.00Noon.
Start Date : October 18th (Saturday).

## OBJECT ORIENTED PROGRAMING USING JAVA

For : Beginners
Duration : 2 Months.
Mode : Part Time
Course Fee : 30,000 LKR (All inclusive)
Class Time : Sat & Sun 04.00PM-06.00PM
Start Date : October 18th (Saturday)

IDM Nations Campus Since 1981

IDM NATIONS CAMPUS - JAFFNA
# 216, Nawalar Road, Jaffna. I E-mail : jaffna@idmedu.lk

HOTLINE 0212 229 901

For More Info www.idmedu.lk www.Facebook.com/idmnc

# JKOA

Thinking Technology

இலங்கையின் அலுவலகத் தன்னியக்கத் துறையில் முன்னணி வகிக்கும் நிறுவனம் தன்னை மீளப் புதுப்பித்துக்கொண்டுள்ளது. எமது புதிய இலச்சினையானது செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு, அதிநவீன தொழில்நுட்பம், தொடர்ச்சியான புதுமை நாட்டம் என்பவற்றினால் உள்ளடக்கப்பட்டதாகும். மதிநுட்பமானவர்களின் இல்லங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு வலுவூட்டக்கூடிய ஒருங்கிணைந்த, அதிநவீன தொழில்நுட்பங்களை வழங்கும் நிறுவனம் என்ற வகையில் எமது வளர்ச்சியை அது பிரதிபலிக்கிறது. அதிநவீன ஸ்மார்ட் ஃபோனாக இருந்தாலும் அதிமுன்னேற்றகரமான டிஜிட்டல் பல்செயற்பாட்டு பிரதியெடுக்கும் இயந்திரமாக இருந்தாலும் நீங்கள் தொழில்நுட்பத்தைப் பற்றி சிந்திக்கும்போது உங்கள் நினைவுக்கு வரவேண்டியது JKOA.

(C/16932)

JKOA

**ஜோண் கீல்ஸ் ஓபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டட்**

90, யூனியன் பிளேஸ், கொழும்பு 2, இலங்கை. | **தொலைபேசி:** + 94 (0) 11 231 3000

**தொலைநகல்:** + 94 (0) 11 243 1745 | **மின்னஞ்சல்:** jkoa@keells.com | **இணையத்தளம்:** www.jkao.com

வாழ்வின் எழுச்சியிலிருந்து
தேசத்தின் எழுச்சிக்கு



வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டம் 6 ஆம் கட்டம்

குடும்பத்தின் பொருளாதாரம் மற்றும் போஷாக்கை மேம்படுத்தும் இருபத்தைந்து இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை வலுவூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்



2014 ஒக்டோபர் 20ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.07 இற்கு வரும் சுபவேளையில் கிழக்குத் திசையை நோக்கி அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் ஆரம்பமாவதுடன் அதனுடன் இணைந்ததாக நாடெங்கும் 14,022 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் காய்கறி விதைகள், காய்கறி, பழங்கள், தென்னங்கன்றுகள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், நிரந்தர பெருந்தோட்ட பயிர்கள், மூலிகை செடிகளை நடுதல், கடற்றொழில் மற்றும் கால் நடை பிரிவுகள் உள்ளடங்கலாக இருபத்தைந்து இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை வலுவூட்டும் நிகழ்வுகள் நடைபெறும்.

மேலதிக தகவல்களுக்கு

பிரதேச பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் அல்லது குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களை நாடுங்கள்.

தொழில்நுட்ப அறிவுறுத்தல்களுக்கு

பிரதேச விவசாய ஆலோசகர்கள் அல்லது 1920 கமத்தொழில் நிவாரண உதவிகள் மற்றும் விவசாய ஆலோசனை சேவைப் பிரிவை அழையுங்கள்.



வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## சைவப் புலவர் சங்கம் நடத்தும் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும்

யாழ்ப்பாணம், ஒக்.12

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2மணி வரை திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் திருஞான சம்பந்தர் மண்டபத்தில் சங்கத் தலைவர் சித்தாந்த பண்டிதர் சித்தாந்த சிரோமணி சைவப் புலவர் மு.திருஞான சம்பந்த பிள்ளை தலைமையில் நடைபெறும்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக்குருக்கள் முன்னிலை வகிப்பர்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனும் சிறப்பு விருந்தினர்களாக திருகோண மலை பிரதேச செயலாளர் ஜ.சசிதேவியும் கிழக்கு மாகாண கல்வி உதவிச் செயலாளர் சி.தண்டாயுதபாணியும் கலந்து கொள்வர்.

முதலாவது அமர்வு நாளை காலை 8 மணிக்கு ஸ்ரீபத்திர காளி அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாடுகளின்பின் ஊர்வலத்துடனும் நிகழ்வு ஆரம்பிக்கப்படும். உரைகளைத் தொடர்ந்து 2014ஆம் ஆண்டு இளஞ்சைவப் புலவர், சைவப்புலவர்கள் தேர்வில் சித்தி பெற்றோர் பட்டமளித்துக் கௌரவிக்கப் படுவர்.

அமர்வு 2 இல் 'சைவ நாதம்' மலர் வெளியீடு இடம் பெறும். மலர் வெளியீட்டுரையை மா.இராசரத்தினமும் நயவுரையை கலாபூசணம் சி.நவரத்தினமும் ஆற்றுவார்கள். முதற்பிரதியை சோ.இரவிச்சந்திரகுருக்கள் வழங்குவார். அதனைத் தொடர்ந்து சிறப்பு பட்டம் பெறுவோர் கௌரவ பட்டம் பெறுவோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவார்கள். அமர்வு 3 இல் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும். திருகோணமலை மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடை பெற்ற பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (வ -ரி)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் உற்பத்தி அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டு 59 227 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது

இது 2103ஆம் ஆண்டில் 99,750 மெற்றிக்தொன்னாக அதிகரித்துள்ளது என்று மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

2008 இல் சராசரியாக ஒரு ஹெக்ரெயருக்கு 3.9 சதவீதமாக மெற்றிக்தொன் உற்பத்திசெய்யப்பட்ட நெல், 2013 இல் 4.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.

தேசிய நெல் உற்பத்திக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 2008 இல் 3 சதவீதம் பங்களிப்புச் செய்யப்பட்டது. இது 2013 இல் 12 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

விவசாய உள்ளீடுகளை அரசு மானியமாக வழங்கியமை, விதைநெல், இலவச பசளை விநியோகம், காசுக்கான வேலைத்திட்டத்தின் மூலம் வயல் நிலங்களை சமப்படுத்துதல் செய்தமை, விவசாய விரிவாக்கல் சேவை அதிகரித்தமை, புதிய தொழில்நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமை, நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்பட்டமை, 8 நெற்களஞ்சிய சாலைகள் தலா 20 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டமை, கரடியனாறு விவசாயப்பண்ணை புனரமைக்கப்பட்டு செயற்பட ஆரம்பித்தமை போன்ற காரணங்களினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் உற்பத்தி அதிகரித்துள்ளது. (வ)

மின்சார கட்டணத்தில் குறைவாக
SIZE இல் அதிகமாக
PRICE இல் சிக்கனமான
குளிர்சாதனம் அபான்ஸிடமிருந்து மாத்திரமே



(C/16924)

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

ARD - 190E
* ஒற்றைக் கதவு
* கொள்ளளவு 190L
* மீளமைக்கக்கூடிய தர்மோஸ்டேட்
* ஐஸ் படியாது
* மரக்கறி கிறிஸ்பர்
* 5 நட்சத்திரம்

ரூ.39,900

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

ARD - 240E
* கொள்ளளவு 240L
* நேரடியான குளிர்மை
* எந்த சூழலிலும் பாவிக்க கூடியது
* சுற்றாடல் தோழன்
* குறைந்தளவு சப்தம்
* இலகுவாக இடமாற்றக்கூடியது
* மீளமைக்கக்கூடிய தர்மோஸ்டேட்
* 4 நட்சத்திரம்
* இரண்டு பக்கமும் திறக்க கூடிய கதவு

ரூ.42,900

* நிபந்தனைகளுக்குட்பட்டது.

0714020799
நாடெங்கிலும் உள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெறலாம்.

Abans

ABS GARDNER DIXON HALL


தம்ரோ
தீபாவளி சலுகை
சர்வதேச நம்பிக்கையை வென்ற தளபாடங்கள்
ரூபா. 73,400
மாதாந்தம் ரூபா. 2,040
Grace 3+2+1
Winchester Bed Suites
15% கழிவு
Rio Wardrobe
ரூபா. 14,900
Venus 3+1+1
ரூபா. 35,900
75" x 36" Regent Bed
ரூபா. 13,900 இலிருந்து
15% கழிவு
Pearl Dining Suites ரூபா. 25,650
ரூபா. 11,900
ரூபா. 9,900*
ரூபா. 9,575
KCT 035
ரூபா. 5,875
ரூபா. 63,425
மாதாந்தம் ரூபா. 1,760
Nevada Dining Suites
15% கழிவு
ரூபா. 31,175
ரூபா. 24,940*
ரூபா. 4,375
ரூபா. 7,665
ரூபா. 4,200 இலிருந்து
தம்ரோ சலவை இயந்திரங்கள்
விசேட கழிவு
5 வருட உத்தரவாதம்
Fully Automatic
முழு மாதத்திற்கும் 4 அலகுகள் மின்சாரம் மாத்திரமே
MADE IN SRI LANKA
Semi Automatic
முழு மாதத்திற்கும் 2 அலகுகள் மின்சாரம் மாத்திரமே
ரூபா. 36,900
மாதாந்தம் ரூபா. 1,025
ரூபா. 22,900
மாதாந்தம் ரூபா. 635
INNOVEX
குறைந்த மின் பாவனையுடன் கூடிய குளிர்சாதனப்பெட்டி
சந்தை விலையை விட ரூபா. 10,000 குறைவாக
250 Litre
ரூபா. 54,900
180 Litre
ரூபா. 39,900
10 வருட உத்தரவாதம்
பனி உறையாதது
MADE IN SRI LANKA
மாதத்திற்கு மின் அலகுகள் 12-18 இடையில்
இனோவெக்ஸ் LED TV
விசேட கழிவு
55"
3D
40"
32"
24"
19"
3D SMART TV
சந்தை விலையை விட 50% குறைவாக
ரூபா. 19,900 இலிருந்து
இனோவெக்ஸ்
இணையற்ற உத்தரவாதத்துடன் சந்தையில் குறைந்த விலைக்கு
ரூபா. 4,790 இலிருந்து
ரூபா. 3,190
ரூபா. 3,490
ரூபா. 1,390 இலிருந்து
ரூபா. 2,490
ரூபா. 1,375 இலிருந்து
ரூபா. 7,775
மாதாந்தம் ரூபா. 215
Pedestal Fan
ரூபா. 4,100 இலிருந்து
ரூபா. 4,990 இலிருந்து
ரூபா. 1,150 இலிருந்து
ரூபா. 1,690 இலிருந்து
(53102)
ஆரம்ப கட்டணமில்லாத 03 வருடங்களுக்கு வட்டியில்லாத இலகு கொடுப்பனவு முறைக்கு
www.damro.lk
077 2 857 857
நாடு முழுவதுமுள்ள தம்ரோ காட்சியறைகளிலிருந்து

# டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் கிராம அலுவலர் இல. ஜே/110, ஜே/112 பகுதி களில் டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் வியாழக் கிழமை தீவிரமாக மேற்கொள் ளப்பட்டன.

நல்லூர் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி திரிபுலன சுந்தரி ஆகியோர் தலை மையில் மேற்கொள்ளப்பட்ட இந்த செயற்பாட்டில் கிராம அலுவலர்கள் எஸ்.மேகானந்த சிவம், செல்வி பவித்திரா உட்பட பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர், சமூர்த்தி உத்தி யோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

15 பிரிவுகளாகக் குருக்கள் அமைக்கப்பட்டு இரு கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த பொது நிறுவனங்கள் வீடுகளுக்கு நேரடியாகச் சென்ற



குழுவினர் வீட்டில் பொது நிறுவனங்களில் டெங்கு நுளம்பு அபாயம் குறித்து பார்வை யிட்டதுடன் பொது மக்களுக்கு அறிவுறுத் தல்களையும் வழங்கியதுடன் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய சூழ்நிலைகள் காணப்படும் இடங்களில் அவற்றை உடன டியாகத் துப்புரவு செய்ய அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்தும் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய நிலை காணப் படின் சட்ட நடவடிக்கை களுக்கு உட்படுத்தப்படலாம் என்றும் எச்சரித்துள்ளனர். (வ-7)

# மாணவரிடையே போட்டிகள்

வடமராட்சி, ஒக்.11

பருத்தித்துறை நகரசபை பொது நூலகம் வாசிப்பு மாதத்தை ஒட்டி நகரப் பாட சாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

தரம் ஒன்று தொடக்கம் 5 வரையான மாணவர்க ளிடையே இந்தப் போட்டிகள் இடம்பெறும்.

நகர எல்லைக்குள் உள்ள 9பாட சாலை களைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் போட் டிகளில் பங்குபற்ற அதிபர்கள் ஊடாக விண்ணப்பித்து வருகின்றனர்.

போட்டிகளில் வெற்றி பெறு வோர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும் என பரு.நகர சபைத் தலைவர் சபாரவீந் திரன் தெரிவித் துள்ளார். (வ-173)











Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.
WWW & WIN
அனைவரும் வெற்றியாளர்களே
50% வரை கழிவு
WI-FI ரவுட்டர் இலவசம்*
*புதிய Web Family அல்லது அதியுயர் புறோட்பேண்ட் பக்கேஜ்களுக்கு
• புதிய Entrée, Web Startec, Web Pal, Student மற்றும் அடிமான புறோட்பேண்ட் பெக்கேஜ்களுக்காக Wi-Fi ரவுட்டர் ரூ.1,490/- விசேட விலையில்
SLT மெகாலைன் இணைப்பு கட்டணம்*
• மெகாலைன் Double Play (தொலைபேசி + புறோட்பேண்ட்) இணைப்பு கட்டணம் ரூ.3,500/-
• மெகாலைன் Triple Play (தொலைபேசி + புறோட்பேண்ட் + PEO TV) இணைப்பு கட்டணம் ரூ.8,000/-
*Web Family மற்றும் அதியுயர் புறோட்பேண்ட் பெக்கேஜ்களுக்கு உரியது
100 புதிய SLT SMART தொலைபேசிகளை வெல்லுங்கள்
• புதிய புறோட்பேண்ட் இணைப்புக்களை பெறுபவர்கள் அனைவரும் சீட்டிழுப்பிற்கு தகுதிபெறுவர்
மேலும் பல சலுகைகள்
• புறோட்பேண்ட் பெக்கேஜை இலவசமாக தரமுயர்த்தலாம்
• முதல் 3 மாதங்களுக்கு Web Guard சேவை இலவசம் (புதிய மற்றும் தற்போதைய புறோட்பேண்ட் இணைப்புகளுக்கு)
அரச வரிகள் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது
2014 ஒக்டோபர் 20 வரை மட்டுமே செல்லுபடியாகும்.
விரையுங்கள்! உங்கள் புதிய புறோட்பேண்ட் இணைப்பினைப் பெற்றுக்கொள்ள அருகிலுள்ள SLT பிரதேச காரியாலயம் அல்லது டெலிஷொப்பிற்கு விஜயம் செய்யுங்கள்.
(C/16935)
1212 ஐ அழையுங்கள்
மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள www.slt.lk | Email: 1212@sltnet.lk | Web chat: www.slt.lk (My SLT - Chat with us) | Like us on
BROADBAND

# மற்றவரது மனம்கோணாதவாறு செயலாற்றுவதே சமூக சேவை

## வடமாகாண தொழிற்துறைத் திணைக்களப் பணிப்பாளர் கருத்து

தென்மராட்சி, ஒக். 12
சமூக சேவை என்பது சாதாரண மானதொரு விடயமல்ல. பொது மக்களை நாடிச் சென்று அவர் களுக்கு பல்வேறுபட்ட வகையில் அவர்களுக்கு பல்வேறு தேவை களை எத்தனையோ சிரமங்களின் மத்தியில் மனம் கோணாமல் நிறை வேற்றுவதே சமூக சேவையாகும். தனி ஒருவரோ அல்லது அமைப் பாகவோ இந்தப் பணிகளை மேற் கொள்ள முடியும். இவ்வாறு தெரி வித்தார் வடமாகாண தொழிற் துறைத் திணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன்.

கைதடி சாந்தி நிலையத்தில் இடம் பெற்ற சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சேவையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தனதுரையில் மேலும் கூறுகையில்,

எமது முன்னோர்கள் காலத்திலிருந்த கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை ஒழிக்கப்பட்டு அண்மைக் காலமாக சுதந்திரமாகத் தனித்து வாழ முற்பட்டுமுள்ளனர்.

இதனாலேயே இன்று எமது மக்கள் முதியோர் இல் லங்களில் தங்கி வாழும் அவல நிலை ஏற்பட்டது. அத்துடன் இன்றைய சமூகத்தில் புரையோடியுள்ள வெளிநாட்டு மோக வாழ்க்கை காரணமாகவும் தனித்து விடப்படும் பெற்றோர் முதியோர் இல்லங்களை நாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

எவ்வளவோ இடர்களுக்கு மத்தியில் எமக்கு வழங்க வேண்டிய அனைத்து வசதிகளையும் வழங்கி எம்மை நல்லதொரு நிலையில் வைக்க ஆசைப்பட்டு அதனைத் தமது காலத்தில் நிறைவேற்றி கண்டு கழித்த பெற்றோர்கள் அதே பிள்ளைகளால் தவிக்க விடப்படுவது மகா பாவமாகும். பிள்ளைகளால், உறவுகளால் தனித்து விடப்படும் முதியவர்கள் இவ்வாறான இல்லங்களுக்கு வருவது அவர்களது மன ஆறுதலுக்காகவே என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இல்லங்களில் தங்கியுள்ள முதியவர்களைப் பராமரிக்கும் ஒவ்வொரு பணியாளர்களும் பெரும் புண்ணியவான்களாக எமக்குத் தெரிகின்றனர். இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளை செய்யும் போது அவர்களின் ஆசிகளும் ஆசீர்வாதங்களும் நல்வார்த்தைகளும் அந்தப் பணியாளரை புண்ணியவான்களாக மாற்றி விடும்.

நாம் வருடத்தில் ஒரு நாளோ அல்லது முக்கிய தினங்களிலோ தான் எமது அயலில் உள்ள முதியவர்களிடம் ஆசிர்வாதம் பெறுகின்றோம். ஆனால் இங்கு பணியாற்றும் ஒவ்வொரு பணியாளரும் தினமும் இங்கு தங்கியுள்ள முதியவர்களின் அன்பையும் ஆசிர்வாதத்தையும் பெறுவது மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

சமூகத்தின் தேவைகளை இனங் கண்டு மக்களுக்காக உரியவர் களுடன் தாமே சென்று பேசி அவர்களுக்குத் தேவைப்படும் தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதை தமது பணி யாகக் கருதும் பலர் எம் மத்தியில் உள்ளனர். அவர்களை இனங்கண்டு அவர்களைக் கௌரவிப்பது எமது தலையாய கடமையாகும்.

அந்த வகையில் நிலை யத்தின் பொறுப்பாளர் த.கிரு பாகரன் தலைமையிலான நிலையப் பணியாளர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் பல இடங்களுக்கு அலைந்து ஒவ்வொரு இடங்களிலும் பல்வேறு வழிகளில் சமூகப் பணிகளில் ஈடுபடுவர்களை அழைத்து வந்து இன்றைய நிகழ்வில் கௌரவிப்பது எமக் கெல்லாம் பெருமை தருகிறது.

இவர்களில் பலர் தமது பிரதேசத்தில் பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டபோது அந்த ஊர் மக்களின் உயர் மதிப்பினைப் பெற்றிருந்த போதிலும் இவ்வாறான கௌரவத்தைப் பெற்றிருக் கவில்லை என்பதை இங்கு அவர்களால் தெரி விக்கப்பட்ட கருத் துக்களில் இருந்து அறிய முடிகிறது. சர்வதேச முதியோர் வாரத்தில் சமூக சேவையில் ஈடுபட்டு வரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களை கௌரவிப்பது பொருத்தமானது" - என்றார். (வ-9)




## பயணிக்க முடியாத நிலையில் சின்னக்கடை வீதியின் அவலம்



யாழ்ப்பாணம்.ஒக்.12 யாழ். சின்னக்கடை வீதி பலத்த சேதமுற்று போக்கு வரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளன.

மீன் சந்தைக்கு முன்பாக செல்லும் இந்த வீதி நீண்ட காலமாக புனரமைக்காத நிலையில் கடும் சேதமுற்று காணப்படுகின்றன.

யாழ். நகரிலேயே மக்கள் நெரிசல் நிறைந்த காணப் படும் இந்த சந்தைக்கு முன் பாகச் செல்லும் இந்த வீதி உடனடியாக சீர் செய்ய மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் குறித்த வீதியின் குறுக்காக உள்ள வடிகால்வாய் சேதமுற்ற நிலையில் உள்ளன.

கடந்த சில மாதங்களாக சேத முற்ற நிலையில் உள்ள இவ் வடிகால்வாய் புனரமைப் பதற்கான நடவடிக்கைகள் இதுவரைக்கும் மேற்கொள்ளப்படவில்லை.

வடிகால்வாய் சேதத்தால் கால்வாய் ஊடாக கழிவுநீர் ஓடுவது தடைப் பட்டும் காணப் படுகின்றன.

கால்வாயின் சேதத்தினாலும் கழிவுநீர் தேங்குவதால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படு கின்றன. (வ-17)

# சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகம் நடத்தும் போட்டிகள்

வரணி, ஒக்.12

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தினரால் தேசிய வாசிப்பு மாதம் தொடர்பில் மாணவர் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் முகமாக பாடசாலைகளில் கவிதை, கட்டுரை, பொதுஅறிவு ஆகிய பிரிவுகளில் போட்டிகளை நடத்த தீர் மானிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாகக் கட்டுரைப் போட்டிகள் 5 பிரிவுகளாகவும் கவிதைப் போட்டிகள் 2 பிரிவுகளாகவும் பொதுஅறிவுப் போட்டிகள் 3 பிரிவுகளாகவும் நடத்தப்பட வுள்ளன.

அவை குறித்த விண்ணப்பப்படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விரைவில் விண்ணப்பப்படிவங்களை தமக்கு அனுப்புமாறும் நூலகர் பொ.இரவீந்திரன் கேட்டுள்ளார்.

போட்டிகளின் விதிமுறைகள் மற்றும் போட்டிகள் நடத்தப்படவுள்ள திகதிகள் என்பன விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-122)






# தமிழருக்காக உண்டியல் குலுக்கி நிதி திரட்டும் ஆஸி.தமிழ் அமைப்புகள்

கொழும்பு, ஒக்.12

தமிழ் மக்களுக்கு உதவ ஆஸ்திரேலிய தமிழ் அமைப்புகள் உண்டியல் குலுக்கி நிதி சேகரிக்கின்றன என்று 'ரிவிர' சிங்களப் பத்திரிகை தெரிவித் துள்ளது.

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் உள்ளிட்ட சில நகரங்களில், புலம்பெயர் தமிழர் தரப்புக்கு ஆதரவான தமிழ் அமைப்புக்களால் உண்டியல்கள் குலுக்கி நிதி சேகரித்து வருவதை இத் தினங்களில் தொடர்ச்சியாக காண முடிவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களவார இதழ் ஒன்றான 'ரிவிர' தெரிவித்துள்ளது.

அத்தோடு இத் தரப்பினர் தமிழ் மக்களை உசுப்பேற்றி விடும் விதத்திலான துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பொய்யான தகவல்களைக் கொண்டுள்ள கையேடுகளையும் கூட விநியோகித்து வருகின்றனர். சேகரிக்கப்படும் இந்தநிதி இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள நிர்க்கதியான இலங்கைத் தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் சமூக சேவை என்றே அத்தரப்புக்களால் தெரிவிக்கப்படு வதாகவும் தெரியவந்துள்ளது.

**இத் தரப்பினர் தமிழ் மக்களை உசுப்பேற்றி விடும் விதத்திலான துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பொய்யான தகவல்களைக் கொண்டுள்ள கையேடுகளையும் கூட விநியோகித்து வருகின்றனர்.**

உண்டியல்கள் மூலம் நிதிகளைச் சேகரிக்கும் இந்தத் தரப்பினர் ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழ் சமூகத்தவர் என்றும் அவர்கள் அங்குள்ள அகதி மக்களுடன் நெருங்கிச் செயற் பட்டு அவர்களோடு இணைந்து பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் அந்தநாட்டில் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களின் நிர்வாக அதிகாரி ஒருவரும் கூட உறுதிப்படுத்தி யிருப்பதாக மேற்படி சிங்கள ஊடகம் தெரிவிக்கிறது.

எவ்வாறான போதிலும், இக் குழுக்கள் இலங்கையில் உள்ள சிங்க மக்கள் கொடூரமான இனத்தவர்கள் என்றும் அவர்கள் தமிழ் மக்களைக் கொன்றொழித்து தமிழ் மக்களை இலங்கையிலிருந்து விரட்டியடித்து வருவதாக பரப்புரை செய்து வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கப் பெற்ற தகவல் கள் தெரிவிப்பதாகவும் குறித்த சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (வ-22)



(C/16931)



(C/16936)



(C/16933)

நினைவகலா
# 31ஆம் நாள் நினைவலைகள்

திருமதி
## வசந்தாதேவி குலசிங்கம்



அன்பொழுகும் வார்த்தைகள்
கனிவொழுகும் முகம்
அன்னையாய் நீ எமக்கு வாய்த்த
அற்புத வரம்
உன்னை இழந்திங்கு எப்படி ஆறுதல்
கொள்வோம்
கண்ணுக்குள் நிறைகிறாய் தாயே!
கண்ணீராய் தந்தோம் அஞ்சலி

கடந்த 10.09.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. எனவே தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சீமாவளவு,
அளவெட்டி மத்தி. (53129) (6.3.4)
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா சண்முகம்



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், இல. 98A, கற்குழி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சண்முகம் 09.10.2014 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2014) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கதிரவேலு சண்முகம்
077 529 9575
இல. 98A கற்குழி, வவுனியா. (52168) (7.6.3)

## மார்க்கண்டு இரவீந்திரன் (ரவிமாஸ்ரர்) (B.A, Dip.in Eng.)

[முன்னாள் ஆசிரியர்-பரி.யோவான் கல்லூரி, ஆங்கில போதனாசிரியர்-யாழ். பல்கலைக்கழகம்]



கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு இரவீந்திரன் 10.10.2014 வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு (லிகிதர்-கச்சேரி)-மங்கையர்க்கரசி தம்பதியரின் பாசமிக்க சிரேஷ்ட மகனும், தருமர்-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாதேவியின் நேசமிக்க கணவரும், விஸ்ணுகாந், தேனுகா (பிரான்ஸ்), மேனகா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தேவகாந், விமல்காந் (யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேந்திரனின் (பிரான்ஸ்) அன்பு மாமனும், அஸ்வினின் (பிரான்ஸ்) அன்பு அம்மப்பாவும், காலஞ்சென்ற பாபுமாஸ்ரர் என்று அழைக்கப்படும் கிராம அலுவலர் மகேந்திரன் மற்றும் இராஜனிமாலா, சாந்தினி மாலா, தர்சினிமாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சற்குணராஜா, சர்வானந்தராஜா (சவுதி), சிவானந்தராஜா, தவராஜா, இலங்காதேவி, யோகாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவருடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61/6, பாரதி வீதி,
கச்சேரி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## இன்றும் வருகிறது ரயில்

தென்மராட்சி, ஒக்.12

ஜனாதிபதியின் வருகையையிட்டு முன்னோடி ஒத்திகை நிகழ்வுக்காக இன்றும் யாழ்ப்பாணத்துக்கு விசேட ரயில் சேவை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றும் இவ்வாறான ரயில் சேவை ஒன்று இடம்பெற்றிருந்தது. அதே சமயம் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்படவுள்ள யாழ்ப்பாணம், கொடிகாமம், நாவற்குழி ரயில் நிலையங்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

ரயில் வரும்போது ஒவ்வொரு நிலையத்திலும் 500 மாணவர்கள் உட்பட பெருமளவு மக்கள் கலந்துகொள்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றுடன் பாடசாலைகளின் பான்ட் அணிகள், நாதஸ்வர தவில் வாத்தியக் குழுக்கள் போன்றவை ஒத்திகை நிகழ்வில் பங்கு பற்றுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

## பருத்தித்துறை நகர பாடசாலைகளில் மாணவருக்கான போட்டி

வடமராட்சி, ஒக்.12

பருத்தித்துறை நகர சபை பொது நூலகம் வாசிப்பு மாதத்தை ஒட்டி நகரப் பாடசாலை மாணவர்கள் இடையே பேச்சு, கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

தரம் 1 தொடக்கம் 5 வரையிலான மாணவர்கள் இடையே இந்தப் போட்டிகள் நடத்தப்படும்நகரஎல்லைக்குள் உள்ள 9 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்ற அதிபர்கள் ஊடாக விண்ணப்பித்து வருகின்றனர்.

போட்டிகளில் வெற்றி பெறுவோர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும் என பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (ஓ-173)

## விஷக்கடிக்கு இலக்கானோர்

விஷப்பாம்பு, கருங்குளவி, நாய் ஆகியவற்றினால் கடியுண்ட நால்வர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வரணி இயற்றாலையில் வயல்வேலை செய்த அதே இடத்தைச் சேர்ந்த வேலாயுதம் பிள்ளை கனகரத்தினம் (வயது-55), மிருசுவில்தெற்கில்குவியலில் இருந்து விறகு எடுத்த ஐயாத்துரை லட்சுமி (வயது-59) ஆகியோர் விஷப் பாம்பினால் கடியுண்டனர்.

தாவளை இயற்றாலைப் பகுதியில் பனை மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிலிருந்து வெளிப்பட்ட கருங் குளவிகள் அவ் வழியே நடந்து வந்த செல்லப்பாரத்தினம்(வயது-82) என்ற முதியவரைக் கொட்டியுள்ளன.

பாடசாலையில் நடைபெற்ற விசேட வகுப்புக்குச் சென்ற வேளையில் மந்துவில் கிழக்கைச் சேர்ந்த வின்சன் வினிஸ்ரா (வயது- 16) என்ற மாணவி நாய்க் கடிக்கு இலக்கானார். அவர்கள் நால்வரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். (ஓ-9)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி சந்திரசேகரி பராசக்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியை இணுவில் இந்துக் கல்லூரி - இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதிய ஸ்தாபக உறுப்பினர்)
அவர்களின் அன்புக் கணவர்
**கனகரத்தினம் சந்திரசேகரி**
(பிரதம லிகிதர் மாவட்ட காணி அலுவலகம் யாழ்ப்பாணம்) அவர்கள் லண்டனில் காலமான செய்தி அறிந்து இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதிய சமூகத்தினர் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
(53130) (40.6.3)

**இ.இ.க.அ.ந. நிதியம், இணுவில்.**

## ஈராண்டு நினைவலைகள்



தோற்றம்
22
12
1946

மறைவு
12
10
2012

**அமரர் தம்பிஜயா யோகராசா**
திதி: அபரபக்க துவாதசி (20.09.2014)

ஆண்டிரண்டுகள் ஆனதுவோ எமைப் பிரிந்து
எமதருமை அப்பாவே !
சடுதியாய் நீங்கள் பிரிந்ததனால்
கலங்கியே நிற்கின்றோம் இன்றுவரை-நாம்
ஈராண்டுகளென்ன எம் உயிர்
உள்ளவரை உங்களை நினைந்துருகி
வாழ்வோம் அப்பா! என்றும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

25/10, செம்மணி ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(53128) (4.6.3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானேஸ்வரி குலேந்திரன்



யாழ். இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், பின்லாந்து, கனடா ஆகிய இடங்களை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேஸ்வரி குலேந்திரன் 04.10.2014 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னையா-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சோமசுந்தரம்-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குலேந்திரனின்(இ.போ.ச உள்ளக பரிசோதகர்) அன்பு மனைவியும், கௌரி(கனடா), பாலேந்திரன்(பின்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, பரமலிங்கம், சிவலிங்கம் மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவீந்திரன் (கனடா), கலையரசி(பின்லாந்து) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், பாலாம்பிகை வைத்திலிங்கம், அம்பிகை(பவானி), நடராசா(முன்னாள் பிரதி அதிபர்), இராசேஸ்வரி மற்றும் வேவி(லண்டன்), நீலாம்பிகை, தவமணிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,யதீசன், மோகனன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் நிகழ்வுகள் நாளை(13.10.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில். (53095)(5.6.3)

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி நாகம்மா வல்லிபுரம்



மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா வல்லிபுரம் 06.10.2014 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-கற்பகம் தம்பதியரின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்ற வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் மந்துவில் மேற்கு கொடிகாமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் மேற்கு,
கொடிகாமம். (17307)(7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
077 883 6898



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

அராலி வடக்கு, செட்டியார் மடத்தைச் சேர்ந்தவரும், வட்டு/யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவியுமான செல்வி **பிரியங்கி கோபாலகிருஷ்ணன்** 2014 தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 179 புள்ளிகள் பெற்றமையையிட்டு அவரை விநாயகர் அருளால் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

அராலி. அம்மம்மா, மாமாமார், சித்தி, சித்தப்பா.

(53093)(12.3.6)

### விற்பனையாளர் தேவை

கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் தேவை. ஆரம்ப வேதனமாக ரூபா 19000/= வழங்கப்படும். இலவசமாக தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

ஆண்கள் மட்டும். வயது 18 தொடக்கம் 22 வரை. 13ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : கிங்ஸ் எலற்றோனிக்ஸ் (53133) (7.6.3)

இல. 11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. - 021 222 3857

## நீங்கள் அறிவீர்களா?

**உங்கள் குடிதண்ணீரின் தரத்தை இன்னும் நாக்கிலா தீர்மானிக்கிறீர்கள் ?**

எமது நிலத்தடி நீரில் கரைந்துள்ள பெரும்பான்மையான நச்சு மாசுக்களுக்கு சுவையோ , மணமோ கிடையாது என்பதை அறிவீர்களா ?









**கவலை வேண்டாம்!!!** நீர் சுத்திகரிப்பில் அதி நவீன தொழில் நுட்பத்தில் உருவான ( Reverse Osmosis ) உயர்தரத்திலும் உத்தரவாதத்துடனும் ~ HYPER~ நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் 100% சுத்தமான நீரைப் பெற்றுக்கொள்வதுடன் அனைத்து அளவிலான இயந்திரங்களையும் உதிரிப்பாகங்களையும் சகாய விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(53106)(12.3.6)

அனைத்து விதமான நீர் சுத்திகரிப்பு தொடர்பான ஆலோசனைகளையும் சேவைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ள உடன் தொடர்பு கொள்ளவும்.

**Ceylon Green Consultants (Pvt)Ltd** Mob :- 077 3626230

341, K.K.S Road, Jaffna. T/F:- 021 2226888

www.ceylongreen.com, email:ram@ceylongreen.com

## நாகர்கோவில் நாகதம்பிரானுக்கு சமுத்திரத் தீர்த்தம்

வடமராட்சி, ஒக்.12

வடமராட்சி கிழக்கில் பிரசித்தி பெற்ற நாகர் கோவில் அருள்மிகு பூர்வீக நாகதம்பிரான் சுவாமி கோவில் சமுத்திரத் தீர்த்தத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று அதிகாலை இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து அதிகாலை 4 மணிக்கு தீர்த்தம் ஆடுவதற்காக சுவாமி நாகர் கோவில் வடக்கில் உள்ள வங்கக் கடலை நோக்கிச் செல்வார். அங்கு தீர்த்தமாடிய பின்னர் சிறிது நேரம் இளைப்பாறி கோவிலை நோக்கித் திரும்பும் வழியில் நாகதம்பிரான் சுவாமி நாகர்கோவில் வடக்கில் உள்ள சிற்றாலயங்களைத் தரிசித்துக் கொண்டு இருப்பிடத்தை வந்தடைவார். (ஓ-173)

## கைதடியில் ஆசிரியர் தினவிழா

யாழ்ப்பாணம், ஒக்.12

கைதடி வடக்கு யூப்பிற்றர் கல்வி நிலையத்தின் ஆசிரியர் தினவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கயிற்றசிட்டி திருமண மண்டபத்தில் சி.துஷ்யந்தன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் ச.லலீசனும் விசேட விருந்தினராக நலன் விரும்பி பொன். கந்தையாவும் கலந்து கொள்வார்கள். (ஓ-ரி-09)

## வடமராட்சி வலய மாணவர் 231 பேர் புலமைப் பரிசிலில் சித்தி

வடமராட்சி, ஒக்.12

இவ்வாண்டு இடம்பெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வடமராட்சி கல்வி வலயத்தில் 231 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இந்த வலயத்தில் உள்ள பருத்தித்துறைக் கோட்டத்திலிருந்து 110 மாணவர்களும், கரவெட்டிக் கோட்டத்திலிருந்து 106 மாணவர்களும், மருதங்கேணிக் கோட்டத்திலிருந்து 15 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர் என்று கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்தார்.

மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு சித்தியடைந்தோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-173)

### சிவபூமி முதியோர் இல்லம் - தொல்புரம்

**நிர்வாக அலுவலர் தேவை**

மொழி அறிவும், கணினி அறிவும், முன்னர் வேலையாற்றிய அனுபவமும் உள்ளவர்கள் முதியோர் இல்லத்தில் பணியாற்ற பொருத்தமானவர் தேவை.

- விண்ணப்ப முடிவு திகதி: **20.10.2014**
- அனுப்ப வேண்டிய முகவரி: (53091) (12.3.6)

தலைவர்,
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

### பணிநிலை வெற்றிடங்கள்

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - முல்லைத்தீவுக் கிளை**

கீழ்வரும் நிரந்தர பணிநிலைகளுக்கான முழு/ பகுதிநேர வெற்றிடங்களுக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிநிலைகள்:**

01 வெளிக்கள உத்தியோகத்தர்கள்

02 நிறைவேற்று கள முகாமையாளர்கள் (ஆகக் குறைந்தது காப்புறுதித் துறையில் ஒரு வருட அனுபவம்)

03. சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள்

**தகைமைகள்:**

01 வயது எல்லை 18 - 60

02. க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்கள் அல்லது க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம், தமிழ் அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி பணிநிலைகளுக்கான விவரங்களைச் சுயமாகத் தயாரித்து கீழ்வரும் முகவரிக்கு **2014/10/24** ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முகாமையாளர்**
**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,**
**பிரதான வீதி, முல்லைத்தீவு.**
தொ.பே. 021 229 0089 (53097) (45.6.3)

### முகாமைத்துவ ஆலோசனை கூட்டமைப்பு (MATCCO) நிறுவனம் நடத்தும் தொழில் முனைவோருக்கான சான்றிதழ் பயிற்சி நெறி

(கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், அங்கத்தவர்களின் பிள்ளைகள், தொழில் முனைவோர்கள் மற்றும் பாடசாலைக் கல்வியை முடித்த இளைஞர், யுவதிகளுக்கான தொழில் பயிற்சி நெறி)

காலம்: 2014 ஒக்ரோபர் 26,27, ஆம் திகதிகள்

இடம்: கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபம்

**சி.கோணேஸ்வரன்**

முகாமைத்துவ ஆலோசகர், திட்ட மதிப்பீட்டாளர் செமிதிரிய உலக வங்கித் திட்டம் அவர்கள் ஏனைய வளவாளர்களுடன் பயிற்சியை நடத்துவார். (52977) (45.3.6)

மேலதிக விபரங்களுக்கு: 071 441 8539, 077 861 1674, 077 075 1899

**Management Consultancy Cooperation**
**No.327, 'Ceyesta House' Galle Road, Colombo - 03**

## Mega Sale

## தீபாவளியை முன்னிட்டு இன்று 12.10.2014 தொடக்கம்


## மாபெரும் மலிவு விற்பனை


**தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்**



- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான (Coffee Table) இலவசம்
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை (Pillow), Bed Sheet மற்றும் 2 Pillow Covers Free.
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Damro Doorகளுடனும் ஒரு Door Lock இலவசம்
- Innovex TV மற்றும் Preethi Mixi, Stand Fan, Rice Cookers ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
- 32", 40", 50" LED TV களுடன் ஒரு DVD Player இலவசம்.
- 25000/= க்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
- Damro, Pyestra Nilkamal, Phonix, Arpico ஆகிய பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.










## JAMUNA FURNITURE

181, Navalar Road, Jaffna.
T.P. 021 222 1092, 077 757 4776





வரணிப் பிரதேச வைத்தியசாலை முன் பக்க மதில் மற்றும் நுழைவாயிலின் திறப்பு விழாவின்போது யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் மற்றும் குறித்த நுழைவாயிலை அமைத்துக் கொடுத்த கு.பாலச்சந்திரனின் (கனடா) பிரதிநிதி ந.ஸ்ரீதரன் ஆகியோர் இணைந்து நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்து வைப்பதையும் அம்புலன்ஸ் தரிப்பிடத்தைப் பணிப்பாளர் திறந்து வைப்பதையும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரி வீ.கமலநாதன், மருத்துவர் வீ. ஆறுமுகம் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராசா ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஒ-122)



கோயிற்கடவை பிள்ளையார் ஆலய பிரதம குருவும், கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி ஆசிரியருமான நா.கலாதரன் (குருக்கள்) இந்தியாவில் காஞ்சி காமகோடி பீடத்தினால் "வித்வான்" என்ற அதி உயர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



நவாலி ஸ்தான அ.மி.த.க.பாடசாலையில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவின் போது... (ஒ)





ஜேர்மன் பிறேமன் நகரைச் சேர்ந்த குலநாயகம் குடும்பத்தாரின் அனுசரணையுடன் ஏழாவது ஆண்டாக சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் சிறுவர், முதியோர் தின விழா நடைபெற்றது. இதில் அறிவகம் முன்பள்ளி, சலேசியார் முன்பள்ளி நீதிவான் முன்பள்ளிச் சிறார்களும் அ.மி.த.க.பாடசாலை சிறார்களும் பங்கு பற்றினர். சிறார்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

தொடர்ந்து மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் தண்ணீர் போத்தல்களும் பசுமைவள திட்டத்தின் கீழ் மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன. 10 முதியோர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஒ)



சண்டிலிப்பாய் உபதபாலகத்தில் தபாலதிபர் ச.பிங்கலன் தலைமையில் உலக அஞ்சல் தின நிகழ்வுகள் நடைபெற்றன. அந்த நிகழ்வில் கலந்து கொண்டோரில் சிலர். (ஒ)



செட்டிகுளம் மெனிக்பாம் சிவன் கோயிலுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மக்கள் வங்கி இந்து மன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி வழங்கும் நிகழ்வில் செட்டிகுளம் மக்கள் வங்கி முகாமையாளர் ஏ.எச்.எம். அருஷ் மற்றும் வன்னி பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளரும் இந்து மன்ற செயலாளருமான எஸ். நந்தகுமார், செட்டிகுளம் பிரதேச சபை உப தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ)



சம்பத் வங்கி சுன்னாகம் கிளையின் சமூகப் பொறுப்பு வேலைத் திட்டத்தின் கீழ் கீரிமலை பிரதேசத்தில் நூறு நிழல் தரு மரக் கன்றுகள் கடந்த வியாழனன்று நடப்பட்டன. இந் நிகழ்வில் வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் ந.சுகிர்தன், தெல்லிப்பழை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகன், சம்பத் வங்கியின் வட பிராந்திய முகாமையாள ப.சங்கர், சுன்னாகக் கிளையின் முகாமையாளர் ச.சுரேஸ்குமார், வங்கி ஊழியர்கள மற்றும் பிரதேச மக்கள் கலந்து கொண்டனர். (ஒ

## எதிர்காலத்தில் பசுமை உலகம் (தனியார்) நிறுவனம் வரைவுள்ளது
## இஞ்சி பயிர்ச்செய்கை

இலங்கையின் முன்னணி நிறுவனமாக இயங்கும் எதிர்காலத்தில் பசுமை உலகம் நிறுவனமாகிய நாங்கள் எமது திட்டங்களில் ஒன்றான விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு இஞ்சி பயிர்ச்செய்கையினை அறிமுகப்படுத்தி தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றோம். வருமானத்தை மேம்படுத்தும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த விரும்புபவர்கள் எம்மோடு 076 531 0421 எனும் இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

### இஞ்சி பயிர்ச்செய்கையின் நன்மைகள்

* இஞ்சி ஓர் உத்தரவாதத்துடன் கூடிய முதலீடு
* விவசாய ஆராய்ச்சி நிபுணர்களின் ஆலோசனை
* உங்களது நிலத்தில் பயிரிட்டு பராமரிக்க முடியும்
* உவர்நிலம் மற்றும் களிநிலம் போன்றவற்றிலும் பயிரிட முடியும்
* அறுவடை வரை தொடர்ச்சியான பராமரிப்பு, மேற்பார்வை, ஆலோசனைகள் வழங்கப்படும்.
* சந்தையில் இஞ்சிக்கான கேள்வி கூடுதலாக காணப்படுகின்றது
* சிறியளவு முதலீட்டுடன் அதிகளவு இலாபத்தை ஈட்ட முடியும்
* இயற்கை திரவ உரத்தினை பயன்படுத்த முடியும்
* அறுவடைக் காலம் 8 தொடக்கம் 10 மாதங்கள் இதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
* பணத்தினை தவணையடிப்படையில் பகுதி பகுதியாக செலுத்த முடியும்
* தவணை கட்டணத்துக்கு எவ்வித வட்டியும் அறவிடப்படமாட்டாது
* மீளப்பயிரிடப்படும்போது செலவு குறைவாகக் காணப்படும்.
* சந்தை வாய்ப்பு வசதிகள் எமது நிறுவனத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

**குறிப்பு :**
சந்தை வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால்மேற்படி முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்ய ஆர்வமுள்ளவர்கள் 30.10.2014இற்கு முன்னதாக மேற்படி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

| காணியின் அளவு | பயிரிடப்படும் இஞ்சியின் அளவு | 8 -10 மாத அறுவடைப் பெறுமதி | தற்போதைய சந்தைப் பெறுமதி | முதலீடு |
|---|---|---|---|---|
| 01 பரப்பு | 60kg | 1400kg | 1,400,000.00 | 210,000.00 |
| 02 பரப்பு | 100kg | 2800kg | 2,800,000.00 | 420,000.00 |
| 03 பரப்பு | 150kg | 4200kg | 4,200,000.00 | 630,000.00 |

***நிபந்தனைகளுக்கு உட்பட்டது***
திட்ட அமுலாக்கல் பிரிவு
எதிர்காலத்தில் பசுமை உலகம் (தனியார்) நிறுவனம் வரைவுள்ளது.
இல. 133, கண்டி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம்.
(53151)(7.6.3)

## கனடாவில் கல்வி
கல்வி
வேலை
வதிவிடம்

CANADIAN COLLEGE
FOR HIGHER STUDIES
www.thecanadiancollege.ca
705 Progress Ave - Unit 108, Toronto, ON M1H 2X1
T: (416) 850-1456 E: learn@thecanadiancollege.ca

**Study in Canada**
**Spot Admission**



**எமது பாடநெறிகள்**
System Administration (UNIX)
Network (LAN/WAN) Administration
Post Graduate Diploma in Enterprise IT Management

**Apply Now with O/L & A/L for Jan- Apr-June-Sep 2015 Intake**


## இலவச கருத்தரங்கு மற்றும் உடனடி அனுமதி
நவம்பர் மாதம் 1ம் மற்றும் 2ம் திகதிகளில்
காலை 10.00 மணியிலிருந்து பகல் 1 மணி வரை
வெள்ளவத்தை FLEX INSTITUTE இல் நடைபெறும்.

தயவு செய்து உங்கள் கல்வி ஆவணங்களைக் கொண்டு வரவும்.
விசாரணைகள் மற்றும் பதிவுகளுக்கு அழையுங்கள் - 0777 761 346
FLEX Graphic

You can meet president of Canadian College for Higher Studies and UWIN Pro

flex Institute
Step Towards a Bright Future
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Tel: 2501 766 E-mail: flexinstitute@sltnet.lk
Web:www.flexinstitute.lk

# அழைக்கின்றோம் தேவரே வருவீரா? 9 ஆம் ஆண்டில்



## அமரர் கணபதி இராசதுரை
MA, B.Ed, BA (Pol Sci), SLPS 1, SLEAS.1 - JP(WI)
முன்னாள் அதிபர் (1996 - 2005) யாழ்/ மத்திய கல்லூரி)

கல்விக் களத்தில் இலட்சியப் போராளியாம்
இராஜதுரை தேவரே உங்கள் தேவைவய
ஒன்பது ஆண்டுகள் மறைந்த போதும்
கால முணர்த்துகிறது சீடர்கள் தவிக்கிறார்கள்

காப்பெற் வீதியில் அதிவேகப் பயணத்தில்
கற்பனைக் கனவுகளில் சுகம்காணும் நம்மவர்கள்
வசந்தம் வீசுவதாய் சுகந்தத்தை தொலைக்கிறார்கள்
போரின் வடுக்களிலே இழப்பதிகம் கல்விக்கு
பரீட்சைப் பெறுபேறு உயர்ந்துள்ள நிலை காட்டி

ஆய்வு, புத்தாக்கம் மிருதுதிறன் அற்ற கல்வி
வாள்வெட்டு வன்புணர்வு கொள்ளை விபத்து என
வாழ்வியலைச் சிதைப்பதனை வாகாய் மறைத்து விட்டார்
பாவைகள் ஆடல்போல் ஆடிடும் காலமதில்
தேவைக்கு அழைக்கின்றோம் தேவரே வருவீரா?

தெளிந்த திட்டமிடல் தளராத செயல்திறமை
அழிந்த மத்தியத்தை மெருகூட்டி எழுச்செய்தீர்
நெழிந்த பாத்திரமாய் வடபுலத்தில் கல்விநிலை
மொழிந்த கருத்துரையால் பெற்றது புதுப்பொலிவை
தேவைக்கு அழைக்கின்றோம் தேவரே வருவீரா?

சோகம் சுமந்து நின்று ஓரவிழி நீர்கசிய
தாகம் தனைக் காட்டும் உங்கள் முக ஞாபகங்கள்
வேகமது தருவதுவாய் வளர்ப்பு முறை எமக்குதவும்
பாகமாய் அமைந்தவரே பூசிப்போம் வாழும்வரை
தேவைக்கு அழைக்கின்றோம் தேவரே வருவீரா?

தோற்றம்: 28.09.1947 மறைவு: 12.10.2005 (விஜயதசமியில்)

**9 ஆம் ஆண்டு நினைவுப் பேருரையும் நிகழ்வுகளும் (31.10.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்/ மத்திய கல்லூரியில் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**குடும்பத்தினர், கல்விச் சமூகத்தினர், நட்பினர்.**

(53150)(45.3.6.)

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கரத்தினம் சிவராஜா



யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, உருத்திரபுரம், 8ஆம் வாய்க்காலை நிரந்தர வசிப்பிடமாகவும் இல. 18/8, 4ஆம் ஒழுங்கை, தம்பனைக்குள வீதி, நெளுக்குளம், வவுனியாவைத் தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் சிவராஜா 10.10.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவராஜாவின் அன்பு மனைவியும், சிவகுமார் (முகாமையாளர் -இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், முல்லைத்தீவு), சியாமளா (ஜேர்மனி), சசிக்குமார் (பிரான்ஸ்), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுவர்ணலதா, சச்சிதானந்தம், கௌரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற யோகம்மா மற்றும் குமாரசாமி, சிறீதரன், விஜயபவானி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் சுசீலாதேவி, திலகா, காலஞ்சென்ற வைத்தியநாதன் ஆகியோரின் மைத்துனியும், டிவானா, டிவாசன், சாயூரன், சர்மிலன், சாருஜா, சாதனா, சயானி, சாருஜா, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2014) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நெளுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 18/8, 4ஆம் ஒழுங்கை,
தம்பனைக்குள வீதி, நெளுக்குளம், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்.

(53144) (7.6.3)

# மரண அறிவித்தல்

## சிரேஷ்ட பேராசிரியர் மனோ சபாரத்தினம் BSc.(Hons) Col, PhD (Edin)

(முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி, கிழக்குப் பல்கலைக்கழகம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட பேராசிரியர் மனோ சபாரத்தினம்(முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி, கிழக்குப் பல்கலைக்கழகம்) நேற்றுமுன்தினம் (10.10.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - லஷ்மிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், ஞானாம்பிகை, கனகரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற யோகாம்பிகை மற்றும் அமிர்தவல்லி, காலஞ்சென்ற செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும், விஜயகுமாரி (ஜெயந்தி), சுரேந்திரகுமார் ஆகியோரின் சிறிய தாயும், சிவகுமார், காலஞ்சென்ற கேதீஸ்வரி மற்றும் சுசீலா, சுபத்திரா, முருகதாஸ், கண்ணதாஸ், சுகன்யா, ரமணதாஸ், விநாயகதாஸ் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திருநெல்வேலி அம்பலவாணர் பாதை, 'கந்தன் அருள்' இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கொக்குவில் இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கந்தன் அருள்',
அம்பலவாணர் பாதை,
திருநெல்வேலி.


தகவல்:
பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
(சகோதரன்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(53139) (12.3.6)

# மரண அறிவித்தல்

## கந்தையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய அதிபர்- காரைநகர்)



காரைநகர், நாவலடிக் கேணியைப் பிறப்பிடமாகவும் தற்போது தெஹிவளை, பிறேசர் அவனியுவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர்) (10.10.2014) வெள்ளிக்கிழமை அதிகாலை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- சிவகாமிப்பிள்ளை தம்பதிய ரின் மருமகனும், புஷ்பலட்சுமியின் (இளைப்பாறிய விவ சாயப் போதனாசிரியர்) அன்புக் கணவரும், வசந்தமலர், மகேந் திரராஜா, சண்முகராஜா, கனகமலர், ஜெயராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகுமார், பானுமதி, அனுஷா, கௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரஞ்சனி, கஜேந்திரன், துளசி, சுவாஸ்கர், டிலானி, டிலக்ஷன், அக்ஷரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (13.10.2014) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இறுதிக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.கனகசபாபதி
011 273 2795

(52656)(6.4.3)

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை மனோகரன்



நவாலியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை மனோகரன் (இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர்) நேற்று (11.10.2014) சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை- ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்ற கதிர்காமர்- அபிராமி தம்பதியரின் அன்பு மருமகனும் பஞ்சாட்சரராணியின் பாசமிகு .கணவரும் கோணேஸ்வரன் (பொலிஸ் பரிசோதகர், நீர்கொழும்பு), மகேஸ்வரன் (கனடா), மனோறஜனி, மனோமாலினி (ஆசிரியர்கள் யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை), ரவீஸ்வரன் (ஆசிரியர்யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோ.ரதிவதனா (ஆசிரியை, வவு/சைவப்பிர காச வித்தியாலயம்), காலஞ்சென்ற கெ.வாசுகி மற்றும் கெ.டரீனா(கனடா), த.கிருபாகரன் (சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), சி.சிறிகரன் (ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் கல்வி வலயம்), ர.மைதிலி(விரிவுரையாளர் மனிதவள பீடம் யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 12.10.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றுர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
ரவீஸ்வரன்(மகன்)
0776160306

## 'வழித்துணை' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 12

ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் எழுதிய வழித்துணை நூல் வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி றிஸ்வே மண்டபத்தில் காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும். நூல்அறிமுக உரையை யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் செ.கண்ணதாசனும் மதிப்பீட்டு உரையை யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறை பேராசிரியர் ஏ.என். கிருஸ்ணவேணியும் நிகழ்த்துவார்கள்.

(ஓ-ரி)

## டேவிட் நாகநாதன் காலமானார்

தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும் வவுனியா மாவட்ட கிளைத் தலைவருமான டேவிட் நாகநாதன் (வயது -70) நேற்றுக் காலை காலமானார்.

சுகவீனம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று மாலை 5 மணியளவில் உயிரிழந்தார். அவரது உடல் வவுனியா, உக்குளாங்கும் பகுதியிலுள்ள அவரது வீட்டில்அஞ்சலிக்காகவைக்கப்பட்டுள்ளது. நாளை இறுதிக்கிரியைகள் இடம்பெறும்என்றுசெயலாளர் சி.ராஜநாயகம் அறிவித்துள்ளார்.

(4.421)

## கூட்டம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் இன்று ஞாயிறு பிற்பகல்3 மணிக்கு கல்லூரிமண்டபத்தில்இடம்பெறும்என்றுசங்கச்செயலாளர் யோ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

(ஓ-9)

# கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் சாரதியாகப் பணிபுரியும்
M.S.ஈஸ்வரன்
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
யாழ்ப்பாணம்.

(53155)(7.6.3)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னம்மா காசியன்



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா காசியன் 10.10.2014 வெள்ளிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமன் காசியனின் அன்பு மனைவியும், வள்ளிப்பிள்ளை றோசம்மா, நாகலிங்கம், அருளம்மா, தேவி, பூபால சிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
077 964 9731

(53154) (7.6.3)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் ஆரம்பகாலம் முதல் நீண்ட காலமாக கடமையாற்றிய ஆங்கில ஆசிரியர்

## மார்க்கண்டு இரவீந்திரன்

B.A.Dip.in Edu,
(விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(இ16852) (12.3.6)

The Express Institute

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஆளணியினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
10.09.1949

மறைவு
14.09.2014

## அமரர் சோமசுந்தரம் சிவபாலன்

எங்கள் அன்புத் தெய்வம்
எங்களை விட்டு மறைந்து
மாதம் ஒன்றானாலும் உங்கள் நினைவு
எங்களை விட்டு எப்போதும் நீங்காது

வட்டு, வடக்கு,
கல்லநகர், சித்தங்கேணி.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

(53115)(45.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையில் கல்விகற்று 2014 தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 171 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

**றொபின்சன் பிரித்திக்கா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் கல்வியில் பல சித்திகளைப் பெற்று வாழ வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: குடும்பத்தினர் மற்றும் அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சாள்மார். அருநகர்.

[53160](3.6.4)

## இரண்டு காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரியாலையில் வீடு கட்டக் கூடிய 15 பரப்புக் காணியும் முன்பு தென்னந்தோட்டமாக இருந்த 25 பரப்புக் காணியும் விற்பனைக்குள்ளன. நல்ல தண்ணீர், மின்சார வசதிகளும் இருக்கின்றன. வீட்டுக் காணி பரப்புக்கு ரூபா. 9 இலட்சம், தென்னந் தோட்டமாக இருந்த காணி பரப்புக்கு 8 இலட்சம் ரூபா. (விலை பேசித்தீர்மானிக்கலாம். தரகர் தேவையில்லை)

(சி.10937)(45.3.6)

தொடர்பு: 077 607 0642,077 505 9449

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவி செல்வி **நடராசா அபிராமி**

2014 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 187 புள்ளிகளைப் பெற்று உடுவில் கோட்டத்தில் முதலாம் இடத்தையும் வலிகாம வலயத்தில் மூன்றாம் இடத்தையும் யாழ் மாவட்டத்தில் 12 ஆம் இடத்தையும் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டுவதோடு, மேலும் பல்கலைகளையும் கற்று சாதனைகள் பல படைத்து பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

அத்துடன் அவரின் சாதனைக்கு வித்திட்ட அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இறையாசியும் வேண்டி நிற்கின்றோம்.

அம்பலவை,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அம்மம்மா மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்.

(53147)(4.3.6)

## உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

## CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




(Hindi) with English Subtitles

Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## கேரள ஆயுர்வேத மருத்துவம்

- இருதயநோய்
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புகள்
- மூட்டுவலி, முதுகுவலி
- புரோஸ்டேட் பிரச்சனைகள்
- ஒற்றைத்தலைவலி
- சைனஸ் பிரச்சனைகள்
- மன அழுத்தம்
- இருமல், சளி
- படுக்கைப்புண்கள்
- நீரழிவுப்புண்கள்
- நச்சு வைரஸ் பாதிப்பு
- பாலியல் குறைபாடு

**Joint Pains???**

விரல்கள், மூட்டுகள், தோள்களில் வீக்கம், இறுக்கம் மற்றும் உடல் அசைவின் போது முதுகிலும் பாதங்களிலும் வலியா?



வலியில்லாத ஒரு வாழ்க்கைக்கு எம்மை நாடுங்கள்

Tel : 011 4388101
4388102

Hotline : 0777 555600/ 0777 708330 / 0777 708310

**Free Consultation**
Daily @ Ceylinco House
Weekdays 9.00 a.m - 5.00 p.m
Saturdays 9.00 a.m - 2.00 p.m
Monthly Clinics are conducted islandwide

FAIR PHARMA (PVT) LTD
(Kerala Ayurvedic Medicine)

Ceylinco House, 11th Floor, No : 69, Janadhipathi Mawatha, Colombo - 01.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA & BOI
AN ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

## English Classes in Vadamaradchi

English Literature for
G.C.E. (O/L), (A/L) & B.A
For Cambridge Exams-KET, PET & IELTS
For Grade 10 & G.C.E (O/L)

Contact : 076 685 8127

(51962) (7.6.3)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், சுதுமலை தெற்கு, கோயில் பற்று 3½ (மூன்று அரை) பரப்புக் காணியும், தொழில் செய்வதற்கு ஏற்ற (தச்சுத்தொழில் செய்யும் பட்டடையுடன் சேர்ந்த) கட்டடமும் உடன் விற்பனைக்குண்டு.

(53138) (12.3.6)

தொடர்பு: 077 633 2373/077 855 9604/021 321 0639

## State Bank of India

### Branch Manager / Assistant Branch Manager

Applications are invited from suitably qualified and experienced candidates for the following positions.

**Branch Manager - Jaffna**
Requirements:

- Should possess a minimum of 3 years' experience as a branch manager in a licensed commercial bank in Sri Lanka
- Thorough knowledge in credit management and banking operations.
- Knowledge of Tamil language.
- Preferably a degree from a recognized university.
- Candidates having professional qualifications like CBF/DBF from IBSL will be preferred.
- Should have flair for marketing and business development.

**Assistant Branch Manager – Jaffna**
Requirements:

- Should possess a minimum of 3 years' experience as an officer in a licensed commercial bank in Sri Lanka
- Thorough knowledge of branch operations.
- Knowledge of Tamil language.
- Preferably a degree from a recognized university or equivalent professional qualifications.
- Should have flair for marketing and business development.

Selected candidates will be offered a remuneration package commensurate with qualification and experience.
Candidates have to furnish in their application the full details of the present salary and expected salary for the post applied for.
Interested candidates may forward their curriculum vitae under registered post, along with photocopies of documents in support of age, qualifications and experience to:

The Country Head
**State Bank of India**
16, Sir Baron Jayatilake Mawatha, Colombo - 01
Phone: 444 6800 e mail: careers.lk@statebank.com
Visit us at www.sbisrilanka.net

Serving Sri Lanka since 1864

Skyline

## தொழில்சார் கற்கை நெறிகள்

**IT Courses**
- Dip.in Computerised Accounting • MS Office Applications
- Video Editing & Composite Applications
( Photoshop | Premiere with encore | After effect )

பல்கலைக்கழக மாணவர்களிற்கான கற்கைநெறிகள்
• Pythan • C language • Java

**Language Courses**

கொழும்பிலிருந்து வருகை தரும் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள் | ஒவ்வொருவரிலும் தனிப்பட்ட கவனம் | மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் மாணவர்களுக்கு அனுமதி | ஆங்கிலத்தில் சரளமாக பேச 100% உத்தரவாதம்



- Spoken English • Cetificate in English
- Diploma in English • IELTS • A1,B1 & B2

ஆரம்பம் : 15.10.2014 (புதன் 9 am)

**CIL Cambridge Institute of London**
No.39/4A,3rd Lane,Power House Road,Jaffna.
Tel : 0212217774 / 0777382108 (ராசி சில்க்ஸ் அருகாமையில்)

max adz

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட மாகாணத்தில் சிறந்து விளங்கும் இளவாலை யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகத்திலிருந்து இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணிக்கு தெரிவாகியுள்ள

**செயமாலைநாயகம் ஞானரூபன்**

அவர்களை அன்புடன் வாழ்த்தி நிற்பதுடன் மேலும் பல சாதனைகள் படைத்து எமது அணிக்கும் தேசிய அணிக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம். மேலும் எமது கழகத்திலிருந்து முதலில் தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்த சச்சிதானந்தம் சதீஸ்வரன் அவர்களையும், மற்றும் 17 வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில இடம்பிடித்த ... செல்வன் ஞானேஸ்வரன் ... அவர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.

அன்ரன்று...

வாழ்த்துவோர் :
யங்கென்றீசியன் விளையாட்டுக் ... கழகம், இளவாலை.

Best Wishes

(53146) (K7.6.3)

# ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை தந்து இங்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பாரா?

## யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 12

வடக்குக் கிழக்கில் ஆயுதம் ஏந்திய புலிகளோ அன்றி தனி ஈழத்திற்காகப் போராடும் ஆயுதக் குழுக்களோ இல்லை. அப்படி இருப்பதாக யாராவது கூறுவார்களேயானால் அவர்கள் யதார்த்தத்தை உணராதவர்களே. எனவே இங்குள்ள மக்களின் மனங்களை வெல்ல இங்குள்ள பிரச்சினைகளை இங்கு வரும் ஜனாதிபதி தீர்க்க வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.இராசகுமாரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி மஹிந்த யாழ்ப்பாணம் வரும்போது நாம் எதிர்பார்ப்பது என்ன? போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் ஈழத்தமிழ் மக்கள் இன்னமும் எந்த ஒரு தீர்வும் கிடைக்காத நிலையிலேயே இருப்பதாகவே கருதுகிறார்கள். அதுவே உண்மையும் ஆகும். வெளிப்பார்வைக்கு அபிவிருத்தி இடம்பெறுவதான ஒரு மாயத் தோற்றமே அன்றி ஈழத் தமிழ் மக்கள் மனதில் அப்படியான ஒரு உணர்வு ஏற்படவில்லை. ஈழத் தமிழ் மக்கள் மனங்களை மேலும் புண்படவைக்கக்கூடிய நிகழ்வுகளே இடம்பெறுகின்றன.

உண்மையில் புண்பட்ட ஈழத் தமிழ் மக்களிற்கு ஆறுதல் அளிக்கக்கூடிய விதத்தில் ஜனாதிபதி நடந்துகொள்ள வேண்டும் எனில் அவர்களது மனங்களை வெல்லக்கூடிய நடவடிக்கைகளை இனியாவது உடனடியாகச் செய்யவேண்டும்.

எனவே இராணுவ முகாம்களின் எண்ணிக்கையை அதிகரித்து அதற்காகத் தமிழ் மக்களின் காணிகளைச் சுவீகரிப்பதும் இன்னும் நிலைமையைச் சீரழிக்கும். எனவே ஜனாதிபதி, யாழ். பயணத்தின்போது தமிழ் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவது உடன் நிறுத்தப்படும் என்றும் இராணுவ முகாம்களின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்றும் இராணுவம் சிவில் நிர்வாகத்தில் தலையிடாது எனவும் அறிவிக்க வேண்டும். அறிவிப்பது மட்டுமல்லாது அதனைச் செயற்படுத்தவும் வேண்டும்.

இரண்டாவதாகச் சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுவிப்பதாக அறிவித்து அதனையும் உடன் செயற்படுத்த வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் ஜனாதிபதி தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை கொண்டுள்ளார் என்பதை உணர்த்தலாம். ஈழத் தமிழ் மக்கள் அற்ப சலுகைகளிற்கு விலைபோவார்கள் என யாராவது தவறாக எடை போட்டால் அது மிகவும் பிழையான முடிவாகும்.

மூன்றாவதாக போர் காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி இன்னும் உள்ளூரிலேயே அகதி வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும் அனைத்துத் தமிழ் மக்களையும் அவர்களது சொந்த இடத்திலேயே உடன் மீளக் குடியமர்த்தக் கட்டளை இடவேண்டும்.

இவ்வாறு செய்வது அனைத்துலக ரீதியில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கை அரசுக்கிருக்கும் அக்கறை பற்றி அதன் மீது இருக்கும் சந்தேகத்தைக் குறைக்கும் எனவும் நம்பலாம். ஜனாதிபதி இதனைச் செய்ய வேண்டும் - என்றார். (த-4)

# பஸ் இல்லாமல் பயணிகள் அவதி

யாழ்ப்பாணம், ஒக் 12

யாழ்.நகரிலிருந்து வழமை போன்று இரவு 8.30 மணிக்குப் புறப்படும் பஸ்கள் நேற்றுப் பணியில் ஈடுபடாதமையால் பெருமளவு பயணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதோடு விசனமும் தெரிவித்தனர்.

முன்னரே அறிவித்திருந்தால் தாம் அதற்கேற்பத் திட்டமிட்டுப் புறப்பட்டிருக்கலாம் என்றும் எதனையுமே அறிவிக்காது தம்மை அலைய விட்டுள்ளனர் என்றும் அதனால் அதிக பணத்துக்கு ஓட்டோக்களை வாடகைக்கு அமர்த்தியே தாம் பயணம் மேற்கொண்ட தாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

இரவு நேர பஸ் சில நாள்களுக்கு முன்பாகவிருந்து 8.30 மணிக்கே புறப்படும் என்று அறிவித்திருந்தனர். அதனால் வியாபார நிலையங்களில் பணிபுரிபவர்கள் உள்ளிட்ட பலரையும் அவர்களது வேலை வழங்குநர்கள் இரவு 8.15 மணிக்கே விடுவிக் கின்றனர். ஆனால் நேற்று பஸ்கள் அனைத்தும் 8 மணிக்கே புறப்பட்டுச் சென்றுவிட்டதனால் ஏராளமான பயணிகள் பாதிக்கப்பட்டனர். அது தொடர்பில் முன்னரே அறிவித்திருக்கலாம். மக்களுக்குச் சேவை செய்ய முடியாவிட்டால் பிறகு எதற்கு அரச பஸ் என்று பலவாறாகத் திட்டித் தீர்த்தனர் பயணிகள்.

இதேவேளை, யாழ். டிப்போவுக்குச் சொந்தமான 42 பஸ்கள் வன்னிக்குப் பொது மக்களை ஏற்றிச் செல்வதற்காக எடுக்கப்பட்டுவிட்டன. அதனால் பஸ்கள் இல்லை. இன்று (நேற்று) அனைத்து பஸ்களும் சாரதிகளுடன் எடுக்கப்பட்டுவிட்டன. இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பஸ்கள் அனைத்தும் வந்துவிடும். ஏனைய டிப்போக்களிலும் இதுதான் நிலைமை. என்று யாழ்.பிராந்திய அதிகாரி குலபாலசெல்வம் தெரிவித்தார். நாளை திங்கட்கிழமையும் இதே நிலைமைதான் ஏற்படும் என்று கூறப்படுவது தொடர்பில் கேட்டபோது, நாளை பஸ்கள் தேவைப்படுவது பற்றி தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை - என்றார். (த-4)

# சப்ரகமுவ மாணவர் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக். 12

சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்ட சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மீது நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு அடையாளம் தெரியாத குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் 12 பேரும், பொது மக்கள் இருவரும் காயமடைந்துள்ளனர். காயமடைந்த மாணவர்களில் 6 பேர் தொடர்ந்தும் பலாங்கொடை அரச மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக மாணவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளரான ரசிந்து ஜயசிங்க கூறினார். (த-ரி)

# தொடர்ச்சிகள்

### வடக்குக்கு

நண்பகல் 12 மணிக்குக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தைத் திறந்து வைக்கும் ஜனாதிபதி, பி.ப. 3.45 மணியளவில் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திலும், மாலை 4.30 மணிக்குக் கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும் மஹிந்தோதய ஆய்வுகூடத்தைத் திறந்து வைக்கவுள்ளார். இறுதியாக, அமெரிக்க அரசின் நிதியுதவியில் புனரமைக்கப்பட்ட அக்கராயன் வைத்தியசாலையை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பளை ரயில் நிலையத்திலிருந்து யாழ்தேவியில் யாழ்ப்பாணம் மத்திய ரயில் நிலையத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகை தரவுள்ளார். இதன்போது கொடிகாமம் ரயில் நிலையம், நாவற்குழி ரயில் நிலையம் ஆகியவற்றை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார். இறுதியில் முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.மத்திய ரயில் நிலையத்தை வந்தடைவார்.

அதன் பின்னர் முற்பகல் 11 மணிக்கு, வீரசிங்கம் மண்டபத்தில் மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஜனாதிபதி நடத்தவுள்ளார். பி.ப 1.30 மணியளவில், அரச ஊழியர்கள் 4 ஆயிரத்து 500 பேருக்கு மோட்டார் சைக்கிள் வழங்கவுள்ளார். மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குச் சென்று அங்கு மஹிந்தோதய ஆய்வு கூடத்தைத் திறந்து வைக்கவுள்ளார். இறுதியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கு ஜனாதிபதி சென்று கன்னங்கரா நினைவு தினத்தில் பங்கெடுக்கவுள்ளார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, நெடுந்தீவுக்குச் செல்லும் ஜனாதிபதி மஹிந்த அங்கு பிரதேச செயலகம் மற்றும் மஹிந்தோதய ஆய்வு கூடம் என்பனவற்றை திறக்கவுள்ளார். அதன் பின்னர் ஊர்காவற்றுறையிலும், காரைநகரிலும், வட்டுக்கோட்டையிலும் மஹிந்தோதய ஆய்வு கூடம் என்பவற்றை திறந்து வைக்கவுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெறவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்குக்குப் பயணம் மேற்கொள்வதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பகிரங்கமாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

### ஜனாதிபதியின்

விட்டுத் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களையும் புறக்கணித்துவிட்டு, ஜனாதிபதி யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நிகழ்ச்சி நிரலை தயாரித்து விட்டு வருகின்றார்.

தமிழ் மக்களுடைய சொந்த நிலங்களில் இராணுவத்தினர் ஆக்கிரமித்து நிற்கின்றார்கள். அந்த மக்கள் வாழ்ந்த காணிகளை வழங்கவில்லை. மக்களுக்கான வாழ்விடங்களை, பாதுகாப்பை இன்னும் சீரமைத்துக் கொடுக்கவில்லை.

வடபகுதியில் தங்களுடைய சொந்த நிலங்களில் குடியேற வேண்டிய மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக உள்ளார்கள். அவர்களுடைய நிலங்களைகொடுப்பதற்கு படையினர் மறுக்கிறார்கள். அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை.

ஜனாதிபதி தனது தேர்தலின் வெற்றிக்காக நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்திவிட்டு யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் வருகின்றார். பொதுமக்களையும் அரச உத்தியோகத்தர்களையும் இத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவேண்டும் என்று அச்சுறுத்திப் பயமுறுத்துகின்றார்கள் அரச அதிகாரிகள்.

ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளில் மக்கள் அடிபணிந்து அச்சப்பட்டுப் பங்குபற்றத் தேவையில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளைப் புறக்கணிப்பதோடு தமிழ் மக்களையும் புறக்கணிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்-என்றுள்ளது. (த)

### ஜனாதிபதிக்காக

இடம்பெற்றன. அத்துடன் முற்றவெளி பகுதியைத் தூய்மையாக்கும் பணியில் சுகாதார பகுதியினர் கடந்த இரண்டு நாள்களாக ஈடுபட்டனர்.

அதேவேளை, வீரசிங்கம் மண்டபத்தில் உள்ள நன்னீர் கிணற்றின் குடிதண்ணீரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

கிணற்று நீரில் ஏதாவது தொற்று கிருமிகள் உண்டா என்பதைக் கண்டறிவதற்காகச் சுகாதாரப் பகுதியினர் அதன் மாதிரியை எடுத்து சென்றனர். (த-17)

### யாழ்.

உறுப்பினர்கள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் முதல் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போதே பதிவாளர் அலுவலகத்தின் முன்பாக குறித்த மலர் வளையம் வைக்கப்பட்டுள்ளது. அதனைப் பதிவாளர் எடுத்து தனது அலுவலகத்தில் வைத்திருந்தார் என்று அங்குள்ள அதிகாரி கள் தெரிவித்தனர். (த-4)

### வடமாகாண

ரயில் நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் தொடர்பில் பார்வையிடுவதற்கு நேற்று யாழ் ரயில் நிலையம் வந்த அவர் மேலும் தெரிவித்ததாவது:-

24 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு ரயில் வரப்போகிறது. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் உறவுப் பாலமாக யாழ்தேவி ரயில் சேவை இனிச் செயற்படும். வடக்கும் மக்களின் போக்குவரத்துக்கு இனி இடர்பாடுகள் இருக்காது. ரயில் திணைக்களம் முடிந்தவரை புனரமைப்புகளை விரைவுபடுத்தியுள்ளது. இனி எந்தவித அசம்பாவிதமான சம்பவங்கள் இடம்பெறாமல் கடந்த காலங்களைப் போன்று மக்கள் இனி சந்தோசமாக இருக்கலாம்-என்றார்.

போக்குவரத்துப் பிரதியமைச்சர் ரோஹக திஸ்ஸநாயக்க தெரிவிக்கும்போது:

மீண்டும் யாழ்ப்பாணத்தக்கு ரயில் வரப்போகிறது. இந்தச் சேவையால் வடக்கு மக்கள் தெற்குக்கு இலகுவாகப் பயணங்களை மேற்கொள்ள முடியும். போக்குவரத்தின்போது அவர்களுக்கான வசதிகள் ரயில்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளது-என்றார்.

இந்த நிகழ்வில் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ரயில் நிலையத்தின் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டனர். (த-14-ரி)

### சிங்க

நிலையம், நாவற்குழி ரயில் நிலையம் என்பவற்றையும் அவர் திறந்து வைக்கவுள்ளார்.

இதற்காக ஒவ்வொரு ரயில் நிலையங்கள் மற்றும் ரயில் பாதைகளை அண்டியுள்ள பாடசாலைகளின் மாணவர்களைக் கட்டாயமாக இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு அதிகாரிகள் பணித்துள்ளனர். பாடசாலை நாளான நாளை மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை முழுமையாக விட்டு, ஜனாதிபதியை வரவேற்கச் செல்லவேண்டும் என்று அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இவ்வாறு ரயில் நிலையங்கள் மற்றும் ரயில் பாதைகளில் நிற்கும் பாடசாலை மாணவர்களின் கையில், இலங்கையின் தேசியக் கொடியைக் கொடுத்து அதனை ஜனாதி பதி பயணிக்கும்போது அசைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுச் சனிக்கிழமை, இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினங்கள் என்றபோதும் பிரதேச செயலக அரச அதிகாரிகளை வருமாறு பணித்து, ரயில்வே அலங்கார மற்றும் ஒழுங்கு வேலைகளை மேற்கொள்ளுமாறு கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். (த-5)

### கிளிநொச்சியை

சேர்ந்த 4 ஆயிரத்து 228 பேருக்கும், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரம் பேருக்கும், காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்காகப் பொதுமக்கள் 400 பஸ்களில் வடக்கின் பல பகுதிகளிலிருந்தும் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு இன்று அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இதற்காக இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதனால் வடக்கு மாகாணத்தின் வழமையாக சேவையில் ஈடுபடும் போக்குவரத்துச் சபையின் சேவை எண்ணிக்கை குறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### பொது

ருக்கிறோம். புதிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு அனைத்துப் பகுதிகளும் இணைக்கப்பட்டு இன்று இலங்கை சுருங்கிவிட்டது.

அபிவிருத்தியை ஏற்றுக்கொள்ளாத எதிர்த் தரப்பினர், அரசு மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். ஆனால் பொதுமக்களுக்கு உண்மை என்னவென்பது நன்றாகத் தெரியும். குறிப்பாக சீனாவுடன் இணைந்து நாம் மேற்கொண்ட அபிவிருத்திகளைக் கடுமையாக விமர்சித்தனர். ஆனால் அந்தக் குற்றச்சாட்டுக்களை நாம் பொருட்படுத்தவில்லை. இனியும் பொருட்படுத்தப்போவதில்லை. நாட்டின் அபிவிருத்தி தொடரும் - என்றார். (த-5)

### 7 பொதுமக்கள்

வாகனம் பஸ் மீது மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. எஸ்.சுரேகா (வயது-18), என்.கயானா (வயது-15), பு.சுகிர்தா (வயது-16), து.கோபிசா (வயது-29), அ.சண்முகராசா (வயது-50) ஆகியோர் காயமடைந்த பொதுமக்களில் அடங்குவர்.

பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த 05 இராணுவத்தினர் இந்த விபத்தில் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உருத்திரபுரம் செல்லும் சந்தியில் இந்த விபத்து நடந்துள்ளது. (த-18)

### வடமாகாண மீனவர்கள்

அமைச்சிடம் தெரியப்படுத்தப்பட்டபோதும் சாதகமான முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் மீனவர் பிரதிநிதிகள் கொழும்பில் ஒன்று கூடி இந்த முடிவை எடுத்தள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட கிராமிய மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் குழு யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர். யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள ஒருங்கிணைப் புக் குழுக்கூட்ட த்தின்போது இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-14)

# வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது தெல்லிப்பழை யூனியன் கல்லூரி



வலி.வடக்கு.ஒக்.12

பலத்த போட்டியின் பின்னர் யாழ். மாவட்ட ஹொக்கிச் சம்பியனானது தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் விளையாட்டு அவையின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண்கள் அணிகளுக்கு இடையே நடத்திய அமரர் ரி.பி.பத்மநாதன் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டியின் இறுதியாட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் மகாஜனக் கல்லூரி ஒரு கோலைப் பெற்ற போதிலும் அது முறையற்ற கோல் என மத்தியஸ்தர்களினால் அறிவிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது. முதல் பாதி ஆட்டத்தில் ஆட்டம் முடிவடைய ஏழு நிமிடங்கள் இருக்கையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வீரர் ஜங்கரதாஸ் தனது அணிக்கான ஒரு கோலைப் பெற்றுக்கொண்டார்.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் உத்வேகத்துடன் களமிறங்கிய நிலையில் போட்டி முடிவடைய நான்கு நிமிடங்களே இருக்கையில் மீண்டும் ஒரு கோலை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சார்பாக அந்த அணி வீரர் பமில்ரன் பெற்றுக் கொள்ள அதனை உடனடியாக முறியடிக்கும் வகையில் ஒரு நிமிட இடைவெளியில் மகாஜனக் கல்லூரி வீரர் சஜீவன் கோலைப் பெற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் ஆட்டம் முடிவடைய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

போட்டியின் ஆட்ட நாயகனாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஜங்கரதாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்களை முன்னாள் ஹொக்கிச் சங்கத் தலைவரும், ஹொக்கி விளையாட்டு வீரரும் ஆசிரியருமான துஷ்யந்தன் வழங்கிக் கௌரவித்தார். (ரி- 86)

## நவிண்டில் கலைமதி வெற்றி

யாழ்ப்பாணம்.ஒக்.12

தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வெற்றி பெற்றது நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி. உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)

## வதிரி பொம்மர்ஸ் வெற்றி

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும், அணிக்கு 7 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)

## அல்மதா, யங்ஸ்ரார் இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம்.ஒக்.12

நிர்மலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும், அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்களில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி, அல்மதா விளையாட்டுக்கழக அணி என்பன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் அல்மதா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈகிள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் கோல் எதனையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றியாளரைக் காண்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் அல்மதா விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் அல்மதா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஸ்ரீரெலோவின் செயலாளர் உதயராசா மற்றும் நிர்மலன் அவர்களின் பாரியாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி- 23)

## மகாஜனவை வெற்றிகொண்டது சென்.ஜோன்ஸ்

வலி.வடக்கு.ஒக்.12

நான்கு ஆட்டங்களில் ஒன்று சமநிலையில் முடிவடைய ஏனைய மூன்றிலும் மகாஜனவை வெற்றி கொண்டது சென். ஜோன்ஸ்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை மகாஜனக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகளின் 14, 16, 18, 20 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையே ஆட்டங்கள் நடைபெற்றன.

இதில் 14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 16 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் இரு அணிகளும்கோல்கள் எதனையும் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. 18 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணிகளும் எதிர்பாராத அளவுக்கு உக்கிரமானதாக விளையாடிய போதிலும் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றியை தனதாக்கிக் கொண்டது. முதல் பாதி ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 3 கோல்களைப் பெற்று முன்னிலையில் காணப்பட்ட போதிலும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் உத்வேகத்துடன் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிரடியாக விளையாடி நான்கு கோல்களைப்பெற்றுக்கொள்ள, ஆட்ட நிறைவில் சென். ஜோன்ஸ் கல்லூரி 4:3 என்ற கோல்கள் அடிப்படையில் மகாஜனக் கல்லூரியை வெற்றி கொண்டது. (ரி- 86)

## வடமாகாணத்துக்கு ஐந்தாமிடம்

அகில இலங்கை ரீதியான பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய விளையாட்டு விழாவில் 189 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்துக்கு முன்னேறியது வட மாகாண அணி.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைந்தன. இதில் கடந்த வருடம் 178 புள்ளிகளைப் பெற்று 6ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட வட மாகாண அணி, இந்த வருடம் 189 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்தைக் கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் வடமாகாணத்துக்கு 9 தங்கம், 9 வெள்ளிப்பதக்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்களும், 4 வர்ண விருதுகளும் வெல்லப்பட்டுள்ளதாக வடமாகாண உடற்கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் தெரிவித்தார்.

இதேவேளை- 1118 புள்ளிகளைப் பெற்ற மேல் மாகாண அணி முதலிடத்தையும், 541 புள்ளிகளைப்பெற்று வடமேல் மாகாண அணி இரண்டாமிடத்தையும், 519 புள்ளிகளைப் பெற்று சப்ரகமுவ மாகாணம் மூன்றாமிடத்தையும் பெற்றன. (ரி- 108)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஒக்.12

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23-108)

★ ★ ★

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

★ ★ ★

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில்- பி.ப.3 மணிக்கு சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும்- மாலை 4 மணிக்கு கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (ரி-108)

★ ★ ★

தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில்-காலை 8 மணிக்கு தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாகர்கோவில் நாகதீபம் விளையாட்டுக் கழகமும்.காலை 9 மணிக்கு வெற்றிலைக்கேணி சென்.செபஸ்தியார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகமும், பி.ப. 3 மணிக்கு கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து செம்பியன்பற்று சென். பிலிப்நேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ரி-108)

## பிலிப்நேரிஸ், வல்வை வெற்றி

விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டங்களில் எதிரணிகளை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறின செம்பியன்பற்று சென்.பிலிப்நேரிஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் வல்வை விளையாட்டுக் கழகம்.

தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் செம்பியன்பற்று சென். பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழகமும், வத்திராயன் உதய சூரியன் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணியினரும் சமபலத்துடன் மோதியதால் ஆட்டம் பார்வையாளருக்கு விருந்தாக அமைந்தது.

ஆட்டம் ஆரம்பமாகி 5 ஆவது நிமிடத்தில் பிலிப்நேரிஸ் விளையாட்டுக்கழக வீரர் நெல்சன் கோல் ஒன்றைப் போட ஆட்டம் மேலும் இறுக்க மடைந்தது. இதனை அடுத்து ஆட்டம் சூடு பிடிக்க இடைவேளைக்காக நிறுத்தப்படுவதற்கு 3நிமிடங்கள் இருக்கும் போது உதய சூரியன் விளையாட்டுக்கழக வீரர் ரஞ்சன் கோல் போட ஆட்டம் 1:1 என்ற சமநிலையில் நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் இரு அணியினரும் கோல் போடுவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டபோதும் அது நிறைவேறாத நிலையில் 1:1 என்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதனை அடுத்து வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் 4:3 என்ற கோல் கணக்கில்செம்பியன்பற்றுசென். பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகமும், வல்வை விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தின் 3 ஆவது ஆட்டத்தில்பொலிகை பாரதி விளையாட்டுக்கழக வீரர் ரஜித்குமார் பொலிகை பாரதி விளையாட்டுக்கழக வீரர் கோல் போட்டார். அது நடைபெற்று ஆரவாரம் அடங்குவதற்குள் 7 ஆவது நிமிடத்தில் பிரசாந்தும், சுரேன் 23 ஆவது நிமிடத்திலும் கோல் போட 1:2 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 4 ஆவது நிமிடத்தில் பொலிகை பாரதி சார்பாக மன்மதன்ரூபன் கோல் போட உசார் அடைந்த வல்வை விளையாட்டுக்கழக வீரர் 22 ஆவது நிமிடத்தில் சண்முகநாதன் கோல் போட 3:2 என்ற கோல் கணக்கில் வல்வை விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (ரி-108)

# ஆடைக்கு விளக்கம் கொடுத்த சானியா

தொழில் நிர்ப்பந்தத்திற்காகவே சிறிய ஆடை களை அணிய வேண்டி உள்ளது என்று இந்திய நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடைபெற்ற கோடைகால "ஆடைகள் பேஷன் ஷோ" ஒன்றில் கலந்து கொண்ட சானியா நிருபர்களிடம் கூறியதாவது : இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொள்வது வேடிக்கையானது. நான் ஆடை வடிவமைப்பை மிகவும் நேசிக்கிறேன். சந்தர்ப்பங்களுக்கு தகுந்தவாறு ஆடை அணிவதையே நான் விரும்புகிறேன். நான் கமெராவை எதிர் கொள்ள மிகவும் வெக்கப்படுவேன். மைதானத்தில் இல்லாத போது நீண்ட ஆடைகளையே அணிய விரும்புவேன். எனது தொழில் நிர்ப்பந்தத்திற்காகவே சிறிய ஆடைகளை அணிய வேண்டி உள்ளது. அது தான் வசதியாகவும் உள்ளது. மேலும் நான் விளையாட்டில் கலந்து கொள்ளாத போது நீளமான ஆடைகளை அணியவே விரும்புவேன் என்று கூறினார்.



சில வருடங்களுக்கு முன்னர் சானியாவின் ஆடைகள் பற்றி சர்ச்சைகள் ஏற்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே. (ரி)

# இந்தியாவிடம் சரணடைந்த மேற்கிந்தியதீவுகள்

45 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழக்க, வென்றிருக்க வேண்டிய ஆட்டத்தில் இந்தியாவிடம் சரணடைந்தது மேற்கிந்திய தீவுகள்.



இந்தியா மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நேற்று டில்லியில் உள்ள பெரோசா கோட்லா மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பம் சறுக்கலாக இருந்த போதும், கோஹ்லி, ரெய்னா ஜோடி சிறப்பாக ஆடியது. இந்த ஜோடி தமக்கிடையே 105 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து கொண்டது. இறுதி நேரத்தில் டோனி அதிரடியாக ஆட இந்தியா 50 ஓவர்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றது. கோஹ்லி, ரெய்னா தலா 62 ஓட்டங்களையும், டோனி ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜெரோம் ரெய்லர் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு அசத்தலான தொடக்கம் கிடைத்தது. டரன் பிராவோ 26 ஓட்டங்களுடனும், கிரன் பொலார்ட் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க, அதிரடியாக ஆடிய தொடக்க வீரர் ஸ்மித் 97 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். இவர் ஆட்டமிழக்கும் போது 170 ஓட்டங்களைப் பெற்றிருந்த மேற்கிந்திய தீவுகள் அணி மேலதிகமாக 45 ஓட்டங்களை மட்டுமே பெற்று 215 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில், மொகமட் சமி 4 இலக்குகளையும் ஜடேஜா 3 இலக்குகளையும், அமிற் மிஸ்ரா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மொகமட் சமி தெரிவானார். (ரி)

# ஆரம்பத் துடுப்பாட்டத்தை விரும்பும் ரோகித்




ஒருநாள் ஆட்டங்களில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்குவதையே நான் விரும்புகிறேன் என்று இந்திய அணி வீரர் ரோகித் சர்மா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, கடந்த சில காலமாக ஆரம்ப வீரராகக் களமிறங்குவது எனக்குப் பொருத்தமாக இருந்து வந்துள்ளது. சம்பியன் கிண்ணத் தொடரிலிருந்து நான் ஆரம்ப வீரராக களமிறங்கினேன். ஆரம்ப வீரராக விளையாடுவது எனக்குப் பிடித்தமானதாக இருக்கிறது. கடந்த 18 மாதங்களாக நான் என்ன செய் தேன் என்பது பற்றி நான் கூற விரும்பவில்லை. ஆனால் புள் ளிவிவரங்களைப் பார்த்தால் ஓரளவுக்கு நான் சிறப்பாகவே ஆடியுள்ளதாக நினைக்கிறேன். தொடக்க வீரராக செயல்படுவது சவாலானது. குறிப்பாக ஒருநாள் ஆட்டங்களில் இரு முனைகளிலும் புதிய பந்தை எதிர்கொள்வது அவ்வளவு எளிதல்ல. இதனால் தொடக்கத்தில் அதிக கவனம் செலுத்த முடிகிறது. இவ்வாறு கூடுதல் கவனத்துடன் விளையாடுவது எனது துடுப்பாட்ட திறமைகளைக் கூட்டியுள்ளது என்றே நான் கருதுகிறேன். அதற்காக, மத்திய வரிசையில் களமிறங்குவதில் சவால்கள் இல்லை, கவனம் தேவையில்லை என்று நான் கூறவில்லை. மாறாக தொடக்கம் என்னை மேம்படுத்தியுள்ளது என்று கூறுகிறேன். ஆனாலும் தொடக்க வீரர் இடத்திற்கு இப்போது ஏற்பட்டுள்ள போட்டி அணிக்கு நல்லது என்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குள் உடல் நலம் தேறிவிடுவேன் என்று நினைக்கிறேன் என்றும் அவர் கூறியுள்ளார். (ரி)

# தொடர் ஆஸ்திரேலியா வசம்



இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தை வெற்றியீட்டியதன் மூலம், பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரைத் தன்வசப்படுத்திக் கொண்டது ஆஸ்திரேலியா.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆஸ்திரேலிய அணிக்கெதிரான இரண்டாவது ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதலாவது இலக்குக்காக செஷாட், அகமட் ஜோடி 126 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்ட போதும் 49.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்த அந்த அணி 215 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது. அதிகபட்சமாக செஷாட் 61 ஓட்டங்களையும், அகமட் 65ஓட்டங்கலையும் பெற்றுக் கொண் டனர். பந்து வீச்சில் ஜோன்சன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இலகுவான இலக்கை விரட்டிய ஆஸ்திரேலிய அணி 40 பந்துகள் மீதமிருந்த நிலையில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக தெரிவான மக்ஸ்வெல் அதிகபட்சமாக 76 ஓட்டங்களைப் பெற்றார்.

ஏற்கனவே முதலாவது ஆட்டத்தை வென்றிருந்த ஆஸ்திரேலியா, இந்த வெற்றியின் மூலம் 3 ஆட்டங்களைக் கொண்ட தொடரை 2- 0 என்ற கணக்கில் தன்வசப்படுத்தி உள்ளது. இரு அணிகளும் மோதும் மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ரி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

நீங்களும் இணையத்தள வடிவமைப்பாளராகலாம்!

Mobile Apps Developer ஆகலாம் ! கணினி வல்லுனராகலாம்!

After A/L? Interested in IT? Confused Where to Join?

Now Time to Stop Searching! And Joint Directly at Speed IT

Why?

We provide training that stand you to Start Work on Project.




"முற்றிலும் தொழிற் தகைமையினை மையமாக கொண்ட கற்கைநெறிகள்! கடந்த 10 வருட காலமாக இணையத்தள வடிவமைப்புத்துறையில் தனித்துவம் பெற்றவர்கள்"

Our Courses

- Diploma in Web Designing (3months)
- Advanced Diploma in Web Engineering (8months)
- Mobile Application Development For Android (20hrs)
- Advanced Mobile Application Development For Android (40hrs)
- BIT Degree Program Year 1 & 2 / BCS

Register Before 20.10.2014 @ http://course.speedit.lk

(C/16851)

Speed IT net, 136 Palaly Road, Parameswara Junction Thirunelvely, Jaffna.

Tel: 021 222 8358 Email: biz@speedit.lk Web: http://www.speedit.lk

# FURNITURE MEGA SALE

ARPICO · Piyestra · Nilkamal

வந்து பாருங்கள் வித்தியாசத்தை புரிவீர்கள்

## தீபாவளி தள்ளுபடி

எங்கும் கிடைக்காத விலைக்கழிவு
7 நாள்களும் திறக்கப்படும்
8 A.M 8 P.M

தளபாட அமோக மலிவு விற்பனை நிலையம்
**204, Brown Road, Jaffna.**
பிறவுண் றோட், மிருகவைத்திய சாலை அருகில்
T.P: 077 491 2805, 077 006 4651, 0777 286 069

இன்று முதல்

## தீபாவளியை முன்னிட்டு மாபெரும் அதி விசேட தள்ளுபடி

வீடு மற்றும் அலுவலக தளபாடங்கள்
40% வரையிலான விலைக்குறைப்புடன்



கண்ணாடி அலுமாரி ~~14750/=~~ 8950/=

Sofa ~~40400/=~~ 32320/= (10 வருட உத்தரவாதம்)

மெத்தை ~~3620/=~~ 2170/= (2 வருட உத்தரவாதம்)

கண்ணாடி சாப்பாட்டு மேசை ~~23560/=~~ 18125/=

மரக்கட்டில் ~~8250/=~~ 5900/=

பிளாஸ்டிக் கதிரை ~~900/=~~ 630/=

TV Stand ~~4280/=~~ 2990/=

230, நாவலர் றோட்
(இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தியடி சந்திக்கும் இடையில்)
(C/16713)(10.6.3) 077 35 83 879, 077 83 14 201

# அறிவித்தல்

HONDA

ஹொண்டா வேர்ல்ட் நிறுவனத்தினர் நேற்று (11.10.2014) நடைபெறவிருந்த மாபெரும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு -2014, 25.10.2014 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

தீபாவளியை முன்னிட்டு யாழ். மாநகரசபை மைதான முன்றலில் 25.10.2014 அன்று மாபெரும் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளதால் அன்றையதினமே அனைவர் முன்னிலையிலும் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

(27.10.2014) திங்கட்கிழமை உதயன் பத்திரிகையில் வெற்றிப்பெற்றவர்களின் விவரங்கள் அறிவிக்கப்படும்.

HONDA WORLD
(AUTHORISED DEALER FOR STAFFORD MOTOR CO. (PVT) LTD.

Main Branch: 214, Stanley, Road, Jaffna. T.P: 021 222 3316 Hot Line: 0770 387 111

Branch: Point Pedro Road, Nelleyadi, T.P: 021 226 4416 Hot Line: 077 0387444

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணத்தின் மூத்த ஊடகவியலாளர்

## ஐயா.சச்சிதானந்தம்

(ஐயாத்துரை சச்சிதானந்தம்) அவர்கள் 10.10.2014 அன்று இயற்கை எய்தினார் என்ற தகவலை வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2014) காலை 9.00 மணிக்கு கண்டுக்குளி, விதானையார் லேன் என்ற முகவரியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொழும்புத்துறை துண்டி மயானத்தில் தகனக்கிரியைகள் நடை பெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அன்னாரின் பிரிவால் துயருறும்: டான் ரிவி ஊடக நண்பர்கள்.**

# மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதி இராசரத்தினம்

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக்வும் கொண்ட திருமதி சரஸ்வதி இராசரத்தினம் நேற்றுமுன்தினம் (10.10.2014) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் (அப்பாண்ணை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம்-பவளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்செனற் கதிர்காமர்- சின்னத் தங்கம் தம்பதியரின் மருமகளும், விஜயரத்தினம், விஜயதேவி (கனடா), விஜயராணி(கனடா), பத்மராணி, பாலசுப்பிரமணியம், விஜயமாலா ஜெயக்குமார் (கனடா), ஜெயந்தி, சுகந்தி ஆகியோரின் அன்பு சகோதரியும், நிரஞ்சனா (கனடா), குமரேசன் (கனடா), தர்மராசா (தர்மா-விவசாய நாற்றுப்பண்ணை உரிமை யாளர்), மதிரஜனி, பத்மரூபி, ஆனந்தரூபி, கனகரூபி, காண்டீபன் ஆகி யோரின் அன்புத் தாயாரும், பரமானந்தம் (கனடா), சந்திராணி (கன்டா), செல்வராணி வரதராஜன் (கோப்பாய் வைத்தியசாலை சிற்றூண்டிச்சாலை உரிமையாளர்) ஆகி யோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகம்மா, இராசம்மா, பொன்னம்மா ஆகி யோரின் பெறாம்க்களும், இரத்தின்ம், நல்லதம்பி, பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளுழ், காலஞ்சென்ற நல்லையா செல்லத்துரையின் மைத்துனியும் காயத்திரி (கனடா), சிவசீலன் (கூனடா), கினேஷ்கரன்(கனடா), நிரோஜினி (கனடா), ஜகீசன் (கனடா), கார்த்திகாயினி (கனடா), ஜெனார்த்தனன் (கனடா), அஜந்தா (கனடா), சுகிர்தன் (அண்ணா தொழிலகம் கொழும்பு), வைஷ்னவி சஜிவன், கோபிகா, நிலக்சன் ஆகியேரரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.10.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
T.P: 071 873 1754

**உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.**

## ஆடு, மாடுகள் விற்பனைக்கு

பெரிய இன ஆடு, மாடுகள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
(52902) கோண்டாவில்
T.P-075 5113457

## நாளை நீங்களும் கனடா செல்லலாம்!!!

கனடாவில் உள்ள **Selkirk College** இல் நீங்கள் விரும்பிய கற்கை நெறியை தொடர்வதற்கான வாய்ப்பு!!!
வெகுவிரைவில் இக் கல்லூரியின் பிரதி நிதிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகைதர உள்ளதால் உங்கள் பதிவுகளை **20/10/2014** முன்னர் INFOTECH COMPUTER EDUCATION ல் பதிவுசெய்யவும்.
(A/L பரீட்சைக்கு தேற்றியோரும் இணையலாம்)
குறிப்பு :- விசா கிடைக்கும் முன்னர் எவ்வித கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது!!! மேலும் கற்கை நெறிமுடிவில் கனடாவில் நிரந்தர உரிமை பெறுவதற்கான வாய்ப்பு!!! இன்றே விரையுங்கள்!!!
மேலதிக விபரங்களுக்கு :-

**#3, Ramanathan Road, Kaladdy Junction, Jaffna. (Near jaffna university , Jaffna)**
**Tel :- 077 1435 595 / 0777 110 862**

## பதவி வெற்றிடங்கள்

சர்வதேச ரீதியாக இயங்கிவரும் நிறுவனங்களுக்கு 15 பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வு ஆரம்பமாகி விட்டன. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு உங்களுக்கான நேரத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

தகமை O/L மற்றும் A/L முன் அனுபவம் அவசியமில்லை.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்பு : 0771908997
0771882507 0770771377

## பாமசிக்கு வேலையாள்

யாழ் நகரில் இயங்கும் பாமசிக்கு நல்ல அனுபவம் உள்ள வேலையாள் தேவை.(ஆண்/பெண்) யாழ் நகரை அண்மித்து வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. **T.P-0777202489**

## German Institute

German, Swiss நாடுகளுக்கான கஜேந்தினி ஆசிரியையின் Deutsch மொழி வகுப்புகள்
அடுத்த வகுப்புக்களுக்கான பதிவுகளை உடனே மேற்கொள்ளவும்

10 Palaly Road, Jaffna (53189)
Mrs. P. Kajenthini T.P: 0771604823

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்களை நிறைவு செய்யும் **MCS** நிறுவனம் பின்வரும் கற்கை நெறிகளை கற்கை நெறிக்கட்டணமின்றி வழங்கவுள்ளது.

## WEB DESIGNING NETWORKING

காலம்:13-18.10.2014 திங்கள் முதல் வெள்ளிவரை பகல் 9 - 2 மணி வரை.
சான்றிதழ்கள் யாவும் மைக்ரோசொப்ற்-USA இனால் வழங்கப்படும்.
முற்பதிவுகளிற்கு Type Free <Name><DoB><District> & send to 772395895

**MCS** இளைஞர் திறன் விருத்தி மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டது.
யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில்

**CIMA-UK,BIT** கொழும்பு பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புக்கான விண்ணப்பமுடிவுதிகதி 19Oct வரை மட்டுமே.

## வீடு/காணி தேவை

கனரக வாகனங்கள் நிறுத்தக்கூடிய நிலப் பரப்பு விஸ்த்தீரணம் கொண்ட காணியும், அலுவலகம் நடத்தக் கூடிய வீடும் வாடகைக்குத் தேவை.
நீண்டகாலக் குத்தகைக்கு விரும்பத்தக்கது.
யாழ் நகரை அண்டி அரியாலை, திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் எதிர்பார்க்கப் படுகிறது.

தொடர்புகளுக்கு : 0718628382 (சி16673)

Travel Insurance
for you and your family



## Air Ticket to all countries / Visa Handling / Holiday Packages

| | |
|---|---|
| COLOMBO/ CHENNAI / COLOMBO | Rs.23,700/= |
| COLOMBO/ LONDON / COLOMBO | Rs.83,000/= |
| COLOMBO/ PARIS / COLOMBO | Rs.94,500/= |
| COLOMBO/ TORONTO / COLOMBO | Rs.130,000/= |
| COLOMBO/ SYDNEY / COLOMBO | Rs.106,000/= |

| | |
|---|---|
| SINGAPORE / COLOMBO / SINGAPORE | Rs.50,999/= |
| PARIS / COLOMBO / PARIS | Rs.89,999/= |
| LONDON / COLOMBO / LONDON | Rs.127,999/= |

AIR TRAVEL PARTNER PRIVATE LIMITED
enhancing your travel experience

A : 33 A 1/1 W.A.Silva Mawatha, Wellawatte, Colombo 06.
W: www.travelpartner.lk E: info@travelpartner.lk T: 0112058600/601

Shanthan: 07654 07654 / Ajanthi: 0776 714862 / Jenita: 0776 720425 / Senthooran: 0776 710703 / Nirthikan: 0777 597667

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.